**Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.**

©

**Published under Rules 280 and 283 of
the Tamil Nadu Legislative Assembly Rules
and printed by the
Director of Stationery and Printing,
Chennai-600 002.**

வெளியீடு: 29-08-2012 Issued: 29-08-2012

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**செவ்வாய்க்கிழமை, ஏப்ரல் 3, 2012—தொகுதி 21—எண் 3**

**Tuesday, 3rd April, 2012—Volume 21—No. 3**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai-600 009**

விலை ரூ. **3.00** **[Price Rs. 3.00**

**3–4–2012**

**உள்ளடக்கம்**


| | | பக்கங்கள் |
|---|---|---|
| **1.** | **வினாக்கள்–விடைகள்—** | |
| | உடுக்குறியிட்ட வினாக்கள் | 173-210 |
| **2.** | **தகவல் கோரல்—** | |
| | உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள் | 211 |
| **3.** | **விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| | வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு மின் கட்டண சலுகை குறித்த முதலமைச்சரின் அறிக்கை | 212-217 |
| **4.** | **தமிழகத்தின் உற்பத்தி மதிப்பு, வளர்ச்சி விகிதம் மற்றும் நிதிப் பற்றாக்குறை குறித்த முதலமைச்சரின் விளக்கம்** | 218-222 |
| **5.** | **நீலகிரி மாவட்டம், பந்தலூர் கிராமத்தில் சத்தியவதி என்ற பெண் மானபங்கப்படுத்தப்பட்டதாக வந்த புகார் குறித்த முதலமைச்சரின் விளக்கம்** | 222-223 |
| **6.** | **வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு மின் கட்டண சலுகை–முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி—** | 223-230 |
| | முனைவர் செ.கு. தமிழரசன் | 223-225 |
| | மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 224 |
| | மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 224-225<br>229-230 |
| | திரு. ரா. சரத்குமார் | 225-227 |
| | செல்வி கே. பாலபாரதி | 227,228 |
| | மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 228 |
| | மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 228-229 |

| | பக்கங்கள் |
|---|---|
| **7. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்**—தொடர்ச்சி | 230-319 |
| முனைவர் செ.கு. தமிழரசன் | 230-242 |
| *மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி | 235-237,279 313-315 |
| *மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி | 238-241,293 294,306 |
| *மாண்புமிகு திருமதி பா. வளர்மதி | 242-243 |
| திரு. ரா. சரத்குமார் | 243-254 291-292 |
| *டாக்டர் க. கிருஷ்ணசாமி | 254-262 |
| *மாண்புமிகு திரு. பி. தங்கமணி | 256-257 309-310 |
| மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன் | 258,304 |
| மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன் | 260 |
| மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா | 260-261, 272-275, 282-283, 299-301, 309 |
| *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா | 262-272, 274-276 |
| *மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி | 264-265, 297-298, 311-312 |
| மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான் | 267 |
| மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் | 269,285-287 291-292 298-299 |





| | பக்கங்கள் |
|---|---|
| **7. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்**—தொடர்ச்சி | |
| மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம் | 270,273, 287-289 |
| *மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன் | 272,296-297, 307 |
| *மாண்புமிகு திரு. பி. பழனியப்பன் | 273,281 |
| திரு. அ. கணேஷ்குமார் | 277-278, 280-285,293 |
| செல்வி கே. பாலபாரதி | 283 |
| *மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய் | 284 |
| *திரு. அர. சக்கரபாணி | 290 |
| திரு. எஸ். ஜாண் ஜேக்கப் | 294-297, 299-300 |
| திரு. எம். ஆறுமுகம் | 301-313, 315-316 |
| மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம் | 308 |
| **8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** | 316-319 |

# தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## திருவள்ளுவர் ஆண்டு 2043, பங்குனி 21

## 2012 ஏப்ரல் 3, செவ்வாய்க்கிழமை

*சென்னை, புனித ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. டி. ஜெயக்குமார்** *அவர்கள் தலைமையில் காலை 10-00 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

"இயல்புளிக் கோல்ஓச்சும் மன்னவன் நாட்ட
பெயலும் விளையுளும் தொக்கு."

நீதி நெறிமுறைப்படி நல்லாட்சி நடத்தும் அரசருடைய நாட்டில் பருவ மழையும், குறையாத விளைச்சலும் ஒருசேர நிறைந்திருக்கும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா வரிசை எண் 31, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

**31—**

### துணை மின் நிலையங்கள்

***3240—திரு. க. மனோகரன்:**

*மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருப்போரூர் தொகுதியிலுள்ள கரும்பாக்கம், மேலக்கோட்டையூர் ஆகிய பகுதிகளில் துணை மின் நிலையங்கள் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன், மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம். (1) திருப்போரூர் தொகுதி, கரும்பாக்கம் ஊராட்சியில் உள்ள விரால்பாக்கம் கிராமத்தில் ஒரு 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க 12-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. இத்துணை மின் நிலையம் அமைப்பதற்கு நிலம் கண்டறியப்பட்டு வருகிறது. நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும்.

(2) மேல்கோட்டையூர் அருகில் உள்ள நல்லம்பாக்கம் (கண்டிகை) கிராமத்தில் ஒரு 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையம் அமைக்க 12-வது ஐந்தாண்டு திட்டக் காலத்தில் உத்தேசிக்கப்பட்டுள்ளது. துணை மின் நிலையம் அமைக்கத் தேவையான நிலம் யூனிடெக் என்ற கட்டுமான நிறுவனத்திடமிருந்து கையகப்படுத்தப்பட்டுள்ளது. விரைவில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, துணை மின் நிலையம் அமைக்கும் பணிகள் துவங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. மனோகரன் அவர்கள்.

**திரு. க. மனோகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், தங்கத் தாரகை, அள்ளி அள்ளிக் கொடுக்கின்ற தமிழ்நாடு முதலமைச்சர் அம்மாவுடைய அரசில் திருப்போரூர் தொகுதியில், கரும்பாக்கத்திலும், மேலக்கோட்டையூர் பகுதியிலும் துணை மின் நிலையங்கள் அமைத்துத் தருவதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கூறியதற்கு என் நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. குமரகுரு அவர்கள்.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தை இந்தியாவிலேயே முதன்மை மாநிலமாக ஆக்க பாடுபட்டுக்கொண்டிருக்கின்ற தமிழக முதல்வர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். உளுந்தூர்பேட்டை தொகுதி, எலவனாசூர்கோட்டையைச் சுற்றி கிட்டத்தட்ட 50 கிராமங்கள்



2012 ஏப்ரல் 3]

இருக்கின்றன. அந்தப் பகுதியிலே கிட்டத்தட்ட 250 மின் மாற்றிகள் இருக்கின்றன. அந்தப் பகுதிக்கு இப்பொழுது தியாகதுருகம் துணை மின் நிலையத்திலிருந்துதான் மின்சாரம் வந்துகொண்டிருக்கிறது. அங்கே குறைந்த மின் அழுத்தத்தின் காரணத்தினால், அடிக்கடி மின் மாற்றிகள் பழுதடைந்து கொண்டிருக்கின்றன. அதனால், விவசாயிகளும், பொதுமக்களும் பாதிக்கப்பட்டிருக்கின்றார்கள். ஆகவே, எலவனாசூர்கோட்டை பகுதியிலே 110/22 கே.வி. திறன் கொண்ட புதிய துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள் மூலமாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்ட அந்தப் பகுதியிலே மின் பளுவினுடைய தேவையைக் கணக்கிட்டு, அங்கே தேவை ஏற்படின், அந்த இடத்திலே புதிய துணை மின் நிலையம் அமைப்பது குறித்து அரசு உரிய ஆய்வுகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தப் பகுதியிலே அடிக்கடி மின் மாற்றிகள் பழுதடைந்து விவசாயிகள் பாதிக்கப்படுவதாகச் சொன்னார்கள். எந்தெந்த இடங்களிலே மின்மாற்றிகள் பழுதடைந்திருக்கின்றனவோ, அந்தப் பகுதிகளிலே உடனடியாக அந்த மின் மாற்றிகளைப் பழுது நீக்கி அமைப்பதற்கும், பழுது நீக்க முடியாத அளவிற்கு பாதிக்கப்பட்டுள்ள மின் மாற்றிகளுக்குப் பதிலாக புதிய மின் மாற்றிகள் அமைப்பதற்கும் அரசு உரிய நடவடிக்கைகளை எடுத்து வருகிறது என்பதை அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.

அதோடு, அவருக்கு அன்போடு என் வேண்டுகோளையும் தெரிவித்துக்கொள்கின்றேன். மின் மாற்றிகள் அடிக்கடி பழுதடைவதற்கு மூலகாரணமே விவசாயத்திற்குக் கொடுக்கின்ற மும்முனை மின்சாரத்திலே பயன்படுத்துகின்ற நேரத்திற்கு மேலாகவும், பல விவசாயிகள் ஒரு முனை மின்சாரம் வருகின்றபொழுதும், அந்த transformer-லே capacitor என்ற கருவியை அவர்களே பொருத்தி, அதன்மூலம் மின்சாரத்தை உறிஞ்சி விடுவதால், ஒரே நேரத்தில் அந்த மின் பளு தாங்க முடியாமல், கூடுதல் மின் பளுவின் காரணமாக, பல இடங்களிலே அந்த transformers அடிக்கடி பழுதடைகின்றன. ஆகவே, இப்படிப்பட்ட

[2012 ஏப்ரல் 3

தவறுக்கான காரணம் விவசாயிகள் என்பதால் அவர்கள்மீது கடுமையான நடவடிக்கையும் எடுக்க முடியவில்லை.

அவர்களுக்கு எங்களது வேண்டுகோளைத்தான் அங்கே வைக்க முடிகிறது. ஆகவே மும்முனை மின்சாரம் அனுமதிக்கப்பட்ட நேரத்திலே மட்டும் அதைப் பயன்படுத்தினால், அந்த மின் மாற்றிகளுடைய ஆயுள் நிச்சயமாகக் கூடும், அடிக்கடி இந்த நிலை ஏற்படாது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதற்கும் நமது விவசாயிகள் ஒத்துழைப்புத் தரவேண்டும் என்பதை நான் அன்போடு கேட்டு, அதற்கு நமது சட்டமன்ற உறுப்பினர்களும் துணை புரிய வேண்டும் என்று அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

*முற்பகல் 10–05*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. உலகநாதன் அவர்கள்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருத்துறைப்பூண்டி தொகுதியில் கோட்டூர் ஊராட்சியில் கோட்டூரைச் சுற்றி இருக்கக்கூடிய பகுதிகள் கிராமப் பகுதியாகவும், அங்கே மின் அழுத்தம் குறைவின் காரணமாக அந்தப் பகுதிகளில் துணை மின் நிலையம் அமைப்பதற்கான முயற்சிகள் மேற்கொண்டு, வருவாய்த் துறையும் நில ஆர்ஜிதம் செய்வதற்கான முயற்சிகளையெல்லாம் எடுத்தார்கள். அந்த இடம் ஸ்ரீ தேனாம்பிகா திருக்கோயிலுக்குச் சொந்தமான இடம் என்ற காரணத்தினாலே அது நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதி பொதுமக்களின் நலன் கருதி கோட்டூர் ஊராட்சியில், கோட்டூர் பகுதியில் ஒரு 110 கே.வி. துணை மின் நிலையம் அமைக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கோட்டூர் பகுதியிலே புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்குத் தேவையான நிலம் அங்கே கண்டறிவதற்கு நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு இருக்கிறது. கோயில் நிலம் என்பதால், அங்கு நிலம் கையகப்படுத்துவதிலே கால தாமதம் ஏற்படுகிறது என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள்



2012 ஏப்ரல் 3]

சொல்லியிருக்கின்றார்கள். கோயில் நிலங்களாக இருந்தால் இந்து சமய அறநிலைய ஆட்சித் துறையிடமிருந்து அதற்கு வேண்டிய நிவாரணங்களை, மாற்று இடங்களோ அல்லது அதற்கு வேண்டிய மதிப்பீட்டுத் தொகையையோ வாரியத்தின் மூலமாக வழங்கி அதற்குரிய நிலம் கையகப்படுத்துகின்ற நடவடிக்கைகளை அரசு விரைவுபடுத்தும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா திரு. ப. மோகன் அவர்கள்.

**திரு. ப. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்தில் துணை மின் நிலையம் அமைத்திடுவதற்கு நிலம் கையகப்படுத்தி தயார் நிலையிலே உள்ளது. அதற்கு வருவாய்த் துறையும் அனுமதியளித்து இருக்கிறது. எனவே, சங்கராபுரத்தில் துணை மின் நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்கராபுரத்தில் ஒரு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நிருவாக ஒப்புதல் வழங்கப்பட்டு, அந்த நிலம் கையகப்படுத்துகின்ற பணியும் இப்பொழுது நடைபெற்று வருகிறது. மாண்புமிகு அரசு தலைமைக் கொறடா அவர்கள், நிலம் கையகப்படுத்துகின்ற பணிகளும் இப்பொழுது முடிவடையும் தருவாயில் இருக்கிறது என்று சொல்லியிருக்கின்றார். அந்த நிலம் முறையாக மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் இருந்து தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு ஒப்படைக்கப்பட்டவுடன் அங்கு புதிய துணை மின் நிலையம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு விரைவாக மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என்.வி. காமராஜ் அவர்கள்.

**திரு. என்.வி. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதய தெய்வம் புரட்சித் தலைவி, தமிழக முதலமைச்சர் மாண்புமிகு அம்மா அவர்களை வணங்குகின்றேன். வேதாரண்யம்

[2012 ஏப்ரல் 3

தொகுதி தமிழகத்தில் ஒரு கடைக்கோடிப் பகுதியாக இருக்கின்ற காரணத்தினால் குறைந்த அழுத்தம் ஏற்பட்டு அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. ஆகவே 33 கிலோ வோல்ட் மின் அழுத்தமுள்ள அந்த மின் நிலையத்தை 110 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாக அமைத்துத் தருமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 33/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையத்தை, 110/11 கிலோ வோல்ட் துணை மின் நிலையமாகத் தரம் உயர்த்த வேண்டும் என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் விண்ணப்பித்து இருக்கிறார். அவர்களுடைய கோரிக்கையை அரசு அதனுடைய தேவைக்கு ஏற்ப, அது குறித்து உரிய ஆய்வுகள் செய்து, தேவை ஏற்படின் நிதிநிலைக்கேற்ப அந்தப் பணிகள் மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் தொடர்ந்து மின்வெட்டு ஏற்பட்டாலும், எங்களது திண்டுக்கல் மாவட்ட மதிப்பிற்குரிய மாண்புமிகு அமைச்சர் அவர்கள், மின் துறை சம்பந்தப்பட்ட கேள்விகளில் அதற்கான பதில் அளிப்பதில் எந்த வெட்டையும் ஏற்படுத்தாமல் தொடர்ந்து வழங்குவது மகிழ்ச்சியளிப்பதாக இருக்கிறது.

புதிய மின் கட்டண உயர்வு எல்லாம் வந்து கொண்டிருக்கக்கூடிய இந்த நேரத்தில் மின் மீட்டர்கள் எண்ணிக்கையில் குறைந்து, உற்பத்தி குறைந்து தட்டுப்பாடு ஏற்பட்டு இருக்கிறது. இந்த மின் மீட்டர்கள் ஏன் குறைந்து கொண்டு இருக்கிறது? அதைச் சரி செய்வதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10–10*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நானே விளக்கம் சொல்ல வேண்டும் என்று நினைத்திருந்தேன், கேள்வியைக் கேட்டுவிட்டார்கள். அதற்காக அவர்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மீட்டர்கள் வாங்குவதில் டெண்டர் போடப்பட்டு முறையாக அங்கே பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆனால் ஒரு நிறுவனம் உயர் நீதிமன்றத்திற்குச் சென்று இந்த டெண்டர் பணிகளில் சில பிரச்சினைகளை எழுப்பி, வழக்கு தொடுத்ததால்தான் மீட்டர்கள் வாங்க முடியாத நிலை. நீதிமன்ற நடவடிக்கைகளால் காலதாமதம் ஏற்பட்டு விட்டது. நீதிமன்றத்திலே அந்தப் பிரச்சினைஎல்லாம் இப்பொழுதுதான் முறைப்படி முடிந்திருக்கின்றன. மிக விரைவிலேயே மீண்டும் மீட்டர்கள் கொள்முதல் செய்வதற்கு, சட்டச் சிக்கல்கள் எல்லாம் இன்றைக்கு முறையாகக் கையாளப்பட்டு, தடையெல்லாம் நீக்கி புதியதாக மீட்டர்கள் வாங்குவதற்கு வேண்டிய நடவடிக்கைகள் இப்போது எடுக்கப்பட்டு இருக்கின்றன. இன்னும் ஓரிரு வாரங்களுக்குள் மீட்டர்கள் பற்றாக்குறை நீங்கி நிச்சயமாக அனைவருக்கும், தேவையான அத்தனை இடங்களுக்கும் வழங்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொ——ள்கிறேன். நீதிமன்ற குறுக்கீடுதான் காரணமே தவிர அரசு நிருவாகம் காரணம் அல்ல என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அன்போடு தெரிவித்த மாண்புமிகு அமைச்சருக்கு நன்றி.

வினா வரிசை எண் 32, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா, மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**32—**

## பாதாளச் சாக்கடைத் திட்டம்

***1680—திரு. டி.ஆர்.பி. ராஜா:**

மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மன்னார்குடியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தைச் செயல்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி, நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள் அனுமதியுடன் திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) ஆம். மன்னார்குடி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தால் விரிவான திட்ட அறிக்கை ரூபாய் 96.25 கோடி மதிப்பீட்டில் தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கான நிதி ஆதாரம் இறுதி செய்யப்பட்ட பின்னர் இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பாதாளச் சாக்கடைத் திட்டம் குறித்து நிறைய மாண்புமிகு உறுப்பினர்கள் கையை உயர்த்தியிருக்கின்றார்கள். எனவே கேட்கின்ற உறுப்பினர்கள் சுருக்கமாகக் கேள்வியைக் கேட்டால் அனைவருக்கும் வாய்ப்பு அளிக்கப்படும். மாண்புமிகு உறுப்பினர் திரு. டி.ஆர்.பி. ராஜா அவர்கள்.

**திரு. டி.ஆர்.பி. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் மிகப் பழமையான, புகழ்பெற்ற நகராட்சியான மன்னார்குடியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கடைசியாக 1975 ஆம் ஆண்டில் கொண்டு வரப்பட்டது. அப்போது ஒரே ஒரு வீதியில்தான் கொண்டு வரப்பட்டது என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அறிவார்கள் என்று நினைக்கிறேன். இதைத் தொடர்ந்து புதிய நவீன பாதாளச் சாக்கடைத் திட்டத்தை மன்னார்குடியில் எப்பொழுது அமல்படுத்துவார்கள் என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1975–ல் கொண்டுவரப்பட்ட பாதாளச் சாக்கடைத் திட்டம் சரியாக 6 கி.மீ. தான் போடப்பட்டது. அந்த 6 கி.மீ. போடப்பட்டாலும்கூட அது முறையாகப் பயன்படுத்தமுடியாத நிலை இருந்துகொண்டிருக்கிறது. கடந்த 2005–ல் மீண்டும் மன்னார்குடி நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு





வர வேண்டும் என்பதற்காக அப்போது திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டு 22 கோடி ரூபாயில் அந்தப் பணியை மேற்கொள்ள முயற்சி செய்தபோது கடந்த ஆட்சியில் மத்திய அரசின் வாயிலாகச் சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின் வாயிலாக இந்த நிதியைப் பெறுவதற்காக மத்திய அரசை அணுகியபோது, மத்திய அரசு அதற்கு நிதி கொடுக்காத காரணத்தால் கடந்த 25–1–2011 அன்று இந்தத் திட்டம் கைவிடப்பட்டுவிட்டது. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற எல்லா நகராட்சிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வர வேண்டுமென்று அறிவுறுத்தியதன் காரணமாக, மீண்டும் மன்னார்குடி நகராட்சிப் பகுதியை ஆய்வு செய்து 3 பகுதிகளாகப் பிரித்து அதற்கு 96.25 கோடி ரூபாய் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கிறது. அந்த நிதி ஆதாரத்தைத் தேடிய பின்பு உடனடியாக ஒப்பந்தக்காரர்களிடத்தில் கொடுத்து ஒப்பந்தம் முடிவுற்ற பின்பு இந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். சாமி அவர்கள்.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய மேலூர் தொகுதியில் மேலூர் நகராட்சிக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நல்ல அறிவிப்புகளைத் தந்துள்ளார்கள். மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் எல்லா நகராட்சிகளுக்கும் நம்முடைய மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்றச் சொல்லியிருக்கிறார்கள்; மகிழ்ச்சியான செய்தி, அறிவித்த மாண்புமிகு அம்மா அவர்களுக்கு நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 10–15*

கடந்த தி.மு.க.-வினுடைய மைனாரிட்டி ஆட்சிக் காலத்தில், என்னுடைய மேலூர் தொகுதிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அறிவிக்கப்பட்டது. 10 நகராட்சிகளுக்கு அறிவிக்கப்பட்டது. எல்லா இடங்களிலும் நன்றி, நன்றி என்று சொல்லி விளம்பரம் டிஜிட்டல் போர்டுகளிலும், பத்திரிகைகளிலும் கொடுத்தார்கள் அந்தப் பகுதி

[2012 ஏப்ரல் 3

மக்கள். ஆனால் அறிவித்துவிட்டு கடந்த ஐந்தாண்டு காலமாக அந்த பாதாளச் சாக்கடைத் திட்டத்தை தொடாமலே, டெண்டர்கூட வைக்காமல், estimate கூட போடாமல், ஆய்வுப் பணிகளையும் மேற்கொள்ளாமல் விட்டுவிட்டுச் சென்றுவிட்டார்கள் கடந்த தி.மு.க.–வினுடைய மைனாரிட்டி ஆட்சியாளர்கள். நம்முடைய மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே, நம்முடைய மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் இந்த ஆண்டு மேலூர் நகராட்சிக்கு பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நிறைவேற்ற முன்வருவார்களா? காவிரி கூட்டுக் குடிநீர் திட்ட வேலை விரைவாக நடந்துகொண்டிருக்கின்ற இந்த நேரத்திலே, இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டத்தையும் நிறைவேற்றிக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்களுக்கு வசதியாக இருக்கும். ஆகையால், நம்முடைய அமைச்சர் அவர்கள் நல்ல பதிலை அளிப்பாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசின் ஒருங்கிணைந்த சிறு மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உட்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம் என்று JNNURM-லே ஒரு பகுதித் திட்டம் இருக்கிறது. அந்தத் திட்டத்தின் வாயிலாகத்தான் இந்தப் பத்து நகராட்சிகளுக்கும் கடந்த ஆட்சியாளர்கள் மத்திய அரசின் வாயிலாக, ஏனென்று சொன்னால்—மத்திய அரசோடு இணக்கமாக கூட்டணியிலே நம்பிக்கை இருக்கின்ற காரணத்தினால், கடந்த ஆட்சியினுடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதற்கு முயற்சி செய்தார். ஆனால், மத்திய அரசு, அப்படியெல்லாம் கூட்டணி இருந்தாலும்கூட, எங்களால் கொடுக்க முடியாது என்றதால், கொடுக்கப்பட்ட அந்த 10 நகராட்சிகளுக்கும் மத்திய அரசு நிதி ஒதுக்கவில்லை. அப்படி நிதி ஒதுக்காத காரணத்தினால், வேறு இடங்களிலிருந்து நிதி ஆதாரம் திரட்ட முடியாததால், அத்தனை நகராட்சிகளுக்கும் கொண்டுவரப்பட்ட திட்டங்கள் கடந்த ஆட்சியில் கைவிடப்பட்டன. அதில் நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன மேலூர் நகராட்சியும் அடக்கமாகும்.

நம்முடைய குடியாத்தம் நகராட்சியினுடைய மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டபோதுகூட இதே



2012 ஏப்ரல் 3]

கருத்தைத்தான் சொன்னேன். ஆனால், மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் மற்றவர்களை நம்பாமல், தனக்கு வாக்களித்து மிகப் பெரிய வெற்றியைத் தேடித்தந்த மக்களுக்காக (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய சுய சிந்தனையால் மாநிலத்திலே நிதி ஆதாரங்களை ஏற்படுத்தி, அனைத்து மக்களுக்கும் தேவையான அடிப்படை வசதிகளை, உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்த வேண்டும் என்பதற்காக Tamil Nadu Vision 2023 என்ற ஒரு அமைப்பை உருவாக்கி, அந்த அமைப்பின் வாயிலாக இதுபோன்ற திட்டங்களை நிறைவேற்றுவதற்காக நடவடிக்கை எடுத்து வருகிறார். நிச்சயமாக புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆட்சியில், இந்த நான்கு ஆண்டுகால ஆட்சிக்குள், நம்முடைய மேலூர் நகராட்சி உட்பட அனைத்து நகராட்சிகளுக்கும் பாதாளச் சாக்கடைத் திட்டம் வரும் என்ற உறுதியை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள்.

**திரு. க. பாண்டியராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007 ஆம் வருடம் துவங்கப்பட்ட விருதுநகர் நகர பாதாளச் சாக்கடைத் திட்டத்தின் கடைசி 15 சதவிகித வேலை ஒரு வருடமாக ஆமை வேகத்தில் நடந்துகொண்டிருக்கிறது. இதே ஒப்பந்ததாரர்கள்தான் இன்னும் 4 நகரங்களிலும் கான்ட்ராக்ட் எடுத்திருக்கின்றார்கள். அனைத்து இடங்களிலும் இதே நிலைதான் ஏற்பட்டிருப்பதாக அறிகிறோம். இதைத் தயவுசெய்து மாண்புமிகு அமைச்சர் அவர்கள் expedite செய்து, சீக்கிரம் செய்து முடிக்க ஏற்பாடு செய்வாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மற்ற பணிகளிலிருந்து வேறுபட்ட பணியாக இந்த பாதாளச் சாக்கடைத் திட்டம் இருக்கிறது. காரணம், நெருக்கமான நகரப் பகுதிகளில் இந்தப் பணிகளை மேற்கொள்கிறபோது பல்வேறு சங்கடங்களை அந்த ஒப்பந்ததாரர்கள் சந்திக்க வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படுகிறது. அதன் அடிப்படையில்தான், காலதாமதம்

[2012 ஏப்ரல் 3

ஏற்படுகிறது. நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற எல்லா பாதாளச் சாக்கடைத் திட்டங்களையும் விரைவாக முடிக்க வேண்டுமென்று ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது மட்டுமல்லாமல், அந்த ஒப்பந்ததாரர்களுக்குத் தேவையான வசதிகளை உடனடியாக அந்தத் துறையினுடைய அலுவலர்கள் ஏற்படுத்தித் தர வேண்டுமென்று அவர்களுக்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. ஆகவே, அந்தப் பகுதியினுடைய பாதாளச் சாக்கடைத் திட்டம் விரைவாக நடைமுறைப்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்க. தமிழ்ச்செல்வன் அவர்கள்.

**திரு. தங்க. தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள், தமிழ்நாடு முழுவதும் நகராட்சி மற்றும் பேரூராட்சிகளில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டு வருவேன் என்ற செய்தியைச் சொல்லி இருக்கிறார்கள். நன்றி. அதைப்போல, ஆண்டிப்பட்டி சட்டமன்றத் தொகுதியில் இருக்கின்ற டீ எஸ்டேட்டில் இருக்கின்ற ஹைவேவிஸ் பேரூராட்சி, மாண்புமிகு உறுப்பினர் ஆறுமுகம் தொகுதியான வால்பாறை நகராட்சி போன்ற இந்தப் பகுதிகளில் அரசு மூலமாக திட்டங்கள் கொண்டு செல்கின்றபோது தனியாருக்குச் சொந்தமான இடம் என்பதால், அரசுப் பணத்தை அங்கு செலவழிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கிறது. தமிழ்நாடு முழுவதும் இதே நிலைதான். அதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கருத்தில் வைத்து, அந்தப் பகுதிகளிலும் அரசுத் திட்டங்களை செயல்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசில் செய்து தர முன்வருவாரா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பகுதி மலைப்பாங்கான பகுதி என்று ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார். இயற்கையாகவே, ஏற்றத்தாழ்வு உள்ள காரணத்தினால், இந்த சாக்கடை நீர் வேகமாக



2012 ஏப்ரல் 3]

வெளியேறிவிடும். இருந்தாலும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்தை ஏற்றுக்கொண்டு, முறையாக அதைப் பயன்படுத்தி, அந்த சாக்கடை நீர் சாலைகளில் வெளியேறாமல் இருக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். தனியார் நிலங்கள் இருக்கின்றபட்சத்தில் அந்தத் தனியார் நிலங்களைக் கையகப்படுத்தி நடவடிக்கை எடுப்பதற்கு அங்கு இருக்கின்ற சட்டமன்ற உறுப்பினரும், மாண்புமிகு உறுப்பினர் தோழர் திரு. ஆறுமுகம் போன்றவர்களும் உதவ வேண்டும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள்.

**திரு. எஸ்.எஸ். சிவசங்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குன்னம் தொகுதிக்குட்பட்ட இலப்பைகுடிகாடு பேரூராட்சியில் கடந்த ஆட்சிக் காலத்தில் பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்காக நிதி ஒதுக்கப்பட்டது. ஆனால், சுத்திகரிப்பு நிலையம் அமைக்கின்ற அந்த இடம் குறித்து பேரூராட்சிக்கும், அருகில் இருக்கின்ற ஊராட்சிக்கும் இருக்கின்ற எல்லைப் பிரச்சினையின் காரணமாக அந்தப் பணி துவக்கப்பட முடியாமல் நின்றுவிட்டது. அந்த நேரத்தில் அது பக்கத்து தொகுதியில் இருந்தது. இன்று, நான் அந்தத் தொகுதியின் சட்டமன்ற உறுப்பினராக வந்திருக்கின்றேன். அதைத் தீர்த்து வைப்பதற்கு என்னாலான முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறேன். எனவே, அமைச்சர் அவர்கள் அதன்மீது நடவடிக்கை எடுக்க முன்வருவார்களா எனத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவருடைய தொகுதியினுடைய பேரூராட்சியில் கடந்த ஆட்சியிலே நிதி ஒதுக்கப்பட்டாலும்கூட சுத்திகரிப்பு நிலையம் (Treatment Plant) அமைப்பதற்குரிய இடவசதி இல்லாத காரணத்தினால் அது தள்ளி வைக்கப்பட்டது என்று கூறியிருக்கிறார். மாண்புமிகு புரட்சித்

[2012 ஏப்ரல் 3

தலைவி அம்மா அவர்கள் கொண்டுவருகின்ற திட்டங்கள் எல்லாமே முறையாக ஏற்பாடு செய்து, அதை நடைமுறைக்குக் கொண்டு வருவதற்கான செயல்பாடுகளைச் செய்வார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குச் சொல்லிக்கொள்கிறேன். அதன் அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மீது உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன் அவர்கள்.

**திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பாதாளச் சாக்கடைத் திட்டம் என்பது நகராட்சிப் பகுதிகளில் மட்டுமின்றி பெரிய பேரூராட்சிப் பகுதிகளிலும், மக்கள்தொகை அதிகமாக உள்ள பேரூராட்சிப் பகுதிகளிலும், குறிப்பாக என்னுடைய தளி தொகுதியில் தேன்கனிக்கோட்டை மற்றும் கெலமங்கலம் பேரூராட்சிப் பகுதிகளிலும் செயல்படுத்தப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இரண்டு பேரூராட்சிகளும் கிருஷ்ணகிரி மாவட்டத்திற்கு உட்பட்டவை. எந்த நிலையில் இருந்தாலும்கூட யாருக்கும் சுயநலம் இருக்கும். நிச்சயமாக அந்த இரண்டு பேரூராட்சிகளுக்கும் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்து, உடனடியாக பாதாளச் சாக்கடைத் திட்டத்தை நடைமுறைப்படுத்த மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வால்பாறை மலைப் பகுதி என்பது 56 பெரிய எஸ்டேட் நிறுவனங்களைக் கொண்டிருக்கக்கூடிய பகுதியாகும். அந்தப்



2012 ஏப்ரல் 3]

பகுதியில் அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு நலத் திட்டங்களைச் செயல்படுத்துகின்றபொழுது, அது எஸ்டேட்டிற்குச் சொந்தமான இடமாக இருக்கின்ற காரணத்தினாலே பாதாளச் சாக்கடைத் திட்டமோ அல்லது சாலை வசதிகளோ செய்துகொடுப்பதற்கு அங்கு இருக்கக்கூடிய நிருவாகம் அனுமதிப்பதில்லை. எனவே, நமது அரசாங்கம் அறிவிக்கக்கூடிய இந்தத் திட்டங்கள் செயல்படுகின்றபோது, சாலை வசதிகளாக இருந்தாலும் சரி, பாதாளச் சாக்கடைத் திட்டங்களாக இருந்தாலும் சரி, அந்த இடங்களில் அரசு அந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு எஸ்டேட் நிருவாகம் அந்தப் பணிகளைச் செய்வதற்கு அரசிடம் ஒப்புதல் அளிப்பதற்கான முறையில் அரசு நடவடிக்கை மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மிகவும் நியாயமான கோரிக்கையாகும். தனியார் நிலங்கள் உள்ள பகுதிகளில் மக்கள் வசிக்கக்கூடிய சூழ்நிலை வருகின்றபொழுது, அந்தத் தனியார் நிலங்களுக்குச் சொந்தக்காரர்கள் பெருந்தன்மையாக நடந்துகொள்ள வேண்டும். அவ்வாறு நடந்துகொள்ளாத காரணத்தினால், முறையாக அந்த நிலங்களைக் கையகப்படுத்துவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு சட்ட ரீதியாக நடவடிக்கை எடுக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஏ. லாசர் அவர்கள்.

**திரு. ஏ. லாசர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய பெரியகுளம் தொகுதி, பெரியகுளம் நகரத்தில் கடந்த 3 ஆண்டுகளுக்கு முன்பு பாதாளச் சாக்கடைத் திட்டத்திற்கென்று ஒதுக்கப்பட்ட பணம் ஏதோ ஒரு காரணத்தினால் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது. அந்தப் பணத்தைத் தங்களுக்குக் கொடுத்தால் பாதாளச் சாக்கடைப் பணிகளைத் தொடங்குவதற்கு உதவியாக இருக்கும் என்று இப்போது பெரியகுளம் நகர்மன்ற சபையில் மீண்டும் ஒரு தீர்மானம் நிறைவேற்றி கடந்த ஆண்டு

அனுப்பியிருக்கிறார்கள். அதன்மீது நடவடிக்கை எடுத்து நிதி ஒதுக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கையை ஏற்று, விரைவாக பெரியகுளம் நகராட்சியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் கொண்டுவரப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். மறுபடியும் கட்டாயம் சீரமைத்து, விடுபட்ட இடங்களையும் சேர்த்து அந்தத் திட்டம் அமல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி. சோமசுந்தரம் அவர்கள்.

*முற்பகல் 10—25*

**திரு. வி. சோமசுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, காஞ்சிபுரம் நகராட்சியின் எல்லையை விரிவாக்கம் செய்தபோது அந்த நகரத்தையொட்டியுள்ள செவிலிமேடு, தேனம்பாக்கம், ஓரிக்கை, நத்தப்பேட்டை ஆகிய பஞ்சாயத்துகள் சேர்க்கப்பட்டு பெருநகரமாக விளங்கிக்கொண்டிருக்கின்றது. அந்த நகராட்சியோடு புதிதாக இணைக்கப்பட்டுள்ள இந்தப் பகுதிகளுக்கு பாதாளச் சாக்கடைத் திட்டம் அமைத்துத் தர மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு முன்வருமா எனத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே காஞ்சிபுரம் நகராட்சியில் ஒரு பகுதியில் பாதாளச் சாக்கடைத் திட்டம் நிறைவு பெற்றிருக்கிறது. இன்னொரு பகுதியில் இப்பொழுது நடைபெற்றுக்கொண்டு, முடிகின்ற





தருவாயில் இருக்கிறது. மேலும், புதிதாக இணைக்கப்பட்டுள்ள பகுதிகளையும் சேர்த்து அதற்குரிய திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது. அந்தத் திட்ட அறிக்கை தயாரிக்கப்பட்டு நிலுவையிலே இருந்துகொண்டிருக்கிறது. நிதியாதாரத்தின் அடிப்படையில் அந்தப் பணிகளிலும் இத்திட்டம் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ் அவர்கள்.

**திரு. ஜே.ஜி. பிரின்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய குளச்சல் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட குளச்சல் நகராட்சியிலே பாம்பூரி வாய்க்கால் என்ற வாய்க்கால் செல்கிறது. கழிவுநீர், சாக்கடை நீரெல்லாம் அந்தப் பாம்பூரி வாய்க்காலில் கலப்பதால் சுகாதாரக் கேடு ஏற்பட்டிருக்கிறது. இதைப் போக்குவதற்கு இந்தப் பாதாளச் சாக்கடைத் திட்டப் பணியை அவசரமாக நிறைவேற்றித் தருமாறு மாண்புமிகு அமைச்சரிடம் வேண்டுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிறைய நகராட்சிகளில், பேரூராட்சிகளில் இதுபோன்ற பாதாளச் சாக்கடைத் திட்டம் இல்லாத பகுதிகளில் எல்லா கழிவுநீரும் அருகில் இருக்கின்ற ஓடைகளிலோ அல்லது ஆற்றிலோ செல்லக்கூடிய ஓர் அவல நிலைதான் இருந்துகொண்டிருக்கிறது. அதைத் தவிர்த்து, நிலத்தடி நீர் மாசுபடாமல் இருப்பதற்காகத்தான் இந்தத் திட்டத்தை விரைவாகச் செயல்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். அதன் அடிப்படையிலே மாண்புமிகு உறுப்பினருடைய ஊரையும் இதிலே எடுத்துக்கொண்டு முறையாகச் செயல்படுத்தப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். செந்தில்குமார் அவர்கள்.

[2012 ஏப்ரல் 3

**திரு. எஸ். செந்தில்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது திருவெறும்பூர் தொகுதிக்கு உட்பட்ட திருச்சி மாநகராட்சியின் வார்டு எண்கள் 30, 31, 7, 36, 28, 29 போன்ற பகுதிகளிலே பாதாளச் சாக்கடைப் பணிகள் முடிவடைந்த நிலையில் நீண்ட நாட்களாக பயன்பாடின்றி உள்ளது. எனவே, இத்திட்டத்தைச் செயல்படுத்த அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உறுப்பினர் குறிப்பிட்ட பகுதிகளில் ஆய்வு செய்து உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு உரிய செயல்பாடுகள் முடுக்கி விடப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *விடைகள் பாதாளச் சாக்கடைகள்போல நீண்டுகொண்டே போவதால் மாண்புமிகு உறுப்பினர் திரு. மூ.வி. கருப்பையா, மாண்புமிகு உறுப்பினர் திரு. வே. குணசீலன், மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி.பி. பாஸ்கர், மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ரெங்கசாமி ஆகியோர், இந்தப் பாதாளச் சாக்கடை அமைக்கின்ற திட்டம் குறித்து மாண்புமிகு அமைச்சரிடத்திலே எழுதிக்கொடுத்து விடுங்கள். அமைச்சர் நடவடிக்கை எடுப்பார்.*

*வினா வரிசை எண் 33, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**33—**

## முதியோர் இல்லங்கள்

***2990—திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:**

*மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) தமிழகத்தில் முதியோர் இல்லங்களை மாவட்டந்தோறும் உருவாக்கி பராமரிக்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி, சமூக நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் மாநில அரசின் மானியம் பெற்று 28 முதியோர் இல்லங்களும் மத்திய அரசின் மானியம் பெற்று 50 முதியோர் இல்லங்களும், தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள்மூலம் செயல்படுத்தப்பட்டு வருகின்றன. இது தவிர, ஒவ்வொரு வளர்ச்சி வட்டாரத்திலும் முதியோருக்கும், ஆதரவற்ற குழந்தைகளுக்கும் சிறப்பு இல்லங்கள் அடங்கிய ஒருங்கிணைந்த வளாகம் அமைக்கப்படும் என்று மாண்புமிகு தமிழக முதல்வர், புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆணைக்கேற்ப, மாவட்டம் ஒன்றிற்கு இரண்டு ஒருங்கிணைந்த வளாகங்கள் வீதம் 32 மாவட்டங்களில் 64 ஒருங்கிணைந்த சிறப்பு வளாகங்கள் அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று தமிழகத்தில் கல்வியானாலும் சரி, பொருளாதாரமானாலும் சரி, வளர்ந்து வருகின்ற இந்தச் சூழ்நிலையிலே, ஆங்காங்கே தாயும் தந்தையரும் இன்று அனாதைகளாகச் சுற்றித் திரிகின்ற சூழ்நிலை இருக்கிறது. மகனைப்பற்றிக் கேட்டால் அமெரிக்காவில் இருக்கிறான்; மகளைப்பற்றிக் கேட்டால், ரஷ்யாவில் இருக்கிறார் என்று சொன்னாலுங்கூட அவர்கள் பெற்றோரைக் கவனிக்காமல் விடுகின்ற காரணத்தால் அவர்கள் சுற்றித் திரிகின்ற நிலை இருக்கிறது. ஆகவே, அரசு முதியோர் இல்லங்களைக் கட்டித் தருவாரா என்பதை மாண்புமிகு அமைச்சரிடமிருந்து அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

*முற்பகல் 10–30*

**மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிள்ளைகள் அமெரிக்காவிலும், ஆஸ்திரேலியாவிலும் இருந்தாலும்கூட, நான் இருக்கிறேன் தாயாக என்று சொல்லி, தமிழகத்தினுடைய முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா*

[2012 ஏப்ரல் 3

அவர்கள் இந்த முதியோர்களைக் காப்பாற்றுவதற்காகவே ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைக்கப்படும் என்று ஆணையிட்டு சமீபத்திலேதான் அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டு, 23 மாவட்டங்களில் 46 வட்டாரங்களில் மொத்தம் ரூ. 7,33,17,500 செலவில் ஆதரவற்ற முதியோரும் குழந்தைகளும் தங்குவதற்கான ஒருங்கிணைந்த வளாகங்கள் அமைப்பதற்கு கருத்துருக்கள் பெறப்பட்டுள்ளன. மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு விரைவிலே நடவடிக்கை எடுக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி அவர்கள்.

**திரு. மு. திராவிடமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கேண்டிபாண்டியார் கோட்டத்தில் ஓர் ஆரம்பப் பள்ளி இருக்கிறது. அதில் 9 ஆண்டுகளாக சத்துணவு போடவில்லை. அங்கே சத்துணவு போடுவதற்கு அரசு முன்வருமா என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. திராவிடமணி, இது சம்பந்தம் இல்லாத கேள்வி.

**திரு. மு. திராவிடமணி:** சம்பந்தமில்லாத கேள்விதான், தொடர்பு இல்லாத கேள்விதான், இருந்தாலும் . . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 34, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ், மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**34—**

### விவசாய இடுபொருட்கள்

***7922—திரு. சு. பவுன்ராஜ்:**

மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விவசாயிகளுக்கு விவசாய இடுபொருட்கள் வழங்கப்படும் விவரத்தினை விளம்பரம் மூலமாகத் தெரியப்படுத்த அரசு முன்வருமா?



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. செ. தாமோதரன், வேளாண்மைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது திட்டங்கள் பற்றி விவசாயிகள் தெரிந்துகொள்ள துண்டுப் பிரசுரங்கள், சுவரொட்டிகள், சுவர் விளம்பரங்கள், தொழில்நுட்பப் புத்தகங்கள் "அக்ரிஸ்நெட்" (tnagrisnet.tn.gov.in) என்ற இணையதளம், வானொலி மற்றும் தொலைக்காட்சி மூலமாக விளம்பரப்படுத்தப்பட்டு வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. பவுன்ராஜ் அவர்கள்.

**திரு. சு. பவுன்ராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரூ.3,804.96 கோடி நிதி ஒதுக்கீடு செய்து இரண்டாவது பசுமைப் புரட்சி ஏற்படுத்தியிருக்கின்ற இதய தெய்வம், கழகப் பொதுச் செயலாளர், மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களது பாதம் பணிந்து நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய பதிலுரைக்கு நன்றி தெரிவித்துக்கொண்டு அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 35, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**35—**

### சாலை மேம்பாடு

***7020—திரு. பி.எல். சுந்தரம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பவானிசாகர் தொகுதி, பவானிசாகர்–தெங்குமரஹடா சாலையை மேம்படுத்த அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதிக்குட்பட்ட சுஜ்ஜல் குட்டை முதல் தெங்குமரஹடா வரை செல்லும் சாலை 26 கி.மீ. நீளம் கொண்ட மண் சாலையாகும். இச்சாலை தலமலை காப்புக் காடு மற்றும் தலமலை கூடுதல் காப்புக் காடு பகுதியில் அமைந்துள்ளது.

[2012 ஏப்ரல் 3

தற்போது சத்தியமங்கலம் கோட்டத்தின் ஒரு பகுதி வன உயிரின சரணாலயமாக அறிவிக்கப்பட்டுள்ளதாலும், அப்பகுதியில் இச்சாலை அமைந்துள்ளதாலும் சாலையின் மொத்த நீளம் 26 கிலோ மீட்டரில் 14 கிலோ மீட்டர் நீளத்திற்கு காப்புக் காடு அறிவிக்கையில் வழி உரிமம் அனுமதிக்கப்படாததாலும் இதனை மேம்பாடு செய்து தார்ச் சாலையாக அமைக்க வேண்டுமெனில் தேசிய வன உயிரின வாரிய அனுமதி பெற்று, வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன் விதிமுறைக்குட்பட்டு மத்திய அரசின் முன் அனுமதி பெற வேண்டும். இச்சாலையமைக்க வனப் பாதுகாப்புச் சட்டம் 1980–ன் கீழ் உரிய கருத்துரு கிடைக்கப்பெற்றதும், அது பரிசீலனை செய்யப்பட்டு, தேசிய வன உயிரின வாரியத்திற்கு அனுப்பி சாலையை மேம்படுத்த உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.எல். சுந்தரம் அவர்கள்.

**திரு. பி.எல். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே சத்தியமங்கலம் வனப் பகுதி, வன விலங்கு சரணாலயமாக அறிவிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, அரசு அறிவிக்கிற எந்த வளர்ச்சித் திட்டங்களும் முழுமையாக தாளவாடி மலைப் பகுதிக்கு செய்ய முடியாத நிலை இருக்கிறது. பசுமை வீடுகூட இரண்டே வீடுகள் மட்டும்தான் செய்து முடிக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, இதற்கு முந்தைய அரசால்–திராவிட முன்னேற்றக் கழக அரசால், சத்தியமங்கல வனப் பகுதியை புலிகள் சரணாலயமாக அமைக்க வேண்டுமென்று மத்திய அரசுக்குக் கருத்துரு அனுப்பப்பட்டிருக்கிறது. ஆகவே, மீண்டும் தமிழக அரசு அறிவித்திருக்கிற அனைத்துத் திட்டங்களும் நிறைவேற்ற வேண்டுமென்று சொன்னால், மத்திய அரசிடமிருந்து தமிழக அரசு புலிகள் சரணாலயம் அமைக்க வேண்டும் என்ற கருத்துருவை திரும்பப்பெற்றால் மட்டும்தான் தமிழ்நாடு அரசு நிறைவேற்றக்கூடிய வளர்ச்சித் திட்டங்களை முழுமையாக மலைப் பகுதிக்கு எடுத்துச்செல்ல முடியும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.



2012 ஏப்ரல் 3]

முற்பகல் 10–35

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்தியமங்கலம் கோட்டத்தினுடைய ஒரு பகுதி வன உயிரின சரணாலயமாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டுள்ளது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்தச் சாலை, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று விரைவில் அமைக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தங்கம் தென்னரசு அவர்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு பொதுவான கேள்வி. கோடைக் காலத்தினுடைய துவக்கத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மூலக் கேள்விக்குத் தொடர்புடைய கேள்வியாகக் கேளுங்கள்.

**திரு. தங்கம் தென்னரசு:** இல்லை. அதேபொருள்தான். Forest Department–க்குத் தொடர்புடைய கேள்விதான்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பொதுவான கேள்வியைக் கேட்கக்கூடாது.

**திரு. தங்கம் தென்னரசு:** ஒரு நிமிடம். General Question தான். அதற்கு Minister information வைத்திருப்பார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இக்கேள்வியை நான் அனுமதிக்க முடியாது.

**திரு. தங்கம் தென்னரசு:** ஒரு நிமிடம், நான் கேட்பது என்னவென்றால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அப்படி நான் அனுமதிக்க முடியாது.

**திரு. தங்கம் தென்னரசு:** கேள்வியைக் கேட்ட பிறகுகூட, அது சரியில்லையென்றால் நீங்கள் அடுத்த கேள்விக்குச் செல்லுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

[2012 ஏப்ரல் 3

**திரு. தங்கம் தென்னரசு:** அதாவது கோடைக் காலத்தினுடைய துவக்கத்திலே கடும் வறட்சி தமிழகத்தில் இருக்கக்கூடிய பல்வேறு வனப் பகுதிகளிலே நிலவி வருகிறது. குறிப்பாக, இந்த மூலக் கேள்வியிலே குறிப்பிடப்பட்டிருக்கக்கூடிய தெங்குமரஹடா வனப் பகுதி, மோயார் வனப் பகுதி, நீலகிரி வனப் பகுதியிலே இந்த வறட்சியின் காரணமாக வன விலங்குகள் இடம் பெயர்ந்து, குடிநீருக்காகச் செல்கிறபோது பல வன விலங்குகள் உயிரிழக்கக்கூடிய நிலைமை ஏற்பட்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட ஒரே நாளிலே 3 யானைகள் உயிரிழந்ததாக தொலைக்காட்சியிலே செய்திகளைப் பார்க்க நேர்ந்தது. ஆக, இயற்கை ஆர்வலர்கள் என்ன தெரிவிக்கிறார்கள் என்றால்— வனப் பகுதிகளிலே இந்த, கோடைக் காலங்களிலே குடிநீர்த் தொட்டிகளை அமைத்து வன விலங்குகள் குடிநீர் அருந்துவதற்கான ஏற்பாடுகளை, அதாவது செக் டாம் வசதியை அமைத்துத் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போலகுட்டைகள் அமைக்கக்கூடிய பணிகளும் ஏற்கெனவே நடைபெற்றிருக்கின்றன. எனவே, இந்த ஆண்டும் கோடைக்கால வறட்சியிலேயிருந்து வன விலங்குகளைப் பாதுகாப்பதற்காக இந்த அரசு அத்தகைய குடிநீர்த் தொட்டிகள்— செக் டாம்களை அங்கே அமைத்துத் தருமா என்பதை நான் தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவுரையின்படி கோடைக் காலத்தில் வன விலங்குகளுடைய குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக வன விலங்குகள் வசிக்கின்ற பகுதிகளிலே ஆங்காங்கே நீர்த் தேக்கங்கள், குடிநீர்த் தொட்டிகள் அமைப்பதற்கு ஆணையிட்டு அதை அமைத்துள்ளார்கள். கடந்த வாரம்கூட திருப்பூரிலே மான்களுக்கான அந்தக் குடிநீர்ப் பிரச்சினையைத் தீர்ப்பதற்காக அங்கே 3 நீர்த்தேக்கங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதைப்போல தேவையறிந்து அதற்கேற்ப அந்த நீர்த்தேக்கங்கள் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி த. இந்திராகாந்தி அவர்கள்.

**திருமதி த. இந்திராகாந்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தின் ஒப்பற்ற முதல்வர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகின்றேன். எனது துறையூர் தொகுதிக்குட்பட்ட பச்சைமலையில் பழங்குடியினர் மக்கள் வாழுகின்ற பகுதியில் ஏரிக்காடு முதல் குண்டூர் சாலை வரை வனத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ளது. அந்தப் பகுதிவாழ் மக்களின் பயன்பாட்டிற்காக மிகவும் மோசமான நிலையில் உள்ள அந்த மண் சாலையை தார்ச் சாலையாக அமைத்துக் கொடுக்க மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையால் அங்கீகரிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டும்தான் சாலைகளை உடனடியாக அமைக்க முடியும். மற்றபடி சாலைகள் அமைக்க மாநில அரசுக்கு ஒரு எக்டேருக்குக் குறைவாகக்கூட நிலம் வழங்க அதிகாரம் இல்லை. ஆகையால், வன நிலங்கள் தேவைப்படும் அரசுத் துறைகள் முறையான படிவங்களிலே பூர்த்தி செய்து, தேவைப்படும் வன நிலங்களுக்கு அதிகமாக இரண்டு மடங்கு நிலங்களை வனத் துறைக்கு அளிக்கும் நிபந்தனையைப் பூர்த்தி செய்து, விண்ணப்பிக்கும்பட்சத்தில் மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று சாலை அமைத்துக் கொடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ர. சுபா அவர்கள்.

**திருமதி ர. சுபா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது கெங்கவல்லி தொகுதிக்குட்பட்ட பச்சைமலை ஊராட்சியில் வெங்குமுடி, மாயம்பாடி, சின்னநாகூர், பெரியநாகூர், மேல்வஞ்சரை, கீழ்வஞ்சரை ஆகிய பகுதிகளில் அந்த பச்சைமலைக்குட்பட்ட 34 குக்கிராமங்கள் உள்ளன. இதனால் துறையூர் செல்ல மாவட்டத்தைச் சுற்றிப் போய் அந்த மக்கள் 3 மணி நேரம் பயணம் செய்கிறார்கள்.

இதுகுறித்து நான் முன்பே அமைச்சரிடத்திலே மனு கொடுத்திருக்கிறேன். கூடமலை ஊராட்சியிலிருந்து மாயம்பாடிக்குச் செல்வதற்கு சாதாரணமாக ஒரு மணி நேரம் ஆகும். தற்போது சுற்றிச் செல்வதனால் 3 மணி நேரம் ஆகிறது. இதனால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் சிரமப்படுகிறார்கள். அந்த மக்களுடைய கோரிக்கையை ஏற்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்தச் சாலையை மேம்படுத்திக் கொடுத்தால் அந்தப் பகுதி மக்கள் மிகவும் பயனடைவார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வனத் துறையால் அனுமதிக்கப்பட்ட வழித்தடங்களில் மட்டும்தான் சாலை அமைப்பதற்கு அனுமதி வழங்க இயலும். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறிய பகுதி அனுமதிக்கப்பட்ட வழிப் பகுதியாக இருந்தால், அரசு சாலை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. வெ. பொன்னுப்பாண்டி அவர்கள்.*

*முற்பகல் 10–40*

**திரு. வெ. பொன்னுப்பாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஆட்சியில் தென் தமிழகத்தின் நீண்டகாலக் கோரிக்கையாக இருந்து வருகின்ற ராஜபாளையம்–தேனி–வருசநாட்டு மலைப் பாதைத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தத் திட்டம் இதுவரை நிறைவேற்றப்படாமல் இருக்கின்றது. சிறிது தூரமே நிறைவேற்றப்படவேண்டிய அந்தத் திட்டத்தை அரசு நிறைவேற்றுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்திருக்கின்றதா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசினுடைய அனுமதியைப் பெற்று அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு.வீ. கருப்பையா அவர்கள்.*

**திரு. மு.வீ. கருப்பையா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் சோழவந்தான் தொகுதிக்குட்பட்ட சால்வார்பட்டி–முடுவார்பட்டி, வைகாசிப்பட்டி முதல் சாத்தியாறு அணை வரையில் மலைப் பிரதேசங்களிலுள்ள சாலைகள் மலைச் சாலைகளாக இருப்பதால் அதைத் தார்ச் சாலைகளாக மாற்றுவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வன நிலங்களை வனப் பயன்பாடின்றி மற்ற பணிகளுக்குப் பயன்படுத்துவதற்கு, ஒரு சில பணிகளுக்கு மட்டும் அதாவது, குடிநீர் குழாய்கள் அமைத்தல், மின்சாரக் கம்பி அமைத்தல், காவல் துறை ஒயர்லெஸ் போன்ற பணிகளுக்கு மட்டும், தமிழக மாநில அரசு ஒரு எக்டேருக்குக் குறைவாக இருந்தால் அனுமதியளிக்கலாம். மற்றபடி, சாலைகள் அமைப்பதற்கு மத்திய அரசினுடைய அனுமதியைப் பெறவேண்டும். அந்த அனுமதியைப் பெற்று அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. பாஸ்கர் அவர்கள்.*

**திரு. அ. பாஸ்கர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தருமபுரி தொகுதி நல்லம்பள்ளி ஒன்றியத்தில் மலையூர்காடு, பரிகம் பகுதியிலிருந்து தருமபுரி செல்வதற்கு இடையில் 3 கிலோ மீட்டர் தூரம் வனத் துறையின் சாலையில் செல்ல வேண்டி இருப்பதால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மத்திய அரசிடம் அனுமதியைப் பெற்று இந்தச் சாலையை மேம்படுத்த முன்வருவார்களா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.*

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. கே.டி. பச்சைமால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உரிய கருத்துரு அனுப்பப்பட்டால், அந்தச் சாலையை அமைப்பதற்குத் தேவைப்படும் நிலத்தைவிட இரண்டு மடங்கு நிலத்தை அந்த உள்ளாட்சி மன்றம் வனத் துறைக்கு அளிப்பதற்கு முன்வந்தால், நிச்சயமாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 36, மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**36—**

**தூர் வாருதல்**

*__2748—திருமதி எஸ். கணிதா சம்பத்:__

மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் ஏரியைத் தூர் வார அரசு ஆவன செய்யுமா?

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம், பொதுப் பணித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

பழமையான மதுராந்தகம் ஏரி தூர் வாரப்படுமா என்ற கேள்வியை மாண்புமிகு உறுப்பினர் எழுப்பியுள்ளார். மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் பொதுப் பணித் துறையினுடைய ஆய்வுக் கூட்டம் நடைபெற்றுக் கொண்டிருந்தபோது, "சில காரியங்கள் முடியாது" என்று செயலாளர் அவர்கள் சொன்னபோது, "பொதுப் பணித் துறையிலே முடியாது என்ற வார்த்தையை நீங்கள் உபயோகப்படுத்தக் கூடாது" என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவிட்டார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அதன்படி, மக்கள் நல அரசாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு மதுராந்தகம் ஏரியைத் தூர் வாரும் கருத்துரு தற்போது ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லாவிட்டாலும், அது வருகின்ற நிதியாண்டிலே பரிசீலிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். கணிதா சம்பத் அவர்கள்.

**திருமதி எஸ். கணிதா சம்பத்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் இதய தெய்வம் தமிழகத்தின் நிரந்தர முதல்வர் அம்மா அவர்களின் பொற்பாதங்களைத் தொட்டு வணங்குகிறேன். என்னுடைய மதுராந்தகம் தொகுதியில் வாழும் மக்கள் விவசாயத்தையே நம்பி வாழ்கின்ற மக்கள். அங்கு விவசாயம் செய்கின்ற நிலம் சுமார் 2,200 ஏக்கர் உள்ளது. மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில், விவசாய மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்திக் கொண்டுபோகும் நம்முடைய அம்மா அவர்களின் அரசில், என் தொகுதி விவசாய மக்களின் நலனைக் கருதி இந்த ஏரியைத் தூர் வாரித் தரும்படி கேட்டுக்கொள்கிறேன். இந்த ஆண்டில் இல்லையென்றாலும், அடுத்தாண்டில் செய்யப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அம்மா அவர்களுக்கும், மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.சி. சந்திரகுமார் அவர்கள்.

**திரு. வி.சி. சந்திரகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய ஈரோடு (மேற்கு) தொகுதியிலும், ஈரோடு (கிழக்கு) தொகுதியிலும் இணைந்து வருகின்ற சூரம்பட்டிவலசு பகுதியிலே இருக்கின்ற அணைக்கட்டு கழிவுநீராலே சூழப்பட்டு, தூர் வாரி சீரமைக்கப்படவேண்டிய கட்டாயத்திலே இருக்கிறது. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதைச் செய்து தர முன்வருவார்களா என்று கேட்டு, அமர்கிறேன்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தப் பணி இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகக் கூற விரும்புகிறேன்.

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு மாண்புமிகு உறுப்பினர்கள் 9 பேர் பேச வேண்டிய சூழ்நிலை உள்ளது. 11–00 மணிக்குக் கேள்வி நேரத்தை முடிக்க வேண்டியிருப்பதால், இதே கேள்வி குறித்து, மாண்புமிகு உறுப்பினர்கள் திருமதி ம. சக்தி, திரு. எம்.கே. அசோக், திரு. தா. மலரவன், முனைவர் கோவி. செழியன், திரு. ர.ம. பாபு முருகவேல், திரு. என். முருகுமாறன் ஆகியோர் தங்களுடைய தொகுதிகளில் ஏரியைத் தூர் வாருவது குறித்து, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுவந்தால் நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள்.

வினா வரிசை எண் 37, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன், மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**37—**

**சுற்றுலாத் தலம்**

*__7668—திரு. கே.பி. நாகராஜன்:__

மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மயிலம் தொகுதியில் உள்ள வீடூர் அணைப் பகுதியைச் சுற்றுலாத் தலமாக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா, சுற்றுலாத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்களது அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மயிலம் தொகுதி, வீடூர் அணையைச் சுற்றுலாத் தலமாகக் கருதி, ஏற்கெனவே அதன் மேம்பாட்டிற்காக மாநில அரசு நிதியுதவித் திட்டத்தின் அடிப்படையில், ரூபாய் 50 இலட்சத்திற்கான திட்ட மதிப்பீடு செய்து, அதிலே சுற்றுலாத் துறையின் பங்காக ரூபாய் 30 இலட்சம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு, அங்கு நிலச் சீரமைப்புடன் பூங்கா அமைத்தல், அமரும் இருக்கைகள் அமைத்தல், குழந்தைகளுக்கான விளையாட்டுக் கருவிகள் அமைத்தல், பூங்காவில் மின் விளக்கு வசதி செய்தல், பூங்காவைச் சுற்றி வேலி அமைத்தல் ஆகிய பணிகள் முடிக்கப்பட்டு ஏற்கெனவே பயன்பாட்டிலே உள்ளன.



2012 ஏப்ரல் 3]

மயிலம் தொகுதி, வீடூர் அணையில் சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகமாக உள்ளது என்ற கருத்துரு மாவட்ட ஆட்சியரிடம் பெறப்படும் சூழ்நிலையில், மேற்கொண்டு மேம்பாட்டுப் பணிகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்வதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு ஆவன செய்யும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

**திரு. கே.பி. நாகராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அழகு என்றால் முருகப்பெருமானைக் குறிக்கும். தமிழகத்தின் முதல்வர் என்றால் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத்தான் குறிக்கும். (மேசையைத் தட்டும் ஒலி)

புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மயிலம் சட்டமன்றப் பேரவைத் தொகுதியில் வீடூர் அணை, சென்னை–திருச்சி தேசிய நெடுஞ்சாலையில் உள்ளது. அங்கே மயில்கள் பூங்காவும், ராமர் பூங்காவும், கடவுள் விநாயகப் பெருமானின் பூங்காவும், நடராஜர் பெருமான் பூங்காவும் இருக்கின்றது. பக்கத்தில் முருகப் பெருமான் கோவிலும் அங்கு இருக்கின்றது. பிரசித்தி பெற்ற திருவக்கரை வக்ர காளியம்மன் கோயிலும் அங்கே இருக்கின்றது. ஆகையினால், அங்கு 3,200 ஹெக்டேர் நிலப்பரப்பிலே நீர்ப் பாசன வசதி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியிலே அந்த வீடூர் அணையைச் சுற்றுலாத் தலமாக அமைத்துத் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாகக் கேட்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி எஸ். கோகுல இந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னபடி, மயில்கள் பூங்கா, நடராஜர் பெருமான் பூங்கா, விநாயகர் பூங்கா போன்ற பகுதிகளில் ஆய்வு செய்யப்பட்டு, சுற்றுலாப் பயணிகள் எவ்வளவு பேர் வருகிறார்கள் என்பது குறித்து

மாவட்ட ஆட்சியரிடம் கருத்துரு பெற்று, சுற்றுலாத் துறை மூலமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அனுமதியைப் பெற்று, அந்தப் பயணிகளுக்கு உரிய அடிப்படை வசதிகள் செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்வதோடு, மாண்புமிகு உறுப்பினர் தெரிவித்ததன் அடிப்படையில், விழுப்புரம் மாவட்டம், திருவக்கரை அருள்மிகு வக்ர காளியம்மன் திருக்கோயில் பகுதியில் சுற்றுலாப் பயணிகளுக்கு அடிப்படை வசதிகள் ஏற்படுத்துவதற்காக மாநில அரசு நிதி உதவித் திட்டத்தில் ரூபாய் 47.15 இலட்சம் நிதி ஒப்பளிப்பு செய்யப்பட்டு, அணுகுச் சாலை, கழிப்பறை வசதிகள், யாத்ரி நிவாஸ் அமைப்பதற்கான நிதி விழுப்புரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டு, பணிகள் முடிக்கப்பட்டு அது ஏற்கெனவே சுற்றுலாப் பயணிகளின் பயன்பாட்டிலே உள்ளது என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.பி. நாகராஜன் அவர்கள்.

**திரு. கே.பி. நாகராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன் அவர்கள்.

முற்பகல் 10–50

**டாக்டர் (திருமதி) புஷ்ப லீலா ஆல்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேசிய சுற்றுலாத் தலமாகிய கன்னியாகுமரியில் முக்கடல் சங்கமப் பகுதியில் அய்யன் திருவள்ளுவருக்கு 133 அடி உயர சிலை தமிழினத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்களால் 2000 ஆம் ஆண்டு அமைக்கப்பட்டது. கடல் உப்புக் காற்றினாலும், மழை மற்றும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், மூலக் கேள்வி மயிலம் தொகுதி பற்றியது. இதற்குத் தனிக் கேள்வி போடவும்.

வினா வரிசை எண் 38, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.



**38—**

## பணிமனை

***6772—திரு. பி.ஆர். மனோகர்:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சோளிங்கர் தொகுதியில் போக்குவரத்துப் பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) அரசுப் போக்குவரத்துக் கழகம், விழுப்புரம் சார்பில் சோளிங்கரில் பணிமனை அமைக்க பாண்டியநல்லூர் கிராமத்தில் 4.00 ஏக்கர் நிலம் தேர்வு செய்யப்பட்டது. மேற்படி நிலத்தை உரிமை மாற்றம் செய்து ஒப்படைக்கக் கோரி வேலூர் மாவட்ட ஆட்சித் தலைவருக்குப் பிரேரணை அனுப்பப்பட்டது. வேலூர் மாவட்ட வருவாய் அலுவலர் மேற்படி சர்வே எண்ணிலுள்ள நிலம் மயானப் புறம்போக்கு என்பதால், அதனை உரிமை மாற்றம் செய்யத் தடை செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவித்ததன் பேரில், மாற்று இடம் கோரி வேலூர் மாவட்ட ஆட்சியருக்கு 10–1–2012 அன்று பிரேரணை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. வருவாய்த் துறையினர் மாற்று இடம் ஒப்படைப்பு செய்த பின்னர், மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவு பெற்று பணிமனை அமைக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர் அவர்கள்.

**திரு. பி.ஆர். மனோகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1991–1996–லே அரசுப் பணிமனை அமைக்க இந்த அரசால் ஏற்பாடு செய்யப்பட்டது. பணிமனை அமைக்க ஏற்பாடு செய்யப்பட்ட இந்த இடத்தில் இதற்கு முன்பு மயானம் இல்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இது தற்போது ஏற்படுத்தப்பட்ட மயானம். இதற்குத் தடையாக இருப்பது யார் என்பதைத் தெரிவிக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வருவாய்த் துறையில் இருக்கின்ற வழிகாட்டுதலில் அந்த இடம் மயான இடம் என்று இருக்கின்றது. எனவே, மாற்று இடம் கோரி மாவட்ட ஆட்சித் தலைவருக்குக் கருத்துரு அனுப்பப்பட்டுள்ளது. இப்பொழுது மாற்று இடம் தேர்வு செய்து வருகிறார்கள். விரைவில் மாற்று இடம் கண்டறியப்பட்டு, சோளிங்கரில் பணிமனை அமைப்பதற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.ஆர். மனோகர் அவர்கள்.

**திரு. பி.ஆர். மனோகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசுப் பணிமனை அமைப்பதற்குத் தனியார் பேருந்து உரிமையாளர்கள் தடையாக இருக்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து 25 இலட்சம் ரூபாய் கொடுப்பதாக நான் ஏற்கெனவே தங்களிடம் கூறியுள்ளேன். எனவே, தயவுகூர்ந்து பணிமனை அமைக்க இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பணிமனைகள் நீண்ட தூரத்தில் இருக்கின்றபொழுது, இரவு நேரத்தில் அந்தப் பணிமனைகளில் பேருந்துகள் நிறுத்தப்பட்டு மீண்டும் இயக்குகையில் கூடுதல் எரிபொருள் செலவினம் ஏற்படுகிறது. இதைக் குறைப்பதற்காக கூடுதலாகப் பணிமனைகளை உருவாக்குகின்றபொழுது எரிபொருள் செலவினம் குறைக்கப்படுவதோடு செலவினங்களும் குறைக்கப்படுகின்றன. பேருந்துகளின் பராமரிப்பும் சிறப்பாக மேற்கொள்வதற்கு வசதியாக இருக்கும் என்று மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் உத்தரவின்பேரில் எந்தெந்த இடங்களுக்கெல்லாம் பணிமனைகள் தேவைப்படுகிறதோ, அந்தந்த இடங்களுக்கெல்லாம் பணிமனை அமைப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. மாண்புமிகு உறுப்பினர்



2012 ஏப்ரல் 3]

அவர்கள் சொல்கின்ற சோளிங்கரில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக பணிமனை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும். உரிய இடம் தேர்வு செய்ய மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு கேட்கப்பட்டுள்ளது. கருத்துரு வந்த பிறகு, நிச்சயமாக மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு சோளிங்கரில் பணிமனை அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. மைக்கேல் ராயப்பன் அவர்கள்.

**திரு. சி. மைக்கேல் ராயப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகம், திருநெல்வேலி கோட்டத்திற்குட்பட்ட திசையன்விளையில் வாடகைக் கட்டடத்தில் செயல்பட்டுவரும் பணிமனைக்குச் சொந்தக் கட்டடம் கட்டித் தருவதற்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசுப் போக்குவரத்துக் கழகத்தின் சார்பில் சொந்தப் பணிமனை அமைக்கும்பொழுது குறைந்தபட்சம் இரண்டு ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. ஒரு பணிமனை அமைக்க வேண்டுமென்றால், குறைந்தபட்சம் ஒரு கோடி ரூபாய் செலவினம் ஏற்படும். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொன்ன இடத்தில் மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு கேட்கப்பட்டு, உரிய இடம் தேர்வு செய்யப்பட்டு, தேவை ஏற்படும்பட்சத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. அன்பழகன் அவர்கள்.

**திரு. க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணம் அரசு விரைவுப் போக்குவரத்துக் கழகம் 1981–ல் 2 பேருந்துகளை வைத்துத் தொடங்கப்பட்டது. இப்பொழுது 42 பேருந்துகளுக்குப் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. 1981 முதல் வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும்

[2012 ஏப்ரல் 3

கும்பகோணம் பணிமனைக்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொந்தக் கட்டடம் கட்டித் தருவார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கும்பகோணத்தைப் பொறுத்தவரை இரண்டு பணிமனைகள் செயல்பட்டு வருகின்றன. ஒன்று, கும்பகோணம் நகர்; இன்னொன்று, கும்பகோணம் புறநகர். சொந்தப் பணிமனை அமைப்பதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்படுமா என மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டிருக்கின்றார்கள். பணிமனை கட்ட நிலம் தேவை. பணிமனை அமைக்க வேண்டுமென்றால் குறைந்தபட்சம் 2 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. இரண்டு ஏக்கர் நிலத்தில் 50 பேருந்துகள் மட்டுமே நிறுத்தக்கூடிய பணிமனை கட்ட முடியும். 100 பேருந்துகள் நிறுத்தவேண்டுமானால் 5 ஏக்கர் நிலம் தேவைப்படுகிறது. ஆக, முதலிலே நிலத்தைக் கோரி மாவட்ட ஆட்சித் தலைவரிடம் கருத்துரு பெறப்பட்டு, அதற்குண்டான நடவடிக்கை எடுக்கப்பட்டு, தேவை ஏற்படும்பட்சத்தில் நிதி நிலையை ஆராய்ந்து மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய அரசு நிச்சயம் நடவடிக்கை மேற்கொள்ளும்.

முற்பகல் 10–55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 39, மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**39—**

## ஓமியோபதி பிரிவு

***5419—திரு. இரா. அண்ணாதுரை:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மதுரை அரசு இராஜாஜி மருத்துவமனையில் ஓமியோபதி பிரிவு துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மதுரை மாவட்டம், மதுரைக்கு அருகில் இருக்கின்ற திருமங்கலத்திலே அரசினர் ஓமியோபதி மருத்துவக் கல்லூரி மருத்துவமனை 50 படுக்கைகளுடன் உள்நோயாளிகள் தங்கி சிகிச்சை பெறக்கூடிய அனைத்து வசதிகளுடன் இயங்கி வருகிறது. இருந்தபோதிலும், மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களின் கனிவான பார்வைக்குக் கொண்டுசெல்லப்பட்டு பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இரா. அண்ணாதுரை அவர்கள்.

**திரு. இரா. அண்ணாதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மதுரை அரசினர் இராஜாஜி மருத்துவமனையில் தினசரி சுமார் 9,000 நோயாளிகள் வந்து சிகிச்சை பெறுகிறார்கள். திருமங்கலம், உசிலம்பட்டி போன்ற இடங்களில் ஓமியோபதி பிரிவு இருந்தாலும், மாவட்டத் தலைநகர் என்ற வகையில் ஓமியோபதி பிரிவு துவக்க வேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களைத் தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மக்கள்தொகையின் அடிப்படையிலும், தேவையின் அடிப்படையிலும் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை மாண்புமிகு அம்மா அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு கனிவுடன் பரிசீலனை செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா வரிசை எண் 40, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**40—**

**விடுதிகள்**

***5509—திரு. மு. ராஜநாயகம்:**

*மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) அறந்தாங்கி, மணமேல்குடி, சுப்பிரமணியபுரம் ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறையின் வாயிலாக மாணவர் மற்றும் மாணவியர் விடுதிகள் அமைக்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான், பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

*(அ) மற்றும் (ஆ) அறந்தாங்கி, மணமேல்குடி மற்றும் சுப்பிரமணியபுரம் ஆகிய இடங்களில் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை சார்பில் தலா ஒரு மாணவர் மற்றும் மாணவியர் விடுதி மாண்புமிகு தமிழக முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்கால ஆட்சியில் சிறப்பாக இயங்கி வருகின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. ராஜநாயகம் அவர்கள்.*

**திரு. மு. ராஜநாயகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தரணி போற்றும் தங்கத் தாரகை மாண்புமிகு தமிழக முதல்வர் அம்மா அவர்களின் மலர்ப் பாதங்களுக்கு கோடானுகோடி நன்றிகளைத் தெரிவித்து அமர்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்–விடைகள் நேரம் முடிவுற்றது. (குறுக்கீடுகள்)*

*[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]*



## 2. தகவல் கோரல்

### உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அனைவரும் உட்காருங்கள். நீங்கள் அறிவிப்புக் கொடுத்திருக்கிறீர்கள். துறையிலிருந்து பதில் வந்தவுடன் எடுத்துக்கொள்ளலாம், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்)* Please sit down. *(குறுக்கீடுகள்) பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது.* Please sit down. *(குறுக்கீடுகள்) அனுமதியில்லை* Please sit down. *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றுவார்கள், தயவுசெய்து உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேரவை விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கேட்டுள்ளார்கள், அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசிய பிறகு நீங்கள் கேளுங்கள். (குறுக்கீடுகள்)* Please sit down. *(குறுக்கீடுகள்)* Please sit down. *(குறுக்கீடுகள்) அனுமதியில்லை நான் எழுந்து நிற்கும்போது நீங்கள் நிற்பது அவை மரபு அல்ல, நடவடிக்கை எடுக்கவேண்டியது இருக்கும். தயவுசெய்து நீங்கள் அமருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு அனுமதி கொடுத்திருக்கிறேன். அவர்கள் பேசிய பிறகு நீங்கள் என்னவென்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேசுவதற்கே இடையூறு செய்தால் சரியாக இருக்காது. அது முறையல்ல.* Please sit down.

*(தேசிய முற்போக்கு திராவிட கழகம், திராவிட முன்னேற்றக் கழகம், இந்திய கம்யூனிஸ்டு கட்சி (மார்க்சிஸ்ட்) மற்றும் பாட்டாளி மக்கள் கட்சி உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

## 3. விதி 110–ன்கீழ் அறிக்கை

### விட்டு மின் பயனீட்டாளர்களுக்கு மின் கட்டண சலுகை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *பேரவை விதி 110–ன்கீழ் அறிக்கை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) நாட்டின் பொருளாதாரம் சரியான பாதையில் பயணிக்கும்வகையில் பொதுநலன் பாதுகாக்கப்படுவதையும், சமூக நலன் உச்ச நிலைக்குக் கொண்டு செல்லப்படுவதையும், இலாபத்தைக் குறிக்கோளாகக் கொள்ளாமல், மக்களுக்கான சேவை நியாயமான விலையில் கிடைக்கச் செய்வதையும் நோக்கமாகக் கொண்டு செயலாற்றுபவைதான் பொதுத் துறை நிறுவனங்கள். இந்த நோக்கத்தை அடிப்படையாகக் கொண்டு தமிழ்நாட்டு மக்களுக்குத் தேவையான மின்சாரத்தைத் தங்குதடையின்றி அளிப்பதற்காக உருவாக்கப்பட்ட நிறுவனம்தான் தமிழ்நாடு மின்சார வாரியம். (மேசையைத் தட்டும் ஒலி)*

*முற்பகல் 11–00*

*எனது முந்தைய ஆட்சிக் காலத்தில், அதாவது 2001 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டு வரையிலான ஆட்சிக் காலத்தில், மின் தட்டுப்பாடு என்ற பேச்சுக்கே இடம் அளிக்காத வகையில்; (மேசையைத் தட்டும் ஒலி) இன்னும் சொல்லப்போனால், உபரி மின்சாரத்தை வெளி மாநிலங்களுக்கு அளிக்கும் வகையில், (மேசையைத் தட்டும் ஒலி) தமிழ்நாடு மின்சார வாரியத்தின் செயல்பாடு நன்றாக இருந்தது. தமிழ்நாட்டிலுள்ள அனல் மின் நிலையங்களான தூத்துக்குடி, மேட்டூர் மற்றும் வடசென்னை அனல் மின் நிலையங்கள் அவற்றின் செம்மையான செயல்பாடுகளுக்காக 2001–2002 முதல் 2005–2006 வரை பல்வேறு விருதுகளைத் தொடர்ச்சியாக பெற்று வந்தன. (மேசையைத் தட்டும் ஒலி) காற்றாலை மின் உற்பத்தியிலும் தமிழ்நாடு முன்னிலை வகித்து வந்தது. இதுமட்டுமல்லாமல், 2,518 மெகா வாட் அளவுக்கு மின் நிறுவுதிறன் அதிகரிக்கப்பட்டது. தமிழ்நாடு மின்சார வாரியத்தின் நிதி நிர்வாகமும் சீராக இருந்தது.*

*ஆனால், முந்தைய மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியில், ஆண்டொன்றுக்குச் சராசரியாக 8,000 கோடி ரூபாய்க்கு மேல்,*



*வருவாய்க்கும் செலவினங்களுக்கும் இடையே நிகர இடைவெளி ஏற்பட்டது. இதன் விளைவாக, 31–3–2012 நிலவரப்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்தின் தொடர் இழப்பு 50,000 கோடி ரூபாயையும்; வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களிடமிருந்து பெற்ற கடன் 45,000 கோடி ரூபாயையும் தாண்டியுள்ளது. இது தவிர, தனியார் மின் உற்பத்தியாளர் மற்றும் இதர ஒப்பந்ததாரர்களுக்கான நிலுவைத் தொகை 11,000 கோடி ரூபாய் அளவிற்கு உள்ளது. சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்றால், தமிழ்நாடு மின்சார வாரியம் அளவுக்கு மீறிய கடன் சுமைக்கு ஆளாகி; வாங்கிய கடனையும் வட்டியையும் திரும்பச் செலுத்துவதற்கே கடன் வாங்க வேண்டிய இக்கட்டான சூழ்நிலையில், அதாவது* debt-trap *நிலையில் உள்ளது. இந்தச் சூழ்நிலையில், மதிப்பீட்டு நிறுவனங்கள் மின்சார வாரியத்தின் மதிப்பைக் குறைத்துவிட்டதால், வெளிச்சந்தையில் இருந்தும் கடன் பெற வழியில்லை. தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கடன் அளிக்கக்கூடாது என பாரத ரிசர்வ் வங்கி, வங்கிகளுக்கு உத்தரவிட்டுள்ளது.*

*இந்தச் சூழ்நிலையில் கடந்த 2011 ஆம் ஆண்டு ஆட்சிப் பொறுப்பினை ஏற்றுக்கொண்ட எனது தலைமையிலான அரசு எடுத்த நடவடிக்கைகளின் காரணமாக, பல ஆண்டு இடைவெளிக்குப் பின் அனல் மின் நிலையங்கள் புதிய சாதனைகளை ஏற்படுத்தும் விதமாக மிகச் செம்மையாக செயல்பட்டு வருகின்றன. இதேபோன்று, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழகத்தின் மின் இழப்பு அதாவது* Transmission and Distribution loss *விகிதமும் குறைக்கப்பட்டுள்ளது. அகில இந்திய சராசரி மின் இழப்பான 27 விழுக்காட்டினை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டின் மின் இழப்பு 18 விழுக்காடு என்ற அளவிலேயே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)*

*நிதி உதவியைப் பொறுத்தவரையில், 2011–2012 ஆம் ஆண்டுக்கான மானியத் தொகையாக 2,058.19 கோடி ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்கியதுடன்; பங்கு மூலதனமாக 4,100 கோடி ரூபாயையும்;* ways and means advance *ஆக 1,455.16 கோடி ரூபாயையும், ஆக மொத்தம் ஒரே ஆண்டில் இது வரை வழங்கப்படாத அளவுக்கு 7,913.45 கோடி ரூபாயை எனது தலைமையிலான அரசு வழங்கியுள்ளது. 2012–2013 ஆம் ஆண்டு வரவு–செலவுத் திட்டத்தில், தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக 3,068.78 கோடி ரூபாயும்; (மேசையைத் தட்டும் ஒலி) புதிய மின் திட்டங்களுக்கான பங்கு மூலதன உதவியாக 1,500 கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.*

இது தவிர, மின்சார சேமிப்பை ஊக்குவிக்கவும்; மின்சாரத்தைக் கொண்டு செல்வதிலும், விநியோகிப்பதிலும் ஏற்படும் இழப்புகளை மேலும் குறைக்கவும்; மின் பகிர்மான கட்டமைப்பை வலுப்படுத்தவும்; மின் திருட்டைக் கட்டுப்படுத்தவும்; சூரிய ஒளி மின் சக்தித் திட்டங்கள்; காற்றாலைத் திட்டங்கள்; பயோமாஸ் மின் திட்டங்கள் ஆகியவற்றை ஊக்குவிக்கவும் பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன.

மாநில அரசால் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டங்களை விரைந்து செயல்பாட்டிற்குக் கொண்டுவரவும், புதிய திட்டங்களை மாநில அரசு மூலமாகவோ அல்லது கூட்டு முயற்சிகள் மூலமாகவோ தொடங்க துரித நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. பாரத மிகுமின் நிறுவனத்துடன் இணைந்து செயல்படுத்துவதாக இருந்த 1,600 மெகா வாட் உடன்குடி உயரழுத்த நிலை அனல் மின் திட்டம் 4 ஆண்டுகளாகத் தொடங்கப்படாத நிலையில் இருந்ததால், அத்திட்டத்தை 8 ஆயிரம் கோடி ரூபாய் மதிப்பீட்டில் மாநில அரசின் திட்டமாகவே செயல்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளோம் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

முற்பகல் 11–05

இதற்கிடையில், உற்பத்திச் செலவு மற்றும் விநியோக வருவாய்க்கு இடையே உள்ள இடைவெளியை ஈடுசெய்யும் வகையில் 9,741 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் ஏற்படும் வகையில், தற்போதுள்ள மின்சாரக் கட்டணத்தை மாற்றக் கோரி தமிழ்நாடு மின்சார வாரியம், கடந்த ஆண்டு நவம்பர் மாதம் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் விண்ணப்பித்திருந்தது. இந்த விண்ணப்பத்தின்மீது நுகர்வோரின் கருத்துகளைக் கோரி சென்னை, கோயம்புத்தூர், திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரை ஆகிய இடங்களில் கருத்துக் கேட்புக் கூட்டங்களையும், மாநில ஆலோசனைக் குழு, அதாவது, State Advisory Committee கூட்டத்தையும் நடத்தி, பல்வேறு தரப்பினரின் கருத்துகளையும், ஆலோசனைகளையும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் பெற்றது.

இதனையடுத்து, மின் கட்டண விகித மாற்றம் குறித்த தனது ஆணையை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் 30–3–2012 அன்று வெளியிட்டது. இதன்படி, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு 7,874 கோடி ரூபாய் கூடுதல் வருவாய் கிடைக்கும்.





இருப்பினும், இந்தக் கட்டண உயர்வில், 1,118.44 கோடி ரூபாயை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மானியமாக வழங்க எனது தலைமையிலான அரசு ஏற்கெனவே ஒப்புதல் அளித்துள்ளது. இதனடிப்படையில், தமிழக அரசு, தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு வழங்க வேண்டிய மொத்த மானியத் தொகை ஆண்டொன்றிற்கு 3,554.16 கோடி ரூபாய் ஆகும்.

தமிழக அரசின் இதுபோன்ற மக்கள் நலம் காக்கும் நடவடிக்கையின்மூலம், ஏழையெளிய மக்கள் அடையும் பயன்களை நான் இங்கே எடுத்துக் கூறக் கடமைப்பட்டிருக்கிறேன்.

1. குடிசைகளுக்கான மின் கட்டணத்தை யூனிட் ஒன்றிக்கு 2 ரூபாய் 50 பைசா என்று கணக்கிடப்பட்டு, மாதம் ஒன்றுக்குக் கட்டணம் 60 ரூபாய் என்றும் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ளது. இதனை தமிழக அரசே முழுமையாக ஏற்றுக்கொள்கிறது. இதன்மூலம், 14 இலட்சம் நுகர்வோர் பயன்பெறுவர். (மேசையைத் தட்டும் ஒலி)

2. விவசாயத்திற்கான மின் கட்டணத்தைக் குதிரைத் திறன் ஒன்றிற்கு ஆண்டொன்றுக்கு 250/– ரூபாயிலிருந்து, 1,750/– ரூபாயாக மாற்றி தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் உத்தரவிட்டுள்ளது. இந்தக் கட்டணம் முழுவதையும் அரசே ஏற்றுக்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி) இதன்மூலம் விவசாயிகள் மின் கட்டணம் ஏதும் செலுத்தாமலேயே மின்சாரத்தைத் தொடர்ந்து பெற்று வருவார்கள்.

3. இரு மாதங்களில் 100 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்குத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையான யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 60 பைசாவில், 1 ரூபாய் 50 பைசாவை தமிழக அரசு மானியமாக அளிக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) என ஏற்கெனவே ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது. எனவே, பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய தொகை யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 10 பைசா மட்டுமே.

4. இதேபோன்று, இரு மாதங்களில் 200 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்குத் தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்த விலையான யூனிட் ஒன்றுக்கு 2 ரூபாய் 80 பைசாவில், 1 ரூபாயை தமிழக அரசு மானியமாக வழங்க (மேசையைத் தட்டும் ஒலி) ஒப்புக்கொண்டுள்ளதால், பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய தொகை யூனிட் ஒன்றுக்கு 1 ரூபாய் 80 பைசா மட்டுமே.

[செல்வி ஜெ ஜெயலலிதா] [2012 ஏப்ரல் 3

5. இரு மாதங்களில் 500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு 201 முதல் 500 யூனிட்டுகளுக்கான மின் கட்டணத்தில், யூனிட் ஒன்றுக்கு 50 காசு மானியத்தை தமிழக அரசு வழங்க ஒப்புக்கொண்டுள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

6. வழிபாட்டுத் தலங்கள், விசைத்தறிகள் ஆகியவற்றிற்கான மானியங்களும் தொடர்ந்து அளிக்கப்படும்.

7. இவையன்றி, 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு அரசு தனியே மானியம் வழங்கவில்லை என்றாலும், மின் உற்பத்திச் செலவைவிட குறைவான கட்டணமே அவர்களுக்கும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

முற்பகல் 11–10

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் அறிவிக்கப்பட்ட இந்தக் கட்டண உயர்விற்குப் பின்னரும், வெளி மாநிலங்களை ஒப்பிடுகையில், தமிழ்நாட்டில் மின் கட்டணம் குறைவாகவே உள்ளது. (மேசையைத் தட்டும் ஒலி)

உதாரணமாக, கர்நாடகாவில் இரண்டு மாதங்களில் 100 யூனிட்கள் வரை உபயோகிப்பவர்கள் யூனிட் ஒன்றிற்கு சராசரியாக 2 ரூபாய் 59 காசும்; ஆந்திராவில் 2 ரூபாய் 3 காசும்; கேரளாவில் 1 ரூபாய் 30 காசும்; மேற்கு வங்காளத்தில் 3 ரூபாய் 55 காசும்; மகாராஷ்டிராவில் 2 ரூபாய் 47 காசும்; குஜராத்தில் 2 ரூபாய் 55 காசும்; உத்தரப்பிரதேசத்தில் 3 ரூபாய் 45 காசும் செலுத்தி வருகிறார்கள். ஆனால், இந்தக் கட்டண மாற்றத்திற்குப் பிறகும் தமிழ்நாட்டில் 100 யூனிட்டுகள் வரை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 10 காசு மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)

இதேபோன்று, இரண்டு மாதங்களில் 200 யூனிட்டுகள் வரை உபயோகிப்பவர்களை ஒப்பிடும்போது; ஆந்திராவில் யூனிட் ஒன்றிற்கு சராசரியாக 2 ரூபாய் 81 காசும்; கர்நாடகாவில் 2 ரூபாய் 92 காசும்; மேற்கு வங்காளத்தில் 4 ரூபாய் 4 காசும்; மகாராஷ்டிராவில் 2 ரூபாய் 47 காசும்; குஜராத்தில் 2 ரூபாய் 85 காசும்; உத்தரப்பிரதேசத்தில் 3 ரூபாய் 45 காசும் செலுத்தி வருகிறார்கள். ஆனால், தமிழகத்தில் புதிய கட்டண விகிதப்படி, 200 யூனிட்டுகள் வரை பயன்படுத்துவோர் செலுத்த வேண்டிய கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 80 காசு மட்டுமே. (மேசையைத் தட்டும் ஒலி)



2012 ஏப்ரல் 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

எனினும், தற்போது அறிவிக்கப்பட்டுள்ள மின் கட்டணங்கள் ஏழை, எளிய, நடுத்தர மக்களுக்குக் கூடுதல் சுமையை ஏற்படுத்துகிறது என்றும், எனவே, கட்டணங்களைக் குறைக்க வேண்டும் என்றும், பொதுமக்களிடமிருந்து கோரிக்கைகள் வரப்பெற்றுள்ளன.

தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் நிர்ணயித்துள்ள கட்டணங்களைக் குறைக்க தமிழக அரசுக்கு எந்தவித அதிகாரமும் இல்லை என்றாலும், ஏழை, எளிய மக்களின் சுமையை மேலும் குறைக்கும்வண்ணம் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய கட்டணங்களைக் குறைக்கவும், அதற்காக தமிழ்நாடு மின்சார வாரியத்திற்குக் கூடுதல் மானியம் வழங்கி, அந்தச் சுமையை தமிழக அரசே ஏற்றுக் கொள்வது எனவும் முடிவு செய்யப்பட்டுள்ளது. (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதன்படி,

1. இரு மாதங்களில் 100 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 10 பைசாவில் இருந்து 1 ரூபாயாக குறைக்கப்படும்.

2. இரு மாதங்களில் 200 யூனிட்டுகள் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு 1 ரூபாய் 80 பைசாவில் இருந்து 1 ரூபாய் 50 பைசாவாக குறைக்கப்படும்.

3. இரு மாதங்களில் 500 யூனிட் வரை உபயோகப்படுத்தும் வீட்டு மின் பயனீட்டாளர்கள் செலுத்த வேண்டிய மின் கட்டணம், முதல் 200 யூனிட்டுகளுக்கு 3 ரூபாயிலிருந்து 2 ரூபாய் என்றும், (மேசையைத் தட்டும் ஒலி) 201 யூனிட் முதல் 500 யூனிட் வரையிலான கட்டணம் 3 ரூபாய் 50 பைசாவில் இருந்து 3 ரூபாய் என்றும் குறைக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

எனது தலைமையிலான அரசின் இந்த மக்கள் நலன் காக்கும் நடவடிக்கைமூலம், 740 கோடி ரூபாய் மானியத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு எனது தலைமையிலான அரசு கூடுதலாக வழங்கும். (மேசையைத் தட்டும் பலத்த ஒலி) இதனையடுத்து, இந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய மானியத் தொகை மிக உயர் அளவான 4,294.16 கோடி ரூபாயாக இருக்கும் என்பதையும், இதன்மூலம் 1 கோடியே 50 இலட்சம் குடும்பங்கள் பயனடையும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11–15*

## 4. தமிழகத்தின் உற்பத்தி மதிப்பு, வளர்ச்சி விகிதம் மற்றும் நிதிப் பற்றாக்குறை குறித்த முதலமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த மூன்று நாட்களில் இந்தச் சட்டமன்றப் பேரவையில் தமிழகத்தின் உற்பத்தி மதிப்பு, வளர்ச்சி விகிதம், நிதிப் பற்றாக்குறை ஆகியவை பற்றி சில கருத்துகள் மாமன்ற உறுப்பினர்களால் எடுத்துக் கூறப்பட்டுள்ளன. அது பற்றிய விளக்கத்தை இங்கே தெரிவிக்க விரும்புகிறேன்.*

*மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் அவர்கள் இந்த அவையில் 29–3–2012 அன்று பேசியபொழுது, 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் தமிழ்நாட்டின் மாநில உற்பத்தி மதிப்பு அதாவது* GSDP, *5,81,635 கோடி ரூபாயை எட்டி, 12.14 சதவீத வளர்ச்சி இருக்கும் எனக் கணக்கிடப்பட்டிருந்ததாகவும்; ஆனால் இந்த நிதிநிலை அறிக்கையில் முன் மதிப்பீடுகளின்படி, அதாவது* Advance Estimates*–ன்படி, 9.39 சதவீதமாக வளர்ச்சி குறைந்துள்ளது என்றும்; இதன்படி பார்த்தால் மொத்த உற்பத்தி மதிப்பு 5,67,270 கோடி ரூபாய் தான் இருக்கும் என்றும்; 14,000 கோடி ரூபாய் உற்பத்தி குறைவிற்குக் காரணம் என்ன என்றும்; குறிப்பாக மின் பற்றாக்குறை காரணமா? கொள்கை குறைபாடா? நிதி மேலாண்மையா என்றெல்லாம் கேள்வி எழுப்பியுள்ளார். மேலும், 2012–2013–ல் மாநில உற்பத்தி மதிப்பு 6,90,542 கோடி ரூபாய் அளவு எட்டும் எனக் குறிப்பிட்டுள்ளது; 22 சதவீதம் வளர்ச்சி பெறும் என்பது அர்த்தம் என்றும்; கடந்த 10 ஆண்டுகளாக, மொத்த உற்பத்தியில் சராசரி வளர்ச்சி 8 முதல் 9 சதவீதமாக இருக்கும்போது எந்த மாயத்தில் இந்த வளர்ச்சி இருக்கும் என்பது புரியவில்லை என்றும் கூறியுள்ளார்.*

*மாண்புமிகு உறுப்பினர் சுட்டிக்காட்டிய விவரம் பட்ஜெட் உரையின் கடைசிப் பக்கத்தில் நிதி மேலாண்மை பொறுப்புடைமைச் சட்டத்தில் மூன்றாண்டு கணிப்புகள் வெளியிட வகுத்துள்ள விதிமுறைப்படியும்; மத்திய அரசின் 13–வது நிதிக் குழுவின் வரையறைகளின் அடிப்படையிலும்; மாநில உற்பத்தி மதிப்பு*



*தற்போதைய விலை அளவு அதாவது* current prices *அடிப்படையிலும், கணக்கிடப்பட்டு வெளியிடப்படும் அட்டவணையாகும். வரவு–செலவுத் திட்ட அறிக்கையின் கடைசிப் பக்கத்தில், 13–வது நிதிக் குழு கணிப்புப்படி, அதாவது* Projections*–படி உள்ள அளவீடுகளை, மூன்றாண்டுகளுக்கு கணித்தும்; சென்ற ஆண்டு இறுதிக் கணக்குகளின் அடிப்படையில், அதாவது,* as per accounts, *நடப்பு ஆண்டு மற்றும் வரும் ஆண்டுக்கான மதிப்பீடுகளும்; திருத்திய மதிப்பீடுகளும் கணக்கிடப்பட்டு குறிப்பிடப்படுவது நடைமுறை. எனவே, தற்போதைய விலை அளவு அதாவது,* current prices *அடிப்படையில், மாநில மொத்த உற்பத்தி மதிப்பு 2011–2012 திருத்த மதிப்பீட்டின்படி 5.82 இலட்சம் கோடி ரூபாய் என்பதையும்; அதேபோல் 2012-2013-ல் உற்பத்தி மதிப்பை 13–வது நிதிக் குழு 6.54 இலட்சம் கோடி ரூபாய் என முதலில் கணித்திருந்தாலும்; 2011–2012 திருத்த மதிப்பீட்டின் மீதான வளர்ச்சி அடிப்படையில் 2012–2013–ல் வரவு–செலவுத் திட்ட மதிப்பீடு 6.90 இலட்சம் கோடி ரூபாய் என்பதையும் தெளிவுபடுத்துகிறேன். இவை அனைத்தும் தற்போதைய விலை அளவு, அதாவது* current prices *அடிப்படையில் கணக்கிடப்படுபவை. 2011–2012 ஆம் ஆண்டின் வளர்ச்சி விகிதம் தற்போதைய விலை அளவு,* current prices*–படி, 16.04 சதவீதம் இருந்தாலும்; நிலையான விலை அளவு, அதாவது* constant prices *அடிப்படையில், முன் மதிப்பீடுகளின்படியான, அதாவது* Advance Estimates*–படியான வளர்ச்சி விகிதம், 9.39 சதவீதம் என்பதை, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் புரிந்துகொள்ள வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். நிலையான விலை, அதாவது* Constant Price *மற்றும் தற்போதைய விலை, அதாவது* Current Price *இரண்டிற்கும் உள்ள வேறுபாடு பண வீக்கம், அதாவது* Inflation *அடிப்படையில்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, தற்போதைய விலை அளவு, அதாவது* current price *அடிப்படையில் கணக்கிடப்படும்* GSDP *புள்ளிவிவரங்களை* constant price *அடிப்படையில் கணக்கிடப்படும் வளர்ச்சி விகிதத்துடன் தொடர்புபடுத்தி 14,000 கோடி ரூபாய் அளவு வளர்ச்சி குறைந்துவிட்டது என்று கூறுவது தொடர்பு இல்லா இரண்டு புள்ளி விவரங்களையும் தொடர்புபடுத்தியதால் ஏற்பட்டுள்ள குழப்பமே.*

*2011–2012 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டில் மாநில மொத்த உற்பத்தி மதிப்பு 5,81,635 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டிருந்தாலும்; 2012–2013–ல் இதன் மதிப்பு, 6,90,542 கோடி ரூபாய் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. தற்போதைய விலை*

அளவில் கணக்கிட்டால் இது 18.72 சதவீதம்தான். மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் குறிப்பிட்டதைப்போல 22 சதவீதம் அல்ல. தற்போதைய பொருளாதார மந்த நிலையிலும் 16.04 சதவீதம் வளர்ச்சியை இந்த ஆண்டு எட்டியுள்ள நிலையில் தற்போதைய விலையின் அடிப்படையில் இந்த 18.72 சதவீதம் என்பது எட்ட முடியாதது அல்ல என்பதைத் தெளிவுபடுத்த விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) புள்ளிவிவரங்களை சரியாகப் புரிந்துகொண்டால் இது தெளிவாகிவிடும்.

முற்பகல் 11–20

வளர்ச்சி குறித்த இறுதிக் கணக்கு புள்ளிவிவரங்கள், மத்திய புள்ளியியல் நிறுவனத்தின் மதிப்பீடுகளின்படிதான் முடிவு செய்யப்படுவதால், இதில் மாநில அரசு எந்த புள்ளிவிவரங்களையும் மாற்றிவிட இயலாது.

கடந்த நிதிநிலை அறிக்கையில் 10 சதவீதத்திற்குக் கூடுதலான வளர்ச்சியை எட்ட இந்த அரசு முயலும் எனக் குறிப்பிட்டுள்ளோம். ஆனால், தற்போதைய முன் மதிப்பீடுகளின்படி 9.39 சதவீதம் எனக் கணக்கிடப்பட்டுள்ளது. இந்த வளர்ச்சிக் குறைவுக்கு நாடு முழுவதும் தற்போதுள்ள பொருளாதார மந்தநிலைதான் காரணம். இந்திய அளவிலும் 2011–2012–க்கான வளர்ச்சி, ஏற்கெனவே கணக்கிடப்பட்ட அளவான 9 சதவீதம் என்பது தற்போதைய கணிப்புப்படி 6.9 சதவீதமாகக் குறைந்துள்ளதைக் கருத்தில்கொள்ளும்போது, இந்த அளவுக்கு தமிழ்நாட்டின் வளர்ச்சி குறையவில்லை என்பது தெளிவாகும். (மேசையைத் தட்டும் ஒலி)

அடுத்து, சென்ற வருட நிதிநிலை அறிக்கையில் மாநிலத்தின் கடனுக்கான வட்டி 7,966 கோடி ரூபாயாக இருந்தது என்றும், இந்த நிதிநிலை அறிக்கையில் செலுத்த வேண்டிய வட்டி கூடுதலாக, அதாவது 9,233 கோடி ரூபாய் என்று உள்ளது என்றும், இது 15 சதவீதம் அதிகம் என்றும், மிகச் சிறிய மாநிலங்களில்கூட இதைவிடக் குறைவாகக் கடன் பெற்றிருப்பதாகவும், இந்தக் கூடுதல் வட்டிக்குக் காரணம் வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து கடன் பெறாமல் இருப்பதும், அரசுமீது முதலீட்டாளர்களுக்கு நம்பிக்கை இல்லாமையால் அரசு கடன் பத்திரங்கள்மூலம் குறைந்த வட்டிக்குக் கடன் பெற இயலவில்லை என்றும் இந்தப் பேரவையிலே குறிப்பிடப்பட்டது.

2010–2011 ஆம் ஆண்டு Revised Estimates–படி செலுத்தப்பட வேண்டிய வட்டி 7,966 கோடி ரூபாயாகும். இந்த நிதிநிலை



அறிக்கையில் இறுதிப் பக்கத்தில் குறிப்பிட்டுள்ள கணக்குகளின்படி, 2010–2011–ல் 7,966 கோடி ரூபாய் என்பது இறுதிக் கணக்குகளின்படி 8,408 கோடி ரூபாய் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். 2011–2012 ஆம் ஆண்டின் கணிப்புகளின்படி 8,411 கோடி ரூபாய் என்று இருந்தாலும், 2011–2012 ஆம் ஆண்டு திருத்த மதிப்பீட்டின்படி செலுத்த வேண்டிய வட்டித் தொகை 9,233 கோடி ரூபாய் என்றும் தெரிவித்துக்கொள்கிறேன். எனவே, 2010–2011–ஐவிட 2011–2012–ல் கூடுதலாகும் வட்டித் தொகை 825 கோடி ரூபாய் மட்டும்தான். அதாவது, வட்டித் தொகைக்கான உயர்வு 9.80 சதவீதம் மட்டுமே என்பதையும், 15 சதவீதம் அல்ல என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஒவ்வொரு ஆண்டும் பெறும் கடன் தொகை உயரும்போது நாம் செலுத்த வேண்டிய வட்டித் தொகையின் அளவும் உயரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். ஆனால், கடன், வருவாய் செலவினங்களுக்காகச் செலவிடப்படுகிறதா அல்லது மூலதனச் செலவினங்களுக்காகச் செலவிடப்படுகிறதா என்பதைத்தான் கவனிக்க வேண்டும்.

நம்மைவிட சிறிய மாநிலங்கள்கூட குறைவான வட்டிக்குக் கடன் பெற்றிருக்கிறது என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. க. பாண்டியராஜன் குறிப்பிட்டிருப்பது சரியானதல்ல. மேலும், உலக வங்கி போன்ற அனைத்து வெளிநாட்டு நிறுவனங்களிலிருந்து தமிழ்நாட்டுக்குக் குறைவான கடன் பெறப்படுகிறது என்பதும் சரியான தகவல் அல்ல. பிற மாநிலங்களைவிடவும், அதிக அளவில் இத்தகைய கடன் உதவி பெறும் மாநிலம் நமது மாநிலமேயாகும். (மேசையைத் தட்டும் ஒலி) இந்தியாவிலேயே உலக வங்கி மற்றும் ஜப்பான் வங்கி, அதாவது JICA ஆகியவற்றில் கடன் பெற்று திட்டங்களைச் செயல்படுத்துவதில் தமிழகமே முன்னிலை வகிக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி) மேலும், பல புதிய திட்டங்களும் செயல்படுத்தப்பட உள்ளன.

முற்பகல் 11–25

மாநிலத்தில் வருவாய்ப் பற்றாக்குறை நீக்கப்பட்டு நிதிப் பற்றாக்குறை கட்டுப்பாட்டில் வைக்கப்பட்டுள்ள ஒரு சில மாநிலங்களின் வரிசையில் தமிழ்நாடு உள்ளதால்தான்; (மேசையைத் தட்டும் ஒலி) நமது நிதி மேலாண்மை சிறப்பாக உள்ளதால்தான்; மற்ற மாநிலங்களைக் காட்டிலும் நமது மாநிலம் வெளியிடும்

உள்ளூர் கடன் பத்திரங்களுக்குக் குறைந்த வட்டி அளவில், அதாவது, தற்போதுகூட 8.92 சதவீதம் வட்டிக்கு மாநில அரசால் கடன் திரட்ட இயலுகிறது. இது பிற மாநிலங்கள் வெளியிடும் கடன் பத்திரத்தின் மீதான வட்டியினைவிடக் குறைவுதான் என்பதையும் இந்தத் தருணத்தில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், மாநில அரசு வெளியிடும் கடன் பத்திரங்களுக்கு, மத்திய அரசின் ஒப்புதல் அவசியம் ஆகும். வெளிச் சந்தையில், அதிக அளவு பணம் இருக்கும்போது, வட்டி வீதம் குறைவாகவே இருக்கும். அந்த சமயத்தில், உடனே கடன் திரட்டுவதற்கான பத்திரங்களை நாம் நினைத்தவுடன் வெளியிட்டுவிட முடியாது. தனது நிதிப் பற்றாக்குறைக்கு வெளிச் சந்தையில் திரட்டப்பட வேண்டிய தொகையினைக் கருத்தில்கொண்டுதான் மத்திய அரசு நமக்கு ஒப்புதலை வழங்குகிறது.

எனது தலைமையிலான அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக அரசு சிறந்த நிதி மேலாண்மைக் கொள்கைகளை எவ்வாறு கடைப்பிடிக்கிறது என்பதும்; வேகமான வளர்ச்சிப் பாதையில் நாம் சென்று கொண்டிருக்கிறோம் என்பதும் எனது இந்த விளக்கங்களால் தெரியவரும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 5. நீலகிரி மாவட்டம்—பந்தலூர் கிராமத்தில் சத்தியவதி என்ற பெண் மானபங்கப்படுத்தப்பட்டதாக வந்த புகார் குறித்த முதலமைச்சரின் விளக்கம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நீலகிரி மாவட்டம், தேவாலா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட பந்தலூர் என்ற கிராமத்தைச் சேர்ந்த 17 வயது பெண் ஒருவர் 14–3–2012 அன்று வீட்டில் தனியாக இருக்கும்போது, ஆட்டோ ஓட்டுனர் ஸ்ரீகாந்த் என்கிற குட்டி என்பவர் வீட்டிற்குள் நுழைந்து, அந்தப் பெண்ணின் கையைப் பிடித்து மானபங்கப்படுத்தியதாக அந்தப் பெண் அன்று மாலை தன் தந்தை சக்திவேல் என்பவரிடம் தெரிவித்ததையடுத்து, சக்திவேல், வசந்தன் என்பவருடன் மேற்படி சம்பவம் தொடர்பாக விசாரிக்கச் சென்றபோது, தகராறு ஏற்பட்டு ஸ்ரீகாந்தின் உறவினரான பிரபு என்பவர் தாக்கப்பட்டு கையில் வெட்டுக் காயம் ஏற்பட்டுள்ளது. இந்தச் சம்பவத்திற்குப் பிறகு கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் சத்தியவதி மானபங்கப்படுத்தப்பட்டதாக தேவாலா காவல் நிலைய குற்ற எண் 193/2012 இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகள் 448, 354 மற்றும் பெண்களுக்கெதிரான வன்கொடுமை சட்டப் பிரிவு 4 ஆகிய பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு ஸ்ரீகாந்த் என்கிற குட்டி கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டார். பிரபு என்பவர் தாக்கப்பட்டது குறித்து தேவாலா காவல் நிலைய குற்ற எண் 194/2012 இந்தியத் தண்டனைச் சட்டப் பிரிவுகளின் 307, 427–படி வழக்கு பதிவு செய்யப்பட்டு, இதில் சம்பந்தப்பட்ட குற்றவாளிகளான சக்திவேல், வசந்தன் இருவரும் கைது செய்யப்பட்டு நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டனர். இந்தச் சம்பவத்தில் சம்பந்தப்பட்ட பெண் மானபங்கப்படுத்தப்பட்டார் என்று அளிக்கப்பட்ட புகாரின் அடிப்படையில் தகுந்த பிரிவுகளின்கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டு குற்றவாளிகள் நீதிமன்றக் காவலுக்கு அனுப்பப்பட்டுள்ளனர் என்பதைத் தெரிவித்துக்கொண்டு அமைகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



## 6. வீட்டு மின் பயனீட்டாளர்களுக்கு மின் கட்டண சலுகை—முதலமைச்சரின் அறிவிப்புக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, போற்றுதலுக்குரிய தமிழ்நாடு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசு ஏழை எளிய, நலிந்த, அடித்தள மக்களின் நலன்களைப் பாதுகாப்பதிலே எப்போதுமே அக்கறை உள்ள அரசு என்கிற அந்த உணர்விற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மகுடம் சேர்த்தாற்போல், அந்த எண்ணங்களுக்குச் சிகரமாய் இன்றைக்கு தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம் அறிவித்திருக்கின்ற மின் கட்டண உயர்வை, ஏறக்குறைய ரூ.740 கோடி அதற்கு மானியம் தந்து குறைத்திருக்கிற, (மேசையைத் தட்டும் ஒலி) அந்தத் தாயுள்ளத்தை தமிழக மக்களின் சார்பிலே பாராட்டக்

கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியின் நிருவாகச் சீர்கேட்டினால் ஏறக்குறைய 50 ஆண்டுகால வரலாற்றுச் சிறப்புமிக்க மின்சார வாரியத்தில் 5 ஆண்டு காலத்தில் பல மடங்கு அதனுடைய இழப்பு உயர்ந்து 50 ஆயிரம் கோடிக்கு இழப்பீடு ஏற்படும் வகையில் நிருவாகச் சீர்கேடு. . .

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய பேச்சிலே ஒரு சிறிய திருத்தம். மாண்புமிகு அம்மா அவர்களுடைய அறிவிப்பில், மாநில அரசு 740 கோடி ரூபாய் வழங்கியிருக்கின்றது என்று சொன்னால், இது ஏற்கெனவே நம்முடைய அம்மா அவர்களுடைய அரசு வழங்கி வருகின்ற மானியத்துடன் கூடுதல் சலுகை, கூடுதல் மானியம் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் திருத்திக்கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதை நான் சுட்டிக்காட்டுவதற்காகத்தான், ஏற்கெனவே 3,000 கோடி ரூபாய்க்கு மேல் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த 3,000 கோடி ரூபாய்க்கு மேலே கூடுதலாக 740 கோடி ரூபாய் இதற்காக மானியமாகத் தந்து, ஏறக்குறைய தமிழ்நாட்டிலே 16 இலட்சம் குடும்பங்களிலே இலவசமாக, அதாவது குடிசைகளுக்கு மின் விளக்குத் திட்டத்தின்கீழ் 16 இலட்சம் குடிசைகளுக்கு இலவச மின் விளக்கைத் தருகின்ற ஒளி விளக்காக, ஏழரை கோடி தமிழ் மக்களின் குல விளக்காக நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்கள் விளங்கிக்கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்தால் கூட்டப்பட்ட மின் கட்டணத்திற்கு, மாண்புமிகு



அம்மா அவர்களுடைய அரசு தமிழக மக்களுடைய மனம் குளிர்கின்ற அளவில் எந்த அளவிற்கு சிறப்பானதொரு மானியத்தை இங்கே அறிவித்திருக்கின்றது என்பதை மாண்புமிகு அம்மா அவர்கள் இங்கே தெள்ளத் தெளிவாக எடுத்துக்காட்டினார்கள்.

மாண்புமிகு அம்மா அவர்களுடைய மக்கள் நலன் காக்கும் நடவடிக்கை மூலம் 740 கோடி ரூபாய் மானியத்தை தமிழ்நாடு மின்சார வாரியத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு கூடுதலாக வழங்கும். இதனையடுத்து இந்த ஆண்டு வழங்கப்பட வேண்டிய மானியத் தொகை உயர் அளவாக 4,294.16 கோடி ரூபாயாக இருக்கும் என்பதையும், இதன்மூலம் ஒரு கோடியே ஐம்பது இலட்சம் குடும்பங்கள் பயனடையும் என்பதையும் மாண்புமிகு அம்மா அவர்கள் மகிழ்ச்சியோடு இங்கே அறிவித்திருக்கிறார்கள் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசின் அணுகுமுறை இருக்கிறதே, நிருவாகத்திலே அம்மா அவர்கள் சாட்டை. சேவை செய்வதிலே அவர்கள் சாமரம். (மேசையைத் தட்டும் ஒலி) நிருவாகத்தை முடுக்கிவிடுவதிலே அவர்கள் சாட்டை. மக்களுக்குச் சேவையாற்றுவதிலே அவர்கள் சாமரம். ஆக, சாட்டையாகவும், சாமரமாகவும் இருந்துகொண்டிருக்கின்ற இந்த அரசு, புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, ஏழையெளிய மக்களுக்காக கனிந்து அந்த மின் உயர்வுக் கட்டணத்தைத் தானே ஏற்றுக்கொள்கின்ற நடவடிக்கையை நாட்டு மக்களின் சார்பிலே பாராட்டி, வரவேற்று, அமைகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ‘பொறுத்தார் பூமி ஆள்வார்’ என்று சொல்வார்கள். பொறுமையில்லாமல் வெளியில் சென்றவர்கள் பலர். (மேசையைத் தட்டும் ஒலி) என்ன சொல்ல வருகிறேன் என்று முதலில்

கேட்கவேண்டும். Listening is knowledge. என்ன சொல்ல வருகிறேன் என்று புரியாமல். . . (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) I won't allow you, Thiru. Anbazhagan. திரு. அன்பழகன், நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உட்காருங்கள். மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** 'பொறுத்தார் பூமி ஆள்வார்' என்று சொல்வார்கள். மக்கள் வெறுத்தால் ஆட்சி போகும் என்றும் சொல்வார்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் பழமொழிதான் சொல்கின்றார். உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பழமொழிதான் சொல்கின்றார் உட்காருங்கள். திரு. ஜெ. அன்பழகன் உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் உங்களை எச்சரிக்கிறேன். நான் உங்களுக்கு மைக் கொடுக்கவில்லை. மைக் கொடுக்காமல் நீங்கள் சொல்கின்ற சொல் எதுவும் அவைக்குறிப்பில் ஏறாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** ஆக, மின்சார வெட்டை வைத்துக்கொண்டு சங்கரன்கோவில் இடைத் தேர்தலிலே வெற்றி பெற்றுவிடலாம் என்று நினைத்தவர்களுக்கு ஒரு சாட்டை. (மேசையைத் தட்டும் ஒலி) அதை மட்டும் சொல்லியே இடைத் தேர்தலில் வெற்றிபெற்றுவிடலாம் என்ற கனவு, எதிர்த்து நின்ற அனைவரும் டெபாசிட் இழக்கவேண்டிய நிலை உருவாகிவிட்டது உண்மை. அதைப் பொறுக்கமுடியவில்லை. ஆக, எதைச் சொல்லலாம் என்று சட்டமன்றத்திற்கு வருகிறவர்கள் இந்த நடுத்தர மக்களுக்கு மின் கட்டணம் அதிகரித்துவிட்டது என்பதை மட்டும் சுட்டிக்காட்டி, சிறப்பாக நடக்க இருக்கின்ற, சிறப்பாக நடக்கின்ற ஆட்சியைப் பற்றி குறை சொல்லவேண்டுமென்றே வந்து அமர்ந்து மக்களுக்காகச் சேவை செய்ய வேண்டியவர்கள் அடிக்கடி வெளிநடப்புச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

முற்பகல் 11–35

ஆக பொறுத்திருந்தார்கள் என்றால் நிச்சயமாக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், எடுக்க வேண்டிய, விட்டுச் சென்ற



பணிகளை, செய்யாத காரியங்களை, கடன் சுமைகளை, மின்சார உற்பத்தியை—நீங்கள் பார்த்தீர்கள் என்றால் சென்ற ஆட்சியிலே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடுவார்கள். அதற்குத் தேவையான மின் உற்பத்தியைச் செய்யாமல், கடன் சுமையைச் சுமத்தி, மின் உற்பத்தியை அதிகரிக்காமல் நாம் அல்லல்படுகிற சூழ்நிலையை உருவாக்கி விட்டுச் சென்றவர்கள் கடந்த ஆட்சியாளர்கள் என்பதை நாம் மறந்துவிடக்கூடாது—அதைச் சீர்செய்யவேண்டுமென்று இந்த மின் கட்டணத்தை உயர்த்தியது மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இல்லை என்பதை இன்னும் அவர்கள் புரிந்துகொள்ளவில்லை. காரணம், தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையம்தான் அதை நிர்ணயிக்கிறது என்பதை முதலில் புரிந்துகொள்ளவேண்டும். ஆணையம் உயர்த்தியிருந்தாலும் மக்கள் அவதிப்படுகிறார்கள், மக்களுக்காக நாம் சேவை செய்ய வந்திருக்கின்றோம் என்பதை உணர்ந்து சிறப்பாகக் கூடுதல் மானியம் அளித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை சமத்துவ மக்கள் கட்சியின் சார்பாகப் பாராட்டி அமர்கின்றேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு முதல் நாள் வந்த அறிவிப்பிலிருந்து தமிழக மக்களும், எங்களைப் போன்றவர்களும் மிகுந்த கவலைக்குள்ளாகியிருந்தோம். உங்களுக்கும் அந்தக் கவலை இருக்கிறது என்றுதான் நான் பார்க்கிறேன். ஆகவே, இந்தக் கடுமையான மின் கட்டண உயர்விலிருந்து ஒரு மிகச் சிறிய அளவிற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (குறுக்கீடு) என்னுடைய கருத்தைச் சொல்லி விடுகிறேன். அதற்கான மானியத்தை வழங்கி இந்த மின் கட்டண உயர்வைக் குறைப்பதற்கு ஒரு முயற்சி எடுக்கிறார். ஒரு உணர்வுபூர்வமான முயற்சி எடுக்கிறார். அதை என்னால் புரிந்துகொள்ள முடிகிறது. ஆனால், ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி, விதி 110–ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கைமீது விவாதம் கிடையாது. நன்றி சொல்லி முடியுங்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** Thanks *சொல்வதா? இவ்வளவு கட்டண உயர்வுக்கு எப்படி* Thanks *சொல்லமுடியும்? மிகக் குறைந்த அளவுக்குத்தான் நீங்கள் சலுகை காட்டியிருக்கிறீர்கள். ஆகவே, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியைப் பொறுத்தவரை தமிழக மக்களுக்கு இருக்கிற . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *ரூபாய் 4,294 கோடி என்பது சாதாரணமா?* Rs.4,294 subsidy to the E.B. *என்பது சாதாரணமா? மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதி 110–ன்கீழ் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையாற்றியதற்குப் பிறகு அதற்கு விவாதமே இல்லை என்பது இதுவரையிலும் விதிமுறையிலே இருக்கின்ற ஒரு நடைமுறை. அந்த நடைமுறையை நீங்கள் மாற்றக்கூடாது என்பதை வேண்டுகோளாக வைக்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Please sit down. *மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள் இங்கே கருத்தைச் சொல்வதற்கு முன்பாக அவர்கள் ஆட்சி செய்த மேற்கு வங்கத்திலேயும், கேரளத்திலேயும் மின் கட்டணம் என்ன என்பதைத் தயவு செய்து திரும்பிப் பார்க்கவேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி)*

*இந்தியாவிலேயே அதிகமான மின் கட்டணத்தை வசூல் செய்யக்கூடிய மாநிலம் மேற்கு வங்க மாநிலம். அதை அவர்களிடத்திலே வைத்துக்கொண்டு, தன் சட்டையிலே இருக்கின்ற அழுக்கை உற்றுப் பார்க்காமல், தமிழகத்திலே தூய்மையாக ஆட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற புரட்சித் தலைவியைப் பற்றி இங்கே விமர்சனம் செய்வதற்கு அவர்களுக்கு எந்தவிதமான—அதேநேரத்தில், மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் ஒரு கருத்தைச் சொல்லுகின்றபோது ஒரு நல்ல ஆக்கபூர்வமான எதிர்க்கட்சி, மக்களை நேசிக்கக்கூடிய கட்சி என்ன செய்யவேண்டுமென்று சொன்னால் ஒரு முதலமைச்சர் என்ன கருத்தைச் சொல்கிறார் என்று தெரிந்த பின்பு அவர்கள் வெளிநடப்பு*



*செய்வதோ அல்லது கருத்துகளைக் கூறுவதோ நல்ல, சாலச் சிறந்த எதிர்க்கட்சிக்கு அழகாகும். ஆனால், அரசியல் செய்வதற்காகவே, அவர்கள் தெரிந்து கொண்டார்கள், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்களைப் பற்றி நன்கு தெரிந்தவர்கள் இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சித் தலைவர்கள். புரட்சித் தலைவி அம்மா அவர்கள் என்று சொன்னால் நாட்டு மக்களுக்கு நன்மைப் பயக்கக்கூடிய திட்டங்களை, அறிவிப்புகளை விதி 110–ன்கீழ் அறிவிக்கக்கூடியவர். எனவே, புரிந்துகொண்டார்கள் மின்சார கட்டணத்தை மானியம் மூலமாகக் குறைக்க எழுந்துவிட்டார் என்று அவர்களுக்கு நன்றாகத் தெரிந்துவிட்டது. அதனால்தான் அரசியல் செய்வதற்காக இப்போது எதிர்க்கட்சிகள் வெளிநடப்புச் செய்துகொண்டிருக்கின்றன.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அதனால்தான் நான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் உரையைக் கேட்டுவிட்டு, அதன்பிறகு நீங்கள் எழுந்திருங்கள், உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன் என்று சொன்னேன். ஆனால், அதற்கு முன்பாகவே நீங்கள் வெளிநடப்புச் செய்துவிட்டீர்கள்.*

*2012–2013 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையின்மீது பொது விவாதம். முதலில் மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடு)* Please sit down, *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன். (குறுக்கீடுகள்)* Frontline leaders *ஒன்பது பேர் பேசவேண்டும். (குறுக்கீடு) இப்பொருளில்* debate *இல்லை,* please. *(குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். (குறுக்கீடுகள்)* Please sit down. *(குறுக்கீடு) தயவு செய்து அமருங்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் ஒன்பது பேர் பேசவேண்டும். (குறுக்கீடு) உங்களுக்குப் பேச அனுமதி அளிக்கப்படவில்லை. உட்காருங்கள். மாண்புமிகு அவை முன்னவர் அவர்கள்.*

*முற்பகல் 11–40*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இங்கே 110–வது விதியின்கீழ் சிறப்பானதோர் அறிக்கையை வாசித்தார்கள். மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டது. மீண்டும், மீண்டும் அவர் வாய்ப்புக் கேட்டு இங்கே வேண்டுகோள்*

விடுத்துக்கொண்டிருக்கின்றார். இன்றைக்கு நிதிநிலை அறிக்கைமீது முன்வரிசையில் இருக்கின்ற தலைவர்களெல்லாம் பேசவேண்டிருப்பதனால் சீக்கிரம் நீங்கள் பேசுகின்ற முன்னணித் தலைவர்களை அழைத்து விவாதத்தை நடத்துவதற்கு ஏற்பாடு செய்யும்படி கேட்டுக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விதிகள் மிகவும் தெளிவாக உள்ளன. விதி 110–ன்கீழ் பொது முக்கியத்துவம் வாய்ந்த ஒரு பொருளைப்பற்றி ஓர் அமைச்சர் பேரவைத் தலைவரின் இசைவோடு அறிக்கை ஒன்றை அளிக்கலாம். அவ்வறிக்கையின்மீது அப்போது எவ்வித விவாதமும் இருத்தல் கூடாது.

## 7. வரவு–செலவுத் திட்டம், 2012–2013, பொது விவாதம்–தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2012–2013 ஆம் ஆண்டுக்கான வரவு–செலவுத் திட்டத்தின் மீதான பொது விவாதம். மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வெகு மக்களின் விரைந்த முன்னேற்றம் என்கிற உயரிய நோக்கோடு மக்கள் நலத்தை மட்டுமே மையமாக வைத்து தயாரிக்கப்பட்டிருக்கிற போற்றதலுக்குரிய தமிழ்நாட்டு முதலமைச்சர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய இந்த நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தின்பேரிலே பங்கேற்று கருத்தளிக்கிற வாய்ப்பளித்த தங்களுக்கு முதலிலே என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த அரசு பொறுப்பேற்று இது இரண்டாவது நிதிநிலை அறிக்கை ஆகும். கடந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை, தரிசாகக் கிடந்த தமிழ்நாட்டை உழுது பண்படுத்துகிற ஒரு நல்ல நிதிநிலை அறிக்கையாக இருந்தது என்றால், இந்த ஆண்டின் நிதிநிலை அறிக்கை அதற்கு உரமிட்டு, நீர் பாய்ச்சி (மேசையைத் தட்டும் ஒலி) வளர்க்கிற ஒரு தலைசிறந்த நிதிநிலை அறிக்கையாக அமைந்திருக்கிறது என்பதை நான் இங்கே முதலிலேயே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஏறக்குறைய ரூபாய் ஒரு இலட்சத்து இருபதாயிரம் கோடிக்கு மேலே வரவு–செலவு என்கிற வகையிலே தயாரிக்கப்பட்டிருக்கிற இந்த நிதிநிலை அறிக்கை கோடிகோடியாக செலவழித்திருந்தாலும்கூட, நாங்கள் சொல்ல வேண்டியது எத்தனை



கோடிகள் செலவழித்திருந்தாலும், இதிலே தெருக்கோடியிலே இருக்கிறவர்களுக்கும், கடைக்கோடியிலே இருக்கிறவர்களுக்கும் எப்படிப்பட்ட திட்டங்கள் இதில் உள்ளன எனப் பார்க்கிறபோது, இது முழுக்க முழுக்க கடைக்கோடி மக்களுக்கும், தெருக்கோடி மக்களுக்குமான வளர்ச்சிக்காக, அந்த மக்களின் சமூகப் பொருளாதார மேம்பாட்டுக்காக அமைந்திருக்கிற திட்டம். ஏழையெளிய மக்களை ஏற்றிவிடுகிற ஏணியாக இருக்கிற ஒரு நிதிநிலை அறிக்கை; கடைநிலை மக்களைக் கரையேற்றிவிடுகிற தோணியாக இருக்கிற நிதிநிலை அறிக்கை; (மேசையைத் தட்டும் ஒலி) நலிந்த மக்களுடைய நம்பிக்கை ஊற்றாக இருக்கிற நிதிநிலை அறிக்கை என்கிற வகையிலே இந்த நிதிநிலை அறிக்கையை நாங்கள் வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறோம்; பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம். அதிலும் குறிப்பாக ஆதி திராவிடர் மக்களுக்கு இதுவரையிலே தமிழகத்திலே அளிக்கப்பட்டிருக்கிற எந்த நிதிநிலை அறிக்கையிலும் இல்லாத அளவிற்கு அவருடைய மக்கட்தொகை விகிதாச்சாரத்திற்கும் மேலாக, ஏறக்குறைய 22 சதவிகிதம் மொத்த திட்ட நிதி ஒதுக்கீட்டிலிருந்து ரூபாய் 6,108 கோடியே 60 இலட்சம் அளவிற்கு அந்த மக்களுக்காக மட்டும் சிறப்பாக உட்கூறு திட்டத்தின் அடிப்படையிலே நிதி வழங்கப்பட்டிருக்கிறது என்கிறபோது, நான் அடித்தளத்து மக்களின் சார்பிலே, நலிந்த மக்களின் சார்பிலே அதை நெஞ்சார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதிலேயும்கூட முழுமையாக இந்த நிதி அந்த மக்களின் மேம்பாட்டிற்காக, அந்த மக்களின் வளர்ச்சிக்காக, அந்த மக்களின் முன்னேற்றத்திற்காகச் செலவழிப்பதற்காகத் திட்டமிடப்படும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டிருப்பது, அதை மேலும் உறுதி செய்வதாய், மேலும் உரமேற்றுவதாய் இருப்பதால் நான் அதை முழுமனதோடு வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இதுவரையிலும் அளிக்கப்பட்டிருக்கிற எந்த நிதிநிலை அறிக்கையிலும் இவ்வளவு பெரிய நிதியொதுக்கீடு இருந்ததில்லை. (மேசையைத் தட்டும் ஒலி). இன்றைக்கு இது வழங்கப்பட்டிருக்கிறது என்கிறபோது ஒடுக்கப்பட்ட மக்களின் தாயாய் இருக்கக்கூடிய, உற்ற தலைவியாய் இருக்கக்கூடிய புரட்சித் தலைவி அம்மாவினுடைய இந்த எண்ணத்தை நான் வரவேற்று பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

Post-matric, pre-matric scholarship என்று சொல்வார்கள். மத்திய அரசு, இந்தியா முழுவதும் இருக்கிற தலித் மக்களுக்கான,

*[முனைவர் செ.கு. தமிழரசன்]* [2012 ஏப்ரல் 3

அடித்தளத்து மாணவர்களுக்கான உதவித் தொகையைக் குறைத்துவிட்டது. ரூ.2,440 கோடியை ரூ.1,500 கோடியாகக் குறைத்து, ஏறக்குறைய ரூ.900 கோடியை மத்திய அரசு குறைத்திருக்கிறது. ஆனால், நம்முடைய மாநில அரசு அந்தச் சுமையையும் ஏற்றுக்கொள்கிற வகையிலே இங்கே அதிகரித்திருக்கிறது என்கிறபோது இதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது.

முற்பகல் 11–45

அதேநேரத்திலே இந்தத் தொகையைச் செலவழித்து, இந்தத் திட்டங்களைச் சீரமைப்பதற்கும், கண்காணிப்பதற்கும் நம்முடைய மாநில அரசு ஒரு Monitoring Committee, கண்காணிப்புக் குழுவை உருவாக்க வேண்டும். ஒரு சில மாநிலங்களிலே அப்படிப்பட்ட Monitoring Committee அல்லது அமைச்சரவையிலே ஒரு Sub-committee, அமைச்சரவையிலே ஒரு துணைக் குழு போன்றவை உருவாக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல நம்முடைய மாநில அரசும் ஒரு Sub-committee–ஐயோ அல்லது ஒரு Monitoring Committee–ஐயோ உருவாக்க வேண்டும் என்கிற கோரிக்கையை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

பேசாத பொருள்களைப் பற்றிப் பேச வேண்டும். வாயற்றவர்களுடைய வாய்மொழிகளை எல்லாம் இங்கே பதிவு செய்ய வேண்டும் என்பதனாலே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு, நலிந்த மக்களுக்கு, அந்த மக்களுடைய மேம்பாட்டிற்காக அர்ப்பணித்துக் கொண்டிருக்கிற அரசு என்பதனாலே நான் ஒரு சிலவற்றை மட்டும் இங்கே சுட்டிக்காட்டுவதோ, நினைவுபடுத்துவதோ என்னுடைய கடமை என்பதனாலே நான் நினைவுபடுத்த விரும்புகிறேன்.

இந்தியாவிலேயே துப்புரவுப் பணியாளர்களுக்காக, அந்த துப்புரவுத் தொழிலிலே மனிதனுடைய கழிவை மனிதனே சுமக்கிற அந்தக் கொடுமையை அகற்ற வேண்டும் என்பதற்கு ஒரு எடுத்துக்காட்டாக கடந்த கூட்டத் தொடரிலே புரட்சித் தலைவி அம்மாவினுடைய அரசு ஒரு தீர்மானத்தை இயற்றியது. வேறு ஒரு மாநிலமும் இதை நிறைவேற்றவில்லை என்பதற்காக நேற்றைக்குக்கூட உச்ச நீதிமன்றம் கண்டித்திருப்பதை நாம் பார்த்திருக்கிறோம்; பார்த்துக் கொண்டிருக்கிறோம். அந்த நிலையிலே தமிழ்நாட்டிலே துப்புரவுப் பணியாளர்களுக்காக ஒரு துப்புரவுப் பணியாளர்கள்



2012 ஏப்ரல் 3] *[முனைவர் செ.கு. தமிழரசன்]*

நல வாரியம் அமைக்க வேண்டும். எவ்வளவோ நல வாரியங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. திருநங்கையர் நல வாரியம்கூட உருவாக்கப்பட்டிருக்கிறது. ஓவியர்களுக்குக்கூட ஒரு நல வாரியம் உருவாக்கப்பட்டிருக்கிறது. இன்றைக்கு சென்னை, மதுரை, திருச்சி, கோவை போன்ற பல மாநகராட்சிகள் வந்துவிட்டன. 300 ஆண்டு காலமாக துப்புரவுப் பணியிலே ஈடுபட்டிருக்கிற துப்புரவுத் தொழிலாளர்களுக்காக, அதாவது அவர்களுக்குப் பண்டிகைகள்கூட கிடையாது. பொங்கலும் கிடையாது, தீபாவளியும் கிடையாது, வேறு எந்த பண்டிகையும் கிடையாது. பண்டிகைக் காலத்திலேதான் அவர்களுக்கு அதிகமான வேலையே. காலை 6–00 மணிக்கு தெருவுக்கு வரவேண்டும். பொழுது விடிவதற்கு முன்னால், மக்கள் புழக்கம் வருவதற்கு முன்னால் தெருவுக்கு வந்து பணியாற்ற வேண்டிய அந்தத் துப்புரவுப் பணியாளர்கள் ஏற்கெனவே அவர்கள் அரசுப் பணியாளர்களாக இருந்தார்கள். திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலே துப்புரவுப் பணி பன்னாட்டு நிறுவனங்களுக்கு, தனியார் நிறுவனங்களுக்குத் தாரைவார்க்கப்பட்டுவிட்டது. அன்றைக்கு அவர்கள் பன்னாட்டு முதலாளிகளுக்கு அதை தாரைவார்த்துத் தந்தார்கள். அந்த நிலையிலே இன்றைக்கு நிரந்தரத் தொழிலாளர்களாகவும் இல்லாமல், தற்காலிகத் தொழிலாளர்களாக பல மாநகராட்சிகளிலே துப்புரவுப் பணியிலே ஈடுபட்டிருக்கிற அந்த துப்புரவுப் பணியாளர்களுக்கான நல வாரியம் ஒன்று உருவாக்க வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளை நான் இங்கே முன்வைக்க விரும்புகிறேன்.

துப்புரவுப் பணியாளர்களுக்கு, அவர்கள் பணியிலே ஈடுபடுகிறபோது கையுறை வழங்கப்பட வேண்டும். ஏற்கெனவே தேசிய துப்புரவுப் பணியாளர்களுக்கான கரம்சார் அமைப்பு, தமிழகத்திற்குக் கடந்த தி.மு.க. ஆட்சியிலே தந்த 50 கோடி ரூபாயை தி.மு.க. அரசு திருப்பி அனுப்பிவிட்டது என்று அந்த அமைப்பின் தேசிய தலைவர் இங்கே வந்து குற்றஞ்சாட்டினார்; 50 கோடி ரூபாய் திருப்பி அனுப்பப்பட்டுவிட்டது. ஆகவே, அவர்களுக்கு கையுறைகள் வழங்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

நான் இந்தச் சந்தர்ப்பத்திலே ஒன்றைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். போற்றுதலுக்குரிய முதலமைச்சர், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 1994–லே ஒரு நல்ல திட்டத்தை சென்னை மாநகராட்சியிலே அறிமுகப்படுத்தினார்கள். திருவொற்றியூரிலே இருக்கிற மருத்துவமனையிலே Lab Technician பயிற்சி பெறுவதற்கும்,

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2012 ஏப்ரல் 3

மற்றவர்களுக்கும் துப்புரவுப் பணியாளர்களுடைய குழந்தைகளுக்கு இட ஒதுக்கீடு தந்தவர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தத் துப்புரவுப் பணியாளர்களுடைய குழந்தைகள் பயமின்றி சென்னை மாநகராட்சியிலும், பிற நகராட்சியிலும் பணியாற்றுகிறார்கள்.

ஆகவே, நான் இங்கே ஒரு வேண்டுகோளை முன்வைக்க விரும்புகிறேன். 60 ஆண்டு காலத்திற்கு முன்னாலே சென்னை மாநகராட்சிக்காக மாடம்பாக்கத்திலே ஒரு தொழுநோயாளியினுடைய மனைவி ஒரு மருத்துவமனை கட்ட வேண்டும் என்பதற்காக 40 ஏக்கர் நிலத்தைத் தந்திருக்கிறார். அந்த 40 ஏக்கர் நிலம் அப்படியே இருக்கிறது. மாடம்பாக்கத்திலே இன்னமும் மாநகராட்சிக்குச் சொந்தமாக இருக்கிறது. மாநகராட்சிக்குச் சொந்தமான அந்த இடத்திலே அம்மா அவர்களுடைய பெயரிலேயே டாக்டர் புரட்சித் தலைவி மருத்துவக் கல்லூரி என்ற ஒரு மருத்துவக் கல்லூரியை உருவாக்க வேண்டும். நம்முடைய மாநகராட்சியில் நீங்கள்தான் துப்புரவுப் பணியாளர்களுடைய குழந்தைகளுக்கு Lab Technician பயிற்சி தந்தீர்கள். அவர்கள் மருத்துவக் கல்லூரியிலே சேர்கிற அளவுக்கு, அதாவது துப்புரவுப் பணியாளர்களுடைய குழந்தைகள் டாக்டர்களாக வந்தார்கள் என்று சொல்கிற அளவுக்கு, வீணாகக் கிடக்கிற அந்த 40 ஏக்கர் நிலத்திலே ஒரு மருத்துவமனையை உருவாக்குங்கள்; புரட்சித் தலைவி அம்மாவின் பெயரிலே அந்த மருத்துவமனையை உருவாக்குங்கள். போக்குவரத்துத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கும் இட ஒதுக்கீடு தந்து மருத்துவக் கல்லூரியைத் தந்தீர்கள். துப்புரவுத் தொழிலாளர்களுடைய குழந்தைகளுக்கும் இட ஒதுக்கீடு தருகிற வகையிலே ஆணையிடுங்கள். அப்படிப்பட்ட ஒரு மருத்துவக் கல்லூரி மும்பை மாநகராட்சியில் நடக்கிறது. இன்னும் சில மாநகராட்சிகள் மருத்துவக் கல்லூரிகளை நடத்துகின்றன. இங்கேயும் இருக்கிற இடத்தை வைத்துக் கொண்டு ஒரு மருத்துவக் கல்லூரி நடத்திட வேண்டும் என்கிற அந்த வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

முற்பகல் 11–50

இதைப் போலவே மருத்துவத்திற்காகவும், கல்விக்காகவும் நம்முடைய நிதிநிலை அறிக்கையிலே ஏராளமாக, கோடி கோடியாக, தாராளமாக நிதி வழங்கப்பட்டிருக்கிறது. கல்விக்காக இப்போது



2012 ஏப்ரல் 3] [முனைவர் செ.கு. தமிழரசன்]

மாணவர் சேர்க்கை நடந்துகொண்டிருக்கின்ற நேரம். எல்லாப் பகுதிகளிலும் அப்படிப்பட்ட ஒரு வேட்கை பெற்றோர்களுடைய நெஞ்சிலே இருக்கிறது. தனியார் பள்ளிகளில்தான் சேர்ப்போம், தனியார் பள்ளிகளில்தான் உயர் கல்வி கிடைக்கிறது, சிறப்பான கல்வி கிடைக்கிறது என்ற ஒரு எண்ணம் ஏனோ மக்களிடத்திலே மேலோங்கி இருக்கிறது. தனியார் பள்ளிகளில்தான் எல்லாம் கிடைக்கும் என்கின்ற வகையிலே, தனியார் பள்ளிகளில்கூட நலிந்த மக்களுக்கு, ஏழை மக்களுக்கு 25 சதவிகித இட ஒதுக்கீடு தர வேண்டும் என்ற சட்டத்தை அமல்படுத்தியிருப்பது புரட்சித் தலைவி அம்மா அவர்களினுடைய அரசு. (மேசையைத் தட்டும் ஒலி) அது எப்படிப்பட்ட தனியார் பள்ளிகளாக இருந்தாலும், அந்தத் தனியார் பள்ளிகளிலே, தொடக்கத்திலேயே, எல்.கே.ஜி.–ஆக இருந்தாலும், யு.கே.ஜி.–ஆக இருந்தாலும், அதற்கு அரசியல் சட்டத்திலே இடம் இல்லையென்றாலும், அம்மா அவர்கள் நடைமுறைப்படுத்தும் அந்த சட்டம் இன்றைக்கு அந்த 25 சதவிகித இட ஒதுக்கீட்டை உறுதிப்படுத்தியிருக்கிறது, (மேசையைத் தட்டும் ஒலி) வலியுறுத்திருக்கிறது என்கிறபோது நான் அதை வாழ்த்திப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதே நேரத்திலே நம்முடைய திட்ட ஒதுக்கீட்டிலே ஆறில் ஒரு பங்கை, கல்விக்காகச் செலவழிக்கின்றோம். ஆறில் ஒரு பங்கு என்பது மிகப் பெரிய தொகை. அப்படிச் செலவழிக்கின்ற அந்தக் கல்வித் தொகையை நாம் வழங்கினாலும்கூட, மாநகராட்சிப் பள்ளியோ அல்லது நகராட்சிப் பள்ளியோ, அரசினர் பள்ளிகளிலோ, இப்படிப்பட்ட பள்ளிகளிலே படிப்பது என்பது ஏதோ ஒரு கௌரவக் குறைவு, தரக் குறைவு என்ற எண்ணம் மக்களிடம் இருக்கிறது. மாண்புமிகு அம்மா அவர்கள் எவ்வளவோ புதிய, புதிய உத்திகளைத் தமிழகத்திலே பயன்படுத்தி வருகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் பேசுகின்றபோது, பள்ளிக் கல்வித் துறைக்கு அதிக நிதியையெல்லாம் ஒதுக்கியிருக்கிறார்கள்; அதே நேரத்திலே,

தனியார் பள்ளிகளிலே அதிகமாக மாணவர்களைச் சேர்க்கிறார்கள், புதிய நவீன உத்திகளையெல்லாம் அரசு பள்ளிகளிலே கையாள வேண்டுமென்று ஒரு ஆதங்கத்தைத் தெரிவித்திருக்கிறார்கள். மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் எங்கள் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களைத் பொறுத்தவரையில், தனியார் பள்ளிகள் கல்வி முறையைவிட, அரசுப் பள்ளிகளில் அதிநவீன முறையில், கல்வி முறையை அறிவித்திருக்கிறார்கள் என்பதை முதலில் நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதே நேரத்தில், இதுவரை எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு கிராமப்புறத்தில் இருக்கின்ற பாமர மக்களின் குழந்தைகள் எல்லாம் எளிதாகக் கல்வி கற்க வேண்டும் என்பதற்காக, செயல் வழிக் கற்றல் அதாவது Activity Based Learning முறையை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் பெருமையாகச் சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல. மாணவர்களின் ஆற்றலைப் பெருக்கிட, சிந்திக்கும் ஆற்றலைப் பெருக்கிட சதுரங்க விளையாட்டை மாண்புமிகு அம்மா அவர்கள் சிறப்புப் பாடமாக இன்றைக்கு அறிவித்திருக்கின்றார்கள். மேலும், பள்ளிக் குழந்தைகளின் சுமையைக் குறைப்பதற்காக, முப்பருவ முறை, Trimester System இவற்றையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கின்றார்கள். இதற்கும் மேலாக, குழந்தைகளின் உள்ளார்ந்த ஆற்றலை வெளிப்படுத்த அவர்களுக்கு C.C.V. முறை— (Continuous and Comprehensive Evaluation) முழுமையான தொடர் மதிப்பீட்டு முறை என்பது போன்ற அதிநவீன சிறப்பு முறைகளையெல்லாம் மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். Smart Card முறை–இன்றைக்கு கணினிமூலம் கல்வி கற்றல், படித்தல் போன்ற முறையையெல்லாம் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம், புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்று சொன்னால், தனியார் பள்ளிகளில் ஒரு மோகத்திற்காக இன்றைக்குச் செல்கிறார்களே தவிர, அரசுப் பள்ளிகளில் இதுபோன்ற advanced முறையில் மாணவ, மாணவியர் திறமையை வளர்க்க வேண்டும் என்பதற்காக சிறப்பான திட்டங்களை மாண்புமிகு அம்மா அவர்கள் அறிவித்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) நமது





தமிழகத்தின் முதல்வர் அம்மா அவர்களைப் பொறுத்தவரையில், மற்ற முதல்வர்களைக் காட்டிலும், Hi-tech முதல்வர் என்பதை இந்த நேரத்தில் சொல்லி (மேசையைத் தட்டும் ஒலி) தனியார் பள்ளிகளுக்கு இணையாக இன்றைக்கு அதிநவீன சிறப்புத் திட்டங்களை அறிவித்திருக்கின்றார்கள். தனியார் பள்ளிகளைவிட போட்டி போட்டு அரசுப் பள்ளிகளில் பெற்றோர் மாணவர்களைச் சேர்க்கின்ற காலம் வெகுவிரைவில் வரும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்து, அமர்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள். இன்னும் 8 மாண்புமிகு உறுப்பினர்கள் பேச வேண்டும். சுருக்கமாக உரையை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கல்வி என்பது ஒரு சர்வதேச அளவிலான போட்டியாக மத்திய அரசினுடைய கல்விக் கொள்கையினால், மாநிலங்களிலே உருவாகிவிட்டது. சர்வதேசப் பள்ளிகள்–International Schools எல்லாம் இன்றைக்கு வந்துவிட்டன. ஆகவே, அம்மா அவர்களினுடைய எண்ணப்படி ஒரு புது யுகம் *2023*–ஐ இன்றைக்கு *15* இலட்சம் கோடி ரூபாய் அளவிலே திட்டமிடுகிற ஒரு ஒப்புயர்வற்ற தொலைநோக்குத் திட்டத்தை, ஏறக்குறைய இன்றைக்கு இருக்கிற தனி நபர் வருமானம் ஆறு மடங்கு உயர்த்திக் காட்டப்படுமென்ற உறுதியை அறிவித்திருக்கின்ற புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு, நவீன யுத்திகளை, மாநகராட்சி, நகராட்சி மற்றும் அரசுப் பள்ளிகளிலே கொண்டுவர வேண்டும் என்கிற என்னுடைய வேட்கையைத்தான் நான் இங்கே வெளிப்படுத்தினேன்; வேறொன்றும் இல்லை.

அதைப்போலத்தான் நகராட்சிக்கு, மாநகராட்சிக்கு, உள்ளாட்சி அமைப்புகளுக்கு ஆயிரக்கணக்கான மருத்துவமனைகள் தமிழ்நாட்டிலே இருக்கின்றன. அங்கெல்லாம் மருத்துவர்கள் இருக்கிறார்கள். அந்த மருத்துவமனைகளைக்கூட பெரிய அளவிலே நாம் இன்றைக்கு மேம்படுத்த வேண்டும். அதற்காக நான் ஒரு சிறிய கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2012 ஏப்ரல் 3

முற்பகல் 11–55

நமது மாநிலத்தில் Director of Public Health இருக்கிறார். Director of Medical Services இருக்கிறார். Director of Medical Education இருக்கிறார். அதைப்போல, ஏன் நகராட்சியிலே சுகாதாரத்திற்கென்று ஒரு இயக்குநரகத்தை உருவாக்கக்கூடாது? அங்கே சாதாரணமாக அவ்வளவு மருத்துவமனைகளை நிருவகிக்கின்ற பொறுப்பு ஒரு Deputy Director வசம்தான் இருக்கிறது. இவ்வளவு மருத்துவமனைகளையும் ஒரு Deputy Directorதான் நிருவகிக்கின்றார். மருத்துவத் துறையைப் பொறுத்தவரையில் பல்வேறு இயக்குநரகங்கள் இருக்கின்றன. நகராட்சிகளுக்கும் ஒரு Directorate-ஐ ஏன் உருவாக்கக்கூடாது? அப்படிப்பட்ட Directorate உருவாக்கப்படுமானால் அந்த மருத்துவமனைகள்கூட நிருவாக ரீதியாக மேம்படும். அதற்காக ஒரு காலத்திலே, பிரிட்டிஷ் ஆட்சியிலே I.C.S. இருந்தது. I.M.S. என்ற ஒன்று இருந்தது. Indian Medical Service இருந்தது. அவர்கள் நிருவகித்தார்கள். இன்றைக்கு அதுவெல்லாம் இல்லை. ஐ.எம்.எஸ். என்ற ஒரு பணியே இன்றைக்கு இல்லை. எனவே, இதை நிருவகிப்பதற்கு Directorates கொண்டுவர வேண்டும் என்று நான் இங்கே சொல்லிக்கொள்ள விரும்புகிறேன். (மணியடிக்கப்பெற்றது)

அதைப்போலவே, மாண்புமிகு அம்மா அவர்கள் உள்ளாட்சி அமைப்புகளிலே, ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளிலே, கடந்த உள்ளாட்சித் தேர்தலில்–22 சதவீதத்திற்கு மேலே 2 சதவீதம் உயர்த்தி, 24 சதவீதம் இடங்களை ஒடுக்கப்பட்ட மக்களுக்கு கொடுத்தார்கள். புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட, ஒடுக்கப்பட்ட, தாழ்த்தப்பட்ட தலித் தலைவர்களுக்கெல்லாம் ஏன் ஒரு மாத கால பயிற்சி தரக்கூடாது? (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலித் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்களுக்கு மட்டுமல்ல, அனைத்துத் தலைவர்களுக்குமே புத்தாக்கப் பயிற்சி–புதிதாக வருகின்றவர்களுக்குப் பயிற்சியும், ஏற்கெனவே தலைவர்களாக இருந்து, இரண்டாவது முறையாக வந்த தலைவர்களுக்கும் புத்தாக்கப் பயிற்சியைக் கொடுத்துக் கொண்டிருக்கிறார்கள் என்பதை



2012 ஏப்ரல் 3] [திரு. கே.பி. முனுசாமி]

மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள், உரையை முடியுங்கள்.

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முடித்துவிடுகிறேன். நான் அதை மறுக்கவில்லை. தலித் தலைவர்களுக்காக ஒரு தனிப் பயிற்சியை, அவர்களுக்காக ஒரு பிரத்தியேகமான பயிற்சியை. . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஏற்கெனவே சொன்னார்கள்– அவர்களது மக்கட்தொகை என்று சொன்னாலும்கூட 21.82 சதவீதம் நிதி ஆதாரத்திலே உயர்த்திக் கொடுத்திருக்கிறார்கள். அதற்காக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன் என்று சொல்கின்ற மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், தலித் சமூகத்திலிருந்து வருகின்ற தலைவர்களுக்கு ஒரு தனிப்பட்ட பயிற்சியை அளிக்க வேண்டுமென்று கேட்கிறார். உண்மையில் சமூகத்திலே அவர்களையும் சமமாக வைக்காமல், நீங்களே அந்த சமூகத்தைத் தனியாகப் பிரிக்கின்றீர்களே? அந்த சமூகம் மற்ற சமூகத்தோடு இணைந்து வாழ்வதற்குரிய நல்ல சிந்தனை இருந்தால்கூட (மேசையைத் தட்டும் ஒலி) அரசியல் ரீதியாக ஒரு ஆதாயம் பெறவேண்டும் என்பதற்காக, அந்த சமூகத்தை ஒதுக்கிவைத்துவிட்டு, அந்த சமூகத்திற்காக வாதாடுவதைப்போல் இருக்கிறது. புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சாதி, மதங்களுக்கு அப்பாற்பட்டவர். மனித நேயம் மிக்க தலைவர். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த மனித நேயம் மிக்க தலைவர் எந்தெந்த சூழ்நிலையில், யார், யார் தாழ்ந்து நிற்கிறார்களோ, அவர் எந்த சாதி என்பது முக்கியமல்ல, தாழ்ந்து நிற்கின்ற, அந்தக் கடைக் கோடியிலே இருக்கின்ற மனிதனை, கைப்பிடித்து உயர்நிலைக்குக் கொண்டு வரவேண்டும் என்பதற்காகத்தான் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இவ்வளவு பெரிய திட்டங்களைத் தீட்டியிருக்கின்றார்கள். Vision 2023 என்பது எல்லா சமூகமும் ஆறு மடங்கு உயர்ந்த நிலையிலே அவர்கள்

*[திரு. கே.பி. முனுசாமி]* [2012 ஏப்ரல் 3

வருவாய் ஈட்ட வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) அது ஆதி திராவிட மக்களாக இருந்தாலும் சரி, வன்னிய மக்களாக இருந்தாலும் சரி, செட்டியார் மக்களாக இருந்தாலும் சரி, நாடார் மக்களாக இருந்தாலும் சரி, புரட்சித் தலைவி அம்மாவைப் பொறுத்தவரையில் அவர்கள் உயர்ந்த நிலைக்கு வரவேண்டும். அவர்களுடைய தனி மனித வருமானம் ஆண்டுக்கு 10,000 U.S. Dollars அளவுக்கு இருக்க வேண்டும். 10,000 U.S. Dollars என்று சொன்னாலே எதிர்க்கட்சிக்காரர்கள் யோசனை செய்வார்கள். சிந்தனை எப்படிப் போகிறது என்று பாருங்கள். உலக அளவில் ஒரு நாணயத்திற்கு மதிப்பு டாலர். அந்த டாலரை என் மக்களும் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக Vision 2023-ஐக் கொண்டுவந்திருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, நாம் அனைவரும் ஒரே சமூகம், அந்த சமூகத்தில் அவர்களையும் அரவணைத்துச் செல்லக்கூடிய சிந்தனை மிக்க தலைவி நம்மிடத்திலே இருக்கிறார். அவரை முன்னிறுத்தி நாம் பின் செல்வோம் என்று மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள், உரையை சீக்கிரம் முடித்துவிடுங்கள்.

நண்பகல் *12–00*

**முனைவர் செ.கு. தமிழரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களுடைய பதிலுக்கு நான் நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். அம்மா அவர்கள் அதைவிட ஒரு படி மேலே போய், கடந்த ஆட்சியிலே பகுத்தறிவைப் பற்றி பேசியவர்கள், ஜாதி ஒழிப்பைப் பற்றி பேசியவர்கள் எல்லாம் செய்யாத ஒரு மகத்தான பணியைச் செய்தார்கள். வேதாகமக் கல்லூரியையே உருவாக்கியவர்கள் புரட்சித் தலைவி அம்மா அவர்கள். அர்ச்சகர்களிலே இட ஒதுக்கீடு வேண்டும். அர்ச்சகர்களாவதிலேகூட பங்கு இருக்கவேண்டும். அந்தக் கோயில் கருவறையிலே போய் அங்கே வழிபடுகிற, அர்ச்சனை செய்கிற உரிமையைப் பெற்றாக வேண்டும் என்று புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கடந்த ஆட்சிக் காலத்திலே வேதாகம அர்ச்சகர் கல்லூரியை உருவாக்கி தமிழகத்திலே ஒரு பெரிய சமூகப் புரட்சியை உருவாக்கியவர்கள்.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இவ்வளவு பெரிய தொலைநோக்குச் சிந்தனையோடு கடந்த ஆட்சியிலே புரட்சித் தலைவி அம்மா அவர்கள் செய்த அந்தப் பணி தொடரும், இந்த ஆட்சியில் அந்தச் சமூகத்திற்கு நிச்சயமாக எல்லா வகையான உதவிகளையும் செய்வார்கள் என்ற நம்பிக்கையோடு அடுத்த கருத்துக்கு மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் செல்லலாம் என்று நான் கருதுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள். (குறுக்கீடு)

**முனைவர் செ.கு. தமிழரசன்:** பேச்சை முடித்துவிடுகிறேன். ஒரே ஒரு நிமிடம். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு இறுதியான கருத்தை நான் பதிவு செய்தாக வேண்டும். அம்பேத்கர் நூற்றாண்டு விழா நடக்கிறபோதுகூட கடந்த ஆட்சி தமிழகத்திலே அதை செய்திடவில்லை, ஆனால், தமிழகத்திலே பாபாசாகிப் அம்பேத்கர் பெயரிலே மணிமண்டபம் கட்ட வேண்டும் என்ற வேண்டுகோளை இந்த அவையிலே முன்வைத்த போது நூற்றாண்டும் கடந்துவிட்ட பின்னாலே, ஓராண்டுக்குப் பிறகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் சென்னையிலே மையப் பகுதியிலே 5 ஏக்கர் நிலம் தந்து, 5 கோடி ரூபாயும் தந்து—அப்போது நாங்கள் கேட்டது ஒன்றரை கோடி ரூபாய். புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இன்னும்கூட எங்களுக்குப் பசுமையாக நினைவிருக்கிறது—ஒன்றரை கோடி ரூபாயில் எப்படி முடியும் என்று சொல்லி அதற்கும் மேலாக அந்த நிதியை அதிகரித்து, 5 கோடி ரூபாய் தந்து, 5 ஏக்கர் நிலம் தந்து, அவர்களே வந்து அன்றைக்கு அடிக்கல் நாட்டினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழ்நாட்டு அரசியல் வரலாற்றிலேயே இதுவரையிலே இல்லாத அளவிற்கு இன்னும் ஒரு சம்பவம் நடந்தது. அடிக்கல் நாட்டு விழா நடக்கும், திறப்பு விழா நடக்கும், கட்டடப் பணிகள் துவக்க விழா என்று எப்போதும், எங்கேயும் நான் பார்த்ததேயில்லை. நானும் ஒரு கால் நூற்றாண்டு காலமாக சட்டமன்ற உறுப்பினராக இருந்தேன். அடிக்கல் நாட்டு விழா உண்டு, திறப்பு விழா உண்டு. கட்டடப் பணிகள் துவக்க விழா என்று எங்கேயும் அரசாங்கம் வைத்ததில்லை. அதற்குப் பின்னர் ஒரு அரசாங்கம் வந்தது.

[முனைவர் செ.கு. தமிழரசன்] [2012 ஏப்ரல் 3

கட்டடப் பணிகள் துவக்க விழா என்று வைத்து அடிக்கல் நாட்டு விழாவினுடைய அந்த கல்வெட்டையே எடுத்தார்கள். கட்டடப் பணிகள் துவக்க விழா என்று வைத்து 5 ஏக்கர் ஒன்றரை ஏக்கராகி, மீண்டும் அந்த 5 கோடி ரூபாய் ஒன்றரை கோடியாகி ஒரு பெரிய குடையை கவிழ்த்து வைத்ததைப்போல பாபாசாகிப் அம்பேத்கருக்கு, பெயரிலே அடையாறிலே ஒரு மணிமண்டபம் உருவானது. மூன்று ஆண்டுகளுக்கு முன்னால், அன்றிருந்த ஒரு சமூக அநீதி ஆட்சியிலே, அந்த மணி மண்டபத்தைப் பார்க்க வந்த பவானி என்ற பள்ளிக்கூட மாணவி மின்சார விபத்தினால் அங்கேயே இறந்து போனாள். அப்படி ஒரு நிலைமை இருக்கிறது. அம்மணிமண்டபத்தைப் பராமரிக்க வேண்டும்.

கடந்த வரலாற்றை மதிக்காதவர்கள் புதிய வரலாற்றை உருவாக்க முடியாது என்று பேரறிஞர் அம்பேத்கர் சொன்னார். தனது வழிகாட்டியான பேரறிஞர் அண்ணா, புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். ஆகியோரினுடைய நினைவிடங்களை புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசு சீரிய வகையிலே இன்றைக்குப் பராமரிக்கிறது. பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபம், புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். நினைவிடம், பேரறிஞர் அண்ணா நினைவிடம் ஆகியவற்றிற்கு ஒதுக்கப்பட்ட தொகை சுமார் 8 கோடி ரூபாய். பெருந்தலைவர் காமராஜருடைய, காந்தியினுடைய அந்த நினைவிடங்கள் எல்லாம் இன்றைக்கு பராமரிக்கப்படுவதற்கு 12 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருக்கிறது. அதைவிட அதிகமாகவே வழங்கப்பட்டிருக்கிறது. அண்ணல் அம்பேத்கருடைய அந்த நினைவு மணிமண்டபத்தையும் (மணியடிக்கப்பெற்றது) நீங்கள் சீரமைப்பதற்கு உரிய நடவடிக்கை எடுத்திட வேண்டுமென்ற வேண்டுகோளோடு, என்னுடைய தொகுதியிலே ஒரு கல்லூரி அமைக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் செ.கு. தமிழரசன், கோரிக்கைகளை பேரவைச் செயலகத்தில் எழுதிக் கொடுத்துவிடுங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள், முனைவர் செ.கு. தமிழரசன். மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் பேசட்டும். உட்காருங்கள்.

***மாண்புமிகு திருமதி பா. வளர்மதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களின் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் அனைத்து சமுதாயத்திற்கும், அனைத்து மதத்தினரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய, அனைவருக்கும் சலுகைகள் தரக்கூடிய உலகத்து வரலாற்றிலேயே தலைசிறந்த முதலமைச்சர் என்பதை இந்த நாடு அறியும். (மேசையைத் தட்டும் ஒலி) ஆனால், சந்தர்ப்பத்திற்காகவும், தேர்தலில் ஓட்டு வாங்குவதற்காகவும் மட்டுமே தலித் இனத்திலே சம்பந்தம் செய்துகொண்டு தள்ளி வைக்கக்கூடிய தலைவர் எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இல்லை என்பதை மட்டும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 3] [திருமதி பா. வளர்மதி]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள். (குறுக்கீடு) நேரம் இல்லை. இன்னும் 8 உறுப்பினர்கள் பேசவேண்டும். திரு. சரத்குமார், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) முனைவர் தமிழரசன், வேறு ஒரு சந்தர்ப்பத்தில் பேசலாம். Please sit down.

பிற்பகல் 12–05

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 26–3–2012 அன்று சட்டமன்றப் பேரவையில் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் தாக்கல் செய்த 2012–2013 ஆம் ஆண்டிற்கான தமிழகத்தினுடைய நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பங்கேற்றுப் பேச வாய்ப்பளித்தமைக்கு முதற்கண் நன்றியினைத் தெரிவித்துக்கொள்கின்றேன். நடந்து முடிந்த சங்கரன்கோவில் இடைத் தேர்தலில் வெற்றி பெற்றமைக்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு என் வாழ்த்துகளை இந்நேரத்தில் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) அதேபோல மகத்தான வெற்றிக்கு வாக்களித்த சங்கரன்கோவில் வாக்காளப் பெருமக்களுக்கும் என் நன்றிதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்த நிதிநிலை அறிக்கையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் தொலைநோக்குத் திட்ட அறிக்கை 2023–ல் சொன்னதுபோல் சிறந்த அம்சங்களைக் கொண்ட ஒரு நிதிநிலை அறிக்கையாகத்தான் நான் பார்க்கின்றேன்.

நிதிநிலை அறிக்கையைப் பற்றி சுருக்கமாகச் சொல்ல நான் கடமைப்பட்டிருக்கின்றேன். அதிக நேரம் நிச்சயமாக எடுத்துக்கொள்ள மாட்டேன். It is a growth-centric budget. அதாவது, வளர்ச்சியை மையமாகக் கொண்ட ஒரு நிதிநிலை அறிக்கை என்று சொல்லலாம். There is thrust on development in a welfare budget. மக்கள் நல்வாழ்வு வளர்ச்சிக்கு முக்கியத்துவம் தரும் பட்ஜெட்

A record sum has been allocated to school education. கல்விக்கு முக்கியத்துவம் தந்து, பள்ளிக் கல்விக்கு எப்பொழுதும் இல்லாத அளவிற்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கும் ஒரு பட்ஜெட்டாக நான் இதைப் பார்க்கின்றேன். I see infrastructural push in a surplus budget. கட்டுமானப் பணிகள், அடிப்படை வசதிகள் அனைத்தையும் செய்து கொடுக்கின்ற ஒரு பட்ஜெட்டாக, கட்டமைப்பு வசதிகளை ஊக்குவிக்கும் ஒரு உபரி பட்ஜெட்டாகவே, இந்த நிதிநிலை அறிக்கையை நான் பார்க்கின்றேன்.

Hon.Chief Minister puts Tamil Nadu on progress path என்றே சொல்லலாம். மாண்புமிகு முதல்வர் அவர்கள் தமிழகத்தை முன்னேற்றப் பாதையில் கொண்டு செல்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) It is a gateway to growth. வளர்ச்சிக்கான வழிகாட்டும் ஒரு பட்ஜெட் இது. இந்த நிதிநிலை அறிக்கையைப் பற்றி சுருக்கமாகச் சொல்லவேண்டுமென்றால், இந்த ஐந்து கருத்துகளை எடுத்துச் சொன்னால் அது சிறப்பாக இருக்கும். ஆகவே இந்த நிதிநிலை அறிக்கை சிறப்பாக இருப்பதை நான் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

தமிழகத்தை முதன்மை மாநிலமாக உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு இருக்கிறது என்பதை அனைவரும் அறிவோம். ஆகவேதான், நான் லண்டன் சென்று திரும்பியவுடன், தமிழ்நாடு Vision Statement-ஐ உடனடியாக கணினியில் download செய்து அதில் என்ன சொல்லியிருக்கிறார்கள் என்று படித்துப் பார்த்தேன். இந்த பட்ஜெட் தொலைநோக்குச் சிந்தனையுடன் வருங்கால தமிழகம் எப்படி இருக்கவேண்டுமென்று சிறப்பாக நிர்ணயித்து உருவாக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையாகும். (மேசையைத் தட்டும் ஒலி) அன்புச் சகோதரர் முனைவர் செ.கு. தமிழசரன் அவர்கள் சொன்னதுபோல அனைத்து மக்களுக்கும்— Vision Statement அறிக்கையின் முன்னுரையைப் படிக்கவேண்டும். அதை முனைவர் செ.கு. தமிழரசன் அவர்கள் படித்திருப்பார்கள் என்று நினைக்கிறேன். “We have embarked for the first time in Tamil Nadu on an exercise of preparing a Vision document for the State as a strategic plan for infrastructural development. The goals and themes of the Vision are determined as clearly perceivable outcomes which will impact the lives of common citizens in the most direct manner possible” என்று சொல்லியிருக்கிறார்கள். அதாவது, தீட்டுகின்ற திட்டங்கள் அனைத்தும், கடைக்கோடி மக்கள் ஒவ்வொருவரும் அந்தத்



திட்டங்களால் பயன்பெறவேண்டுமென்ற தொலைநோக்குச் சிந்தனையுடன் ரூ.15 இலட்சம் கோடி, 11 வருடங்களுக்குள் அவர்கள் வருவாயை ஆறு மடங்காகப் பெருக்கி 10 ஆயிரம் டாலராக, அதாவது ரூ.4,50,000/– ஆக உயர்த்த வேண்டுமென்று சீரிய எண்ணத்துடன் வறுமையே இல்லாத ஒரு தமிழகத்தை உருவாக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு அறிக்கையை அவர்கள் வெளியிட்டிருக்கிறார்கள். அதில் முக்கியமாக நாம் கவனிக்க வேண்டியது அந்த முன்னுரையில் இறுதியாக அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். “Achieving the desired outcomes needs disciplined implementation of well laid down plans and I seek the co-operation of all the people and stake-holders in the State and urge them to whole-heartedly accept this vision and strive towards achieving” என்று சொல்லியிருக்கிறார்கள். அதைச் சொல்லும்பொழுது, தான் மட்டும் இதை நிறைவேற்றிவிட முடியாது. அனைவரும் இதில் ஒத்துழைக்க வேண்டும். அனைவரும் என்று சொல்லும்பொழுது, மக்கள் பிரதிநிதிகள், people’s representatives, அதாவது சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவரும், தொலைநோக்குச் சிந்தனையுள்ள முதலமைச்சரை நாம் பெற்றிருக்கும்போது, இந்தத் தொலைநோக்குத் திட்டங்களைச் செயல்படுத்துவதற்கு நாம் உறுதியாக உதவ வேண்டும். ‘மக்களுக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நாம் நிறைவேற்ற வேண்டும் என்ற அந்த அடிப்படையிலே உங்கள் உதவியும் தேவை என்று உங்களை நான் கைப்பிடித்து அழைத்துச் செல்கிறேன். நீங்கள் என்னுடன் வாருங்கள், நிச்சயமாக தமிழகம் சிறப்பாக இருக்கும்’ (மேசையைத் தட்டும் ஒலி) என்று அவர்கள் சுட்டிக்காட்டியிருக்கிறார்கள். இந்த நிதிநிலை அறிக்கை, இந்த Vision Statement-க்கு இந்தத் தொலைநோக்குத் திட்டம் 2023–க்கு ஒரு முன்னோட்டமாக இருக்கும் என்பதை நான் பெருமையுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

சீதோஷ்ண நிலைகள் மாறிக்கொண்டு வருகின்றன. Global warming என்று சொல்லிக் கொண்டிருக்கிறோம். தட்பவெப்ப நிலை மாற்றம் ஏற்பட்டு பூமிப் பந்து உஷ்ணமாகிக் கொண்டிருக்கிறது. பல இயற்கைச் சீற்றங்கள் ஏற்படுவதோடு man-made disasters are there. Natural disasters are there. ஆக இந்தச் சீற்றங்கள்–திடீரென்று பூகம்பங்கள், திடீரென்று சுனாமி வருகிறது. திடீரென்று புயல் அடிக்கிறது. உலகத்திலே பலவிதமான சீதோஷ்ண நிலை மாற்றங்கள், climatic changes நடந்து கொண்டிருக்கின்றன. இந்தச் சூழ்நிலையிலே எப்பொழுது எது வருகிறது என்று கணிக்கமுடியாத

*[திரு. ரா. சரத்குமார்]* [2012 ஏப்ரல் 3

சூழ்நிலை இருக்கிறது. எப்பொழுது பூகம்பம் வரப்போகிறது, எப்பொழுது புயல் அடிக்கப்போகிறது என்பதை அறியாத சூழ்நிலையில், disaster management என்பது உலக அளவிலே அனைவரும் சிந்தித்துக் கொண்டிருக்கின்ற ஒன்று. ஒரு பேரழிவு நிகழ்வதற்குமுன் நாம் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும், இல்லையென்றால் அதற்கு நாம் தயார் செய்துகொள்ள வேண்டும் என்ற அடிப்படையிலே மாநில பேரிடர் மீட்புப் படை என்ற ஒன்றை உருவாக்கியிருப்பது உண்மையிலே பாராட்டத்தக்க ஒரு திட்டமாகத்தான் இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

*பிற்பகல் 12–10*

இன்னொரு கருத்தை நான் பதியவைக்க ஆசைப்படுகின்றேன். மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த Disaster Management–ஐ ஒரு கல்விப் பாடத் திட்டமாகக்கூட உருவாக்கிவிடலாம். காரணம், பள்ளி மாணவர்கள் First Aid–ஐக் கற்றுக் கொண்டிருக்கிறார்கள். உயிர் காப்பது எப்படி என்பதைப் பள்ளிக் குழந்தைகளுக்குச் சொல்லித் தருகிறார்கள். அதேபோல் Disaster Management, ஒரு பேரழிவு ஏற்படும்போது, திடீரென்று ஒரு பூகம்பம் நம்முடைய தமிழகத்திலோ மற்ற மாநிலத்திலோ வரும்போது, நாம் நம்மைத் தயார்படுத்திக் கொண்டு, எப்படி அதை நாம் சமாளிக்க முடியும்; நாம் பயந்து ஓடிவிடாமல் மற்றவர்களைக் காப்பாற்றுகின்ற சூழ்நிலையை நாம் உருவாக்கிக்கொள்ள வேண்டும் என்ற எண்ணத்தை வளர்க்கும் வகையிலே அதை ஒரு பாடத் திட்டமாக வைத்தால் அது சிறப்பாக இருக்குமென்று சொல்லி, இந்த மாநில பேரழிவு மீட்புப் பணிக்காக ஒதுக்குகின்ற நிதியை நான் பாராட்டுகின்றேன். அதேபோல் 'தானே' புயலால் முற்றிலும் சேதமடைந்த குடிசை வீடுகளுக்கு மாற்றாக, 1 இலட்சம் கான்கிரீட் வீடுகள் கட்டித்தரப்படும் என்று ஏற்கெனவே அறிவித்தபடி, இந்த பட்ஜெட்டில் ஆயிரம் கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருப்பது உண்மையிலேயே வரவேற்கத்தக்கது.

2025 ஆம் ஆண்டு உலகிலேயே அதிக இளைஞர்கள் உள்ள நாடாக இந்தியா இருக்கும் என்று சொல்கிறார்கள். அந்த இளைஞர்களை வழிநடத்துகின்ற பொறுப்பு நம் அனைவருக்கும் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டும் வகையிலே, இளைஞர்களுக்கு முக்கியத்துவம் கொடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இளைஞர்கள் சிறப்பான கல்வி கற்க, கல்விக்கேற்ற வேலை கிடைக்க, வேலைக்கேற்ற ஊதியம் கிடைப்பது மட்டுமல்லாமல், அவர்களின்



2012 ஏப்ரல் 3] *[திரு. ரா. சரத்குமார்]*

அடிப்படை முன்னேற்றத்திற்கு, இளைஞர்களுக்குத் தனியார் துறைகளில் வேலைவாய்ப்பை உருவாக்கித் தருவதற்காக 32 மாவட்டங்களில் மாவட்ட உதவி மையங்கள் அமைத்து, இளைஞர்களுக்குத் திறன் உருவாக்கும் பயிற்சிகளை Communication skills மற்ற அனைத்தையும் அவர்கள் மற்றவர்களுக்கு ஈடுகொடுக்கும் அளவிற்கு அவர்களைத் தயார்படுத்திக்கொள்ள வேண்டுமென்ற சூழ்நிலையை உருவாக்கித் தந்திருப்பது அவர்களுக்கு இதன்மூலமாக வேலைவாய்ப்புகளில் ஏற்படும் போட்டிகளைச் சமாளிக்க அவர்களுக்கு ஏதுவாக இருக்கும். இது உண்மையிலேயே நம்பிக்கை அளிக்கக்கூடிய ஒரு திட்டமாக இருக்கிறது. *(மேசையைத் தட்டும் ஒலி)*

தமிழகத்தின் மொத்த பரப்பளவு 1.3 இலட்சம் சதுர கிலோ மீட்டர். இதில் பயிரிடப்படுகின்ற மொத்தப் பரப்பளவு 58 ஆயிரம் சதுர கிலோ மீட்டர். இதில் 33 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் நீர்ப்பாசன வசதி உள்ளதாகும். 25 ஆயிரம் சதுர கிலோ மீட்டர் புஞ்சை நிலமும், வானம் பார்த்த பூமியாகவும் உள்ளது. 70 சதவிகிதம் மக்கள் விவசாயத்தையே நம்பியிருக்கின்ற ஒரு மாநிலமாகத் தமிழகம் இருந்து வருகிறது. ஆக, தமிழகத்தின் பொருளாதார மேம்பாட்டிற்கு முதுகெலும்பாக இருப்பது விவசாயமும், வேளாண் துறையும்தான். ஆகவே, அந்த வேளாண் துறைக்கு முன்னுரிமை வழங்கி, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எப்பொழுதும் இல்லாத அளவிற்கு 3,704.96 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும், வரும் நிதியாண்டில் உணவு தானிய உற்பத்திக்கு 160 மெட்ரிக் டன் அளவிற்கு இலக்கு நிர்ணயம் செய்திருப்பதும் சிறப்பம்சங்களாகும். அதோடு இந்த நிதியாண்டில், 10 இலட்சம் விவசாயிகளுக்கு காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் கொண்டுவர இருப்பது, நுண்ணீர்ப் பாசன (Micro Irrigation) மானியம் விவசாயிகளுக்கு நேரடியாக வழங்கப்பட இருப்பது, கூட்டுறவு நிறுவனங்களின்மூலம் 4,000 கோடி ரூபாய் பயிர்க் கடன் வழங்கயிருப்பது உள்ளிட்ட செயல்பாடுகள், விவசாயத்தைப் பெருக்க வேண்டும், வேளாண் துறை சிறப்பாக இருக்க வேண்டுமென்று இந்த நிதிநிலை அறிக்கையில் சொல்லியிருப்பது வரவேற்கத்தக்க ஒன்று. *(மேசையைத் தட்டும் ஒலி)*

கடந்த கால ஆட்சியில், நிருவாகத் திறமையின்மையால் மின் பற்றாக்குறை ஏற்பட்டது. அதைப்பற்றி பேச வேண்டாமென்று நினைக்கிறேன். ஆனால், பேச வைத்துவிடுகிறது. எல்லாம் சிறப்பான முறையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்

[திரு. ரா. சரத்குமார்] [2012 ஏப்ரல் 3

எடுத்துச்சொல்லியபடி, மின் பற்றாக்குறைக்குக் காரணம், கடந்த ஆட்சியிலே புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் போடப்பட்டு, போட்டோவுக்கு மட்டும் போஸ் கொடுப்பார்கள். இதைத் திறக்கிறோம், அதைத் திறக்கிறோம் என்று சொல்லி, நிறைய போட்டோவுக்கு போஸ் கொடுப்பார்கள். ஆனால், எதுவும் நடக்காது.

நாங்குனேரி தொழில் பூங்கா ஒன்று அறிவிக்கப்பட்டு கிட்டத்தட்ட 12 ஆண்டுகள் ஆகிவிட்டன. அங்கு நான்கே நான்கு excavator மட்டும் இருக்கின்றன. வேறு எதையும் அவர்கள் செய்யவில்லை. ஆனால், எல்லா திட்டங்களும் அறிவிக்கப்பட்டன. செயல்படுத்தாத திட்டங்கள் பல அறிவிக்கப்பட்டு இருக்கின்றன. ஆக, மின் பற்றாக்குறைக்கான காரணத்தை சிறப்பாக மாண்புமிகு அம்மா அவர்கள் தெரிந்து வைத்திருக்கிறார்கள். மக்களுக்கு எடுத்துச்சொல்ல வேண்டும். Bold-ஆக இருக்க வேண்டும். உண்மையை எடுத்துச்சொல்கின்ற முதலமைச்சரை நாம் பார்க்கிறோம். உண்மை நிலை என்ன என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும். (மேசையைத் தட்டும் ஒலி) உண்மையை உண்மையாகச் சொல்லி, அதை எதிர்கொள்கின்ற சக்தி உள்ள ஒரு மாண்புமிகு முதலமைச்சரை நான் இங்கு பார்க்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

குறிப்பாகச் சொல்லவேண்டுமானால், she is an iron lady like Margaret Thatcher. (மேசையைத் தட்டும் ஒலி) சில சமயங்களில், சில திட்டங்களை நாம் செயல்படுத்தும்போது, அது அன்றைக்கு உள்ள மக்களுக்குப் பாதிப்பாகத் தெரியும். நாம் நாளைய சமுதாயம், நாளைய இளைஞர்களைப்பற்றி சிந்திக்க வேண்டும். அவர்தான் ஒரு visionary. She is a statesman who thinks about the next generation and not of today. (மேசையைத் தட்டும் ஒலி)

கூடங்குளம் அணுமின் நிலையம் நிச்சயமாக இயக்கத்திற்கு வர வேண்டுமென்ற எண்ணத்திலே அதைச் சிறப்பான முறையிலே கையாண்டு, அங்கு உள்ள மக்கள் பாதிப்புக்குள்ளாகிவிடுகிறார்கள் என்ற எண்ணம் அவர்களுக்கு இருக்கிறதே, அவர்களுடைய பயத்தைப் போக்க வேண்டுமென்று படிப்படியாக அதை எப்படி அணுக வேண்டுமோ, அப்படி சிறப்பான முறையிலே அணுகி, அதை உடனடியாகச் செயல்படுத்த, கூடங்குளம் மின் உற்பத்தியை முழுவதுமாகத் தமிழகத்திற்குத் தர வேண்டுமென்று இப்போதுகூட மாண்புமிகு பாரதப் பிரதமர் அவர்களுக்குக் கோரிக்கை



2012 ஏப்ரல் 3] [திரு. ரா. சரத்குமார்]

வைத்துள்ளார்கள். அதற்கு நாம் போராடலாம். அதற்குப் போராட அனைத்துக் கட்சிகளும் வந்தால் அது சிறப்பாக இருக்கும். ஆனால், வரக்கூடாது என்று போராடியவர்கள் சங்கரன்கோவில் இடைத் தேர்தலிலே அது வரவேண்டாமென்று சொன்னவர்கள்தான். அதை நீங்கள் மனதில் கொள்ள வேண்டும். ஆக, அங்கு மின்வெட்டைப்பற்றி சொன்னவர்கள் அணுமின் நிலையத்தைத் திறக்க வேண்டுமென்று அங்கு சொல்லவில்லை. அது வந்தால் இது சரியாகிவிடும் என்பதற்காக சொல்லவில்லை. அது நடக்கக்கூடாது என்று எண்ணினார்கள். இதைத்தான் political mileage என்று சொல்வார்கள். இங்கே மாண்புமிகு அமைச்சர் அவர்களும் சொன்னார்கள். Political mileage மட்டும் இருக்கக்கூடாது. There should be some governance. சில சமயங்களில், இங்கே இருக்கின்ற எதிர்க்கட்சிகளுக்கெல்லாம் there is more politics than governance. They are not thinking of governance or administration. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமிருந்து அதைக் கற்றுக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 12–15

மின் உற்பத்திக்காக, மின் பற்றாக்குறையைச் சமாளிப்பதற்காக, பல மின் திட்டங்களுக்காக 1,500 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பது பாராட்டத்தக்கது. அது மட்டுமல்லாமல், உடன்குடியிலே உறங்கிக் கொண்டிருந்த மின் உற்பத்திக்கான அனல் மின் நிலையத்தை உடனடியாகத் திறப்பதற்கு அரசு 8,000 கோடி ரூபாய் செலவை தானே செய்வதற்கு முன்வந்துள்ளது பாராட்டத்தக்கது. (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழகத்தில் கல்விக் கண் திறந்த பெருந்தலைவரின் புகழை நினைவுகூரும் விதமாக அமைந்துள்ள கன்னியாகுமரி பெருந்தலைவர் காமராஜர் மணிமண்டபத்தையும், சென்னை காமராஜர் நினைவில்லத்தையும் புதுப்பிக்கும் பணிகளை அரசு மேற்கொள்ளவிருப்பதற்கு என் மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். கடந்த ஆட்சியாளர்களிடம் அவற்றை நாங்கள் சுத்தப்படுத்துகிறோம் என்று கேட்டிருந்தோம். இல்லை, இல்லை, நீங்களெல்லாம் அதைச் செய்யக்கூடாது என்று சொல்லி— காடுகளாக இருந்த அந்த இடத்தை உடனடியாகக் கவனித்து, இங்கு மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதுபோல, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனைத்து சமுதாயத்தையும் சமத்துவமாகப்

[திரு. ரா. சரத்குமார்] [2012 ஏப்ரல் 3

பார்த்து (மேசையைத் தட்டும் ஒலி) அனைவரும் சிறப்பாக வாழவேண்டுமென்ற எண்ணத்தை மக்களிடம் பதிக்கின்ற காரணத்தினால், அனைவரையும் பற்றி சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், அனைத்து சமுதாயத்தையும் ஒன்றாக நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். இங்கே அமர்ந்திருக்கும் அனைவரும் கையைக் கீறிப் பார்த்தால் சிவப்பு நிறத்தில்தான் இரத்தம் வரும் என்பதை உணர்ந்த ஒரு முதலமைச்சரை நாம் பெற்றிருக்கின்றோம். மிகவும் சிறப்பான முறையிலே, அது அண்ணல் அம்பேத்கரின் மணிமண்டபமாக இருந்தாலும் சரி, பெருந்தலைவர் காமராஜரின் மணிமண்டபமாக இருந்தாலும் சரி, அது சிறப்பாக இருக்க வேண்டுமென்ற எண்ணத்தைப் பதித்து, பெருந்தலைவர் மணிமண்டபத்தை அவர்கள் உடனடியாகக் கவனித்ததற்கு என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அதேபோல, அரசு ஊழியர்களுக்கு அதிகபட்ச வீட்டு வசதிக் கடன் 15 இலட்சம் ரூபாயிலிருந்து 25 இலட்சம் ரூபாயாக உயர்த்தி வழங்க இருப்பதற்கு அரசு ஊழியர்களின் சார்பாக நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலன், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சிறுபான்மையினர் நலன், மகளிர், குழந்தைகள் நலன், மாற்றுத் திறனாளிகள் நலன், நெசவாளர் நலன், பத்திரிகையாளர்கள் நலன், இலங்கைத் தமிழர்கள் நலன் என அனைத்துத் தரப்பினரையும் திருப்திப்படுத்தும் விதமாக இந்த பட்ஜெட் அமைந்துள்ளது.

'வாரி பெருக்கி வளம்படுத்து உற்றவை
ஆராய்வான் செய்க வினை'

வருவாயை உண்டாக்கி, செல்வத்தைப் பெருக்கி, அம்முயற்சிக்கு வரும் தடைகளை நீக்கி, திறமையுடன் செயல்படுபவரே அரசுப் பணிக்கு ஏற்றவர் என்ற குறளுக்கு ஏற்ப, மாநிலத்தின் நிதிநிலையை மேலும் வலுப்படுத்தும் வகையில், இந்த பட்ஜெட் அமைந்துள்ளது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் சிறந்த முறையிலே ஆட்சி புரிந்துகொண்டிருக்கின்றார்கள். இந்த ஆட்சியிலே அவர்கள் தொலைநோக்குத் திட்டம் 2023 என்று சொல்லும்பொழுது, 11 ஆண்டுகளைப்பற்றிப் பேசுகிறார்கள், அடுத்த ஐந்தாண்டுகளைப்பற்றிப் பேசட்டும் என்று சொல்லி வெளியிலே சிலர் பேசிக்கொண்டிருந்தார்களாம். இந்த ஆட்சி தொடரும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி)



2012 ஏப்ரல் 3] [திரு. ரா. சரத்குமார்]

இந்த 11 ஆண்டுக்காலமும் ஆட்சியில் இருப்பார்கள். இந்த Vision Statement-ஐப் படித்துப் பார்த்தாலே அவர்களுக்குத் தெரியும். அவர்கள் படித்திருப்பார்களா என்பது தெரியாது. Vision Statement-ஐப் படித்துப் பார்க்கும்போது, அனைத்துத் துறைகளிலும், அது கல்வியாகட்டும், சுகாதாரமாகட்டும், Infrastructure Development எதைச் சொன்னாலும் அனைத்தையும் சிந்தித்துப் பார்த்து, சிறப்பான முறையில் இந்தத் தொலைநோக்குத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு முன்னோட்டமாக அமைந்திருக்கிறது இந்த நிதிநிலை அறிக்கை என்று சொல்லி, என் சார்பிலும், சமத்துவ மக்கள் சட்சியின் சார்பிலும் என் தொகுதி சார்பிலும் கேட்டுக்கொண்டு, என் தொகுதிக்கான சில கோரிக்கைகளைப் பதிவு செய்யுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசியை தலைமையிடமாகக் கொண்டு தனி மாவட்டம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி நகராட்சியில் கடும் குடிநீர்த் தட்டுப்பாடு நிலவுகிறது. தாமிரபரணி குடிநீர்த் திட்டம் மூலம் குடிநீர் வழங்கிட 4 இடங்களில் நீர் உந்து நிலையங்கள் உள்ளன. அதில் 4 பகுதி மின் இணைப்புகள் உள்ளன. இந்தத் திட்டத்திற்கு நீர் வழங்கும்போது அந்த இடத்தில் மின்சாரம் இருந்தால் மறு இடத்தில் இருக்காது. இதனால் மின்சாரத் தடையால் நீர் உந்துவதில் தடை ஏற்படுகிறது. இதைத் தவிர்த்திட தாமிரபரணி நீர் உந்துதல் ஆரம்ப இடத்திலிருந்து 4 நிலையங்களுக்கும் ஒரே இடத்திலிருந்து மின் இணைப்பு வழங்க வேண்டும். இதனால் நகராட்சி மக்களுக்குப் போதுமான அளவில் குடிநீர் கிடைத்துவிடும். இந்த இணைப்பிற்கு அரசு உத்தரவிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி நகரில் அமைக்கப்படவுள்ள புறவழிச் சாலைக்கு நிலம் கையகப்படுத்த அரசு நிதி வழங்கியுள்ளது. சாலைக்கும் இந்த ஆண்டே நிதி வழங்கி அப்பணி நிறைவு செய்திட வேண்டும். தென்காசி நகரில் பழைய பேருந்து நிலையம் அருகிலுள்ள குளத்தை ஆழப்படுத்தி, படகுப் போக்குவரத்து மற்றும் இதர ஏற்பாடுகள் செய்து சுற்றுலா இடமாக மாற்றிட ஆவன செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மேதகு ஆளுநர் உரையில் 2011–2012–ல் அறிவிக்கப்பட்ட கால்நடை மருத்துவக் கல்லூரியை தென்காசி தொகுதியில் ஊத்துமலையில் அனுமதித்திட வேண்டும். வீரகேரளம்புதூரில் கால்நடை மருத்துவமனை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. சரத்குமார்] [2012 ஏப்ரல் 3

வீரகேரளம்புதூர் வட்டத்திலுள்ள ஊத்துமலையைச் சுற்றியுள்ள 15 ஊராட்சிகளில் கடும் குடிநீர்ப் பஞ்சம் நிலவுவதால், இதற்கென தாமிரபரணியிலிருந்து ஊத்துமலையை மையமாக வைத்து குடிநீர்த் திட்டம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

வீரகேரளம்புதூர் ஊராட்சி, வீராணம், ஊத்துமலை வழியாக சங்கரன்கோவில், ஆலங்குளம், திருநெல்வேலி செல்லும் அனைத்து சாலைகளும் பழுதடைந்துள்ளன. இதற்கென ஒரு சிறப்பு நிதி ஒதுக்கி சாலைகளை சரி செய்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாவூர்சத்திரம், சுரண்டை ஆகிய இடங்களில் விவசாயிகள் பயிரிடும் காய்கறிகள், பழங்கள், மிளகாய், வெங்காயம் இவற்றைப் பாதுகாத்திட குளிர்சாதன வசதியுள்ள கிடங்குகள் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி தொகுதியில் சுந்தரபாண்டியபுரம், வீரகேரளம்புதூர் ஆகிய இடங்களில் நிரந்தர நெல் கொள்முதல் நிலையங்கள் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஊத்துமலையைச் சுற்றி மேய்ச்சல் நிலங்கள் அதிகம் இருப்பதால், வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ள விவசாயிகள் விவசாயக் கூலிகளுக்காக கறவை மாடுகள், ஆடுகள் அரசின் மானிய உதவி மற்றும் வங்கிக் கடன்மூலம் பெற்றிட அரசு சிறப்புத் திட்டம் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றாலத்தில் ஆண்டு முழுவதும் தண்ணீர் விழுந்திடவும், மக்கள் நாள் முழுவதும் சுற்றுலாவை அனுபவிக்கவும் ஒரு கொள்கை விளக்கப் பூங்கா அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தேசிய வேளாண்மை அபிருத்தித் திட்டத்தில் தென்காசி பகுதி விவசாயிகளுக்கு விதை சேமிப்புக்கு ஒதுக்கப்பட்ட ரூ.25 இலட்சத்தில் வேறு இடம் தேர்வு செய்து விதை சேமிப்புக் கிடங்கு கட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசியில் அமைந்துள்ள பட்டு வளர்ச்சித் துறையில் ஊழியர் எண்ணிக்கையைக் கூடுதலாக்கி பட்டு வளர்ச்சியை விவசாயிகளிடம் விளக்கி அதிக அளவு வளர்த்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 3] [திரு. ரா. சரத்குமார்]

தென்காசி நகரில், நகரப் பாதுகாப்புக்காக மேலும் ஒரு காவல் நிலையம் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றாலத்தில் சுற்றுலா வளர்ச்சிக் கழக அலுவலகம் ஒன்றைத் திறந்து, மக்களுக்கு வழிகாட்ட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

திருக்குற்றாலக் குறவஞ்சியைப் பாடிய திரிகூட ராசப்ப கவிராயருக்கு விழா எடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

குற்றாலத்தின் அருகிலுள்ள கேரள அரசின் கல்லடாவில் உள்ள அனைத்து வசதிகளுடன்கூடிய சுற்றுலா மையத்தைப்போல் குற்றாலத்தை அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் அமைத்திடவும், இதற்கென முன்பு மருத்துவமனையாக இருந்த இடத்தினைப் பயன்படுத்திடவும் வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாவூர்சத்திரத்தில் அமைக்கப்பட்டுள்ள பெருந்தலைவர் காமராஜர் சிலையிலிருந்து திருநெல்வேலி செல்லும் சாலையில் சுமார் இரண்டு கிலோ மீட்டர் அளவுக்கு வாறுகால், சிறுபாலங்கள் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தென்காசி தலைமை மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வசதி செய்து தந்து போதுமான மருத்துவர்களையும் இதர அலுவலர்களையும் நியமித்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தென்காசி அரசு மருத்துவமனையில் சி.டி. ஸ்கேன் வைப்பதற்கு கட்டடமும், சித்த மருத்துவப் பிரிவுக்கு வழங்கப்பட்ட கருவிகளை மக்கள் பயன்படுத்திட ஒரு கட்டடமும் கட்ட நிதி ஒதுக்கிட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பாவூர்சத்திரம், சுந்தரபாண்டியபுரம், அரியப்பபுரம் ஆகிய இடங்களிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்களில் பெண் மருத்துவர்களை நியமிப்பதோடு, போதுமான மருத்துவர் மற்றும் ஊழியர்கள் நியமித்திட வேண்டும். மேலும், நோயாளிகளுக்கு ஒவ்வொரு நிலையத்திலும் 20 படுக்கைகள் அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுரண்டை பேரூராட்சிப் பகுதியில் அரசுப் பேருந்துப் பணிமனை ஒன்று அமைத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[திரு. ரா. சரத்குமார்] [2012 ஏப்ரல் 3

கிராமங்களிலுள்ள அனைத்து மக்களுக்கும் கழிவறை வசதியை அரசே செய்து கொடுத்திட வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

***டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2012–2013 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையின்மீது புதிய தமிழகம் கட்சியினுடைய கருத்துகளைப் பதிவு செய்வதற்கு வாய்ப்புத் தந்திருக்கக்கூடிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

ஒண்டுக் குடித்தனம் நடத்தக்கூடிய ஒரு மனிதன் மூன்று வேளைகளைப்பற்றி மட்டும் சிந்திக்கிறான். ஒரு குடும்பத் தலைவன் அதிகபட்சம் ஒரு மாதத்திற்கான பட்ஜெட்டைப் போடுகிறான். சாதாரணமான ஓர் அரசு ஒரு வருடத்திற்குண்டான நிதிநிலை அறிக்கையைத் தயார் செய்கிறது. ஆனால், வரலாற்றுப் புருஷர்கள் மட்டுமே அடுத்த தலைமுறையைப்பற்றி சிந்திக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்த அடிப்படையிலே 2023–ஐ இலக்காக வைத்து 2012 ஆம் ஆண்டே நிதிநிலை அறிக்கை தயார் செய்திருக்கக்கூடிய தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களை நான் மனதாரப் பாராட்டுகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டிலும் எந்த அம்சத்தையும் அவர் விட்டு வைக்கவில்லை. வரிக்கு வரி – inclusive growth—அதாவது அனைத்து சமுதாயத்தையும், அனைத்துத் தரப்பினரையும் உள்ளடக்கிய வளர்ச்சி என்பதையும், சமூகக் கண்ணோட்டத்தையும் கொண்டே இந்த நிதிநிலை அறிக்கை தயார் செய்யப்பட்டிருக்கிறது. எனவே, அதற்காக நாங்கள் பாராட்டுகிறோம்.

பிற்பகல் 12–20

அதேபோன்றதுதான், 10 அம்சங்களைக் கொண்ட 2023 ஆம் ஆண்டு தொலைநோக்குத் திட்டமும். எந்த ஓர் அரசுமே இலக்கு இல்லாமல் தன்னுடைய பயணத்தை மேற்கொள்ள முடியாது. அந்த வகையிலே, தமிழ்நாட்டினுடைய அரசியல் வரலாற்றில் முதல்முறையாக துணிவோடு, தைரியத்தோடு எதிர்கொள்ளும் நோக்கத்தோடும், நாம் எதைச் சொன்னாலும் நிச்சயமாக செய்து காட்ட முடியும் என்ற நம்பிக்கையோடும் இந்த 2023 ஆம் ஆண்டு



2012 ஏப்ரல் 3] [டாக்டர் க. கிருஷ்ணசாமி]

தொலைநோக்குத் திட்டத்தை அறிவித்ததோடு, அதற்குண்டான பணிகளை இப்போதே துவக்குவதற்கு 1,000 கோடி ரூபாயை இந்த நிதிநிலை அறிக்கையில் அறிவித்த மாண்புமிகு முதலமைச்சர் அவர்களை நான் பாராட்டுகிறேன்.

தமிழ்நாட்டினுடைய முதன்மைத் துறையாக விளங்கும் விவசாயத் துறைக்கு ரூபாய் 3,800 கோடி ஒதுக்கப்பட்டிருக்கிறது. விவசாயம் என்று வருகின்றபோது, அதிலே மிக முக்கியமாக கவனிக்கப்பட வேண்டியவை இரண்டு. ஒன்று உற்பத்தி, இன்னொன்று விற்பனை. உற்பத்தி என்று வருகின்றபோது, நல்ல தரமான விதைகள், குறைவான விலையிலே தரமான, கலப்படமற்ற உரங்கள் இவைதான் நமக்கு முக்கியம். அனைத்திற்குமே இதிலே உறுதி செய்யப்பட்டிருக்கிறது.

அதேபோல, விற்பனை என்று வருகின்றபோது ஒரு விவசாயி என்னதான் கஷ்டப்பட்டு உற்பத்தி செய்தாலுங்கூட, விளைபொருட்கள் விற்பனைக்குச் செல்கின்றபோது கூடுதல் விலை கிடைக்கவில்லை என்று சொன்னால் அவன் விவசாயத்திலே நாட்டம் கொள்ளமாட்டான். அதை ஊக்குவிக்கக்கூடிய வகையில் இப்போது சாதாரண ரக நெல்லுக்கு ரூ.50–ம், சன்ன ரக நெல்லுக்கு ரூபாய் 70–ம் ஊக்கத் தொகை கொடுக்கப்பட்டிருக்கிறது. இருந்தாலுங்கூட, விவசாயம் என்பது மிக, மிக முக்கியமானது. எந்த நாட்டிலும் எந்தத் தொழில் வேண்டுமென்றாலும் வளரலாம், வளராமல் போகலாம், ஆனால், விவசாயம் இல்லையென்று சொன்னால், அந்த நாட்டினுடைய ஒட்டுமொத்த வளர்ச்சியும் தடைப்பட்டுவிடும். எனவே, மருத்துவப் படிப்பிற்குப் படிப்பவர் மருத்துவர் ஆன பிறகு அவர்கள் மருத்துவத் தொழில் செய்கிறார்கள். அவர்கள் அரசுத் துறையிலோ தனியார் துறையிலோ வேலையில் சேரலாம். அதேபோல, பொறியியல் படிப்பு படித்த பிறகு அரசு வேலைக்கோ, தனியார் துறை வேலைக்கோ வருகிறார்கள். வழக்குரைஞர்கள் வழக்குரைஞராக வேலை பார்ப்பர். ஆனால், விவசாயக் கல்லூரியில் படித்தவர்கள் மட்டும் அரசு வேலையை மட்டுமே நாடிப் போகிறார்கள். எனவே, விவசாயத்துக்குப் படிக்கக்கூடியவர்களுக்கு ஊக்கமளிக்கும் வகையில் நேரடியாக அவர்கள் விவசாயத்திலே ஈடுபடக்கூடிய வகையில், அவர்கள் வெறும் ஆலோசகர்களாக மட்டும் இல்லாத நிலையிலே, அவர்களிடத்திலே தரிசாக இருக்கக்கூடிய நிலங்கள், அல்லது வெறுமனே இருக்கக்கூடிய நிலங்களைக் கொடுத்து அவர்களும் நேரடியாக விவசாயத்திலே ஈடுபட ஊக்குவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

[டாக்டர் க. கிருஷ்ணசாமி] [2012 ஏப்ரல் 3

மேலும், விவசாயத்தைப் பொறுத்தமட்டிலும், விலை நிர்ணயம் என்பது மிக முக்கியமானது. அதிகமாக உற்பத்தி ஆகின்றபோது விலை வீழ்ந்தால், அதன் காரணமாக விவசாய உற்பத்தி குறைவதற்கும் வாய்ப்பு இருக்கிறது. எனவே நெல்லுக்கும், கரும்புக்கும், அதேபோல பயறு வகைகளுக்கும் விலை நிர்ணயம் நிச்சயமாகச் செய்தாக வேண்டும். எந்தக் காரணத்தைக் கொண்டும், எந்தச் சூழ்நிலையிலும் விவசாயத்தை நம்பி ஏமாறாத ஒரு சூழ்நிலையை உருவாக்க வேண்டும் என்று நான் இந்த நேரத்திலே வலியுறுத்துகிறேன்.

அதேபோல தொழில்களைப் பொறுத்தமட்டிலும், இப்போது பன்னாட்டுக் குழுமங்களுக்கு நீங்கள் வரவேற்பு அளிக்கிறீர்கள். 20,000 கோடி ரூபாய் இந்த ஆண்டிலேயே முதலீடு வரும் என்று இந்த அரசு சொல்லியிருக்கிறது. ஆனால் அதேசமயத்தில், பன்னாட்டுக் கம்பெனிகளுக்கு இலாபம் ஒன்றே குறிக்கோளாக இருக்கும். இதே நிதிநிலை அறிக்கையிலே குறிப்பிட்டதைப்போல சிறு, குறு நடுத்தரத் தொழில்களிலே மட்டும் 50 இலட்சம் பேருக்கு வேலைவாய்ப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. பெரிய பன்னாட்டுக் குழுமங்களுக்குக் கொடுக்கக்கூடிய வசதி வாய்ப்புகள், அதாவது இலவச நிலம், குறைந்த விலையிலே மின்சாரம், அதேபோல தண்ணீர், 15 அல்லது 20 ஆண்டுக் காலத்திற்கு வரி விலக்குகள் இதுபோன்ற சலுகைகள் எல்லாம் இந்த நாட்டிலே உருவாகக்கூடிய பொறியியல் வல்லுநர்கள், சுயதொழில் முனைவோருக்கு அளிக்கின்றபட்சத்தில் நிச்சயமாக நம்முடைய சொந்தக் காலிலே நீண்ட நெடுநாளுக்கு நிற்க முடியும். அதை ஊக்குவிக்கக்கூடிய வகையிலேதான் இந்த அரசு ஆண்டுக்கு 1,000 பேருக்கு 25 இலட்சம் ரூபாய் மானியத்திலே அந்தச் சலுகைகள் அளித்து பெண்களுக்கும் 50 சதவிகிதம் என தொழில் முனைவோரை உருவாக்கத் திட்டமிட்டிருக்கிறது. ஆனால் அதைவிடக் கூடுதலாக 1,000, 2,000, 3,000, 5,000 பேருக்கு என்று உயர்த்தி அதிகமான தொழில் முனைவோரை நமது மாநிலத்திலே உருவாக்கக்கூடிய நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று நான் வலியுறுத்துகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் கிருஷ்ணசாமி அவர்கள் பேசுகின்றபோது வெளிநாடுகளிலே இருந்து வருகின்ற



2012 ஏப்ரல் 3] [திரு. பி. தங்கமணி]

கம்பெனிகளுக்கு அதிக சலுகைகள் கொடுக்கிறார்கள். உள்நாட்டிலே இருக்கிற தொழிற்சாலைகளை ஊக்குவிக்க வேண்டுமென்று சொல்கிறார்கள். மாண்புமிகு உறுப்பினர்கள் எல்லாரும் தவறாக நினைக்கிறார்கள். உள்நாட்டிலேயும் இதைப்போன்று அதிக முதலீடு செய்கின்றவர்களுக்கு சலுகைகள் இருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தெரிந்துகொள்ள வேண்டும் என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் உள்நாட்டிலே இருப்பவர்களை ஊக்குவிக்கவில்லை என்று சொல்லவில்லை. தமிழ்நாடு அரசு இப்போது இந்த ஆண்டே 1,000 பேருக்கு அந்த சிறு, குறு, நடுத்தரத் தொழிலுக்கு ஊக்கமளிக்கிறது. இருந்தாலுங்கூட பன்னாட்டுக் கம்பெனிகளின் நோக்கமெல்லாம் 15 ஆண்டு காலம், 20 ஆண்டுகாலம் திட்டமிட்டு உள்ளே வருவார்கள். முதலீடு செய்வார்கள், அதிக இலாபத்தை எடுத்துக்கொண்டு போய்விடுவார்கள், அவர்களால் பெரிய நலன் ஒன்றும் இந்த மண்ணுக்கு வந்துவிடாது.

பிற்பகல் 12–25

ஒரு பக்கம் அவர்களை வரவழைக்கின்றபொழுது, வெளிநாட்டினுடைய நிதியாதாரங்களைப் பெற்றுக்கொண்டிருக்கின்ற பொழுது, நம்முடைய உள்நாட்டிலேயும் உற்பத்தியைப் பெருக்கி ஒரு குறிப்பிட்ட காலத்திற்குப் பிறகு, வெளிநாட்டின் தொழில்நுட்பத்தை மட்டும்தான் பெற வேண்டுமே தவிர, முதலீட்டைப் பெற முடியாத அளவிற்கு தமிழ்நாட்டை 2023 ஆம் ஆண்டிலாவது உருவாக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய நோக்கம். அந்த அடிப்படையிலேதான் நான் சொல்லியிருக்கிறேன்.

அடுத்தது, இந்த நிதிநிலை அறிக்கையிலே, வருவாய்த் துறை பற்றி ஒரு கருத்துச் சொல்லப்பட்டிருக்கிறது. ஒரு இலட்சம் பேருக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. அதை நாங்கள் வரவேற்கின்றோம். ஏனென்று சொன்னால், தமிழ்நாட்டிலே ஏறக்குறைய 15 இலட்சம் பேருக்கும் மேலாக இலவச வீட்டுமனைப் பட்டாவை எதிர்பார்த்து

*[டாக்டர் க. கிருஷ்ணசாமி]* [2012 ஏப்ரல் 3

*காத்துக்கொண்டிருக்கிறார்கள். ஆனால், அந்த ஒரு இலட்சம் பேருக்குப் பட்டா கொடுப்பதற்கு, தமிழ்நாட்டைப் பொறுத்தளவில் இப்பொழுது புறம்போக்கு நிலங்கள் எதுவும் இல்லையென்று ஏற்கெனவே அரசு அறிவித்திருக்கிறது. எனவே, அந்த ஒரு இலட்சம் பேருக்குப் பட்டா கொடுப்பதற்கு ஏதாவது. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், ஆறே மாத காலத்தில் ஒரு இலட்சம் என்பதைக் காட்டிலும், 1,18,000 பேருக்குப் பட்டா வழங்கப்பட்டது என்பதை மகிழ்ச்சியோடு தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 15 இலட்சம் பேருக்கும் பட்டா கொடுக்க வேண்டும் என்பது எங்களுடைய கோரிக்கை. சில நேரங்களில் இது வெறும் அறிக்கையாக இருக்கிறதே தவிர, நடைமுறைக்கு வருவதே கிடையாது. எனவே, ஒரு இலட்சம் பேருக்கும் பட்டா கொடுப்பதற்கும் நிதி ஒதுக்க வேண்டும். அரசிடத்திலே இப்பொழுது நிலங்கள் இல்லாத சமயத்தில், அரசே விலை கொடுத்து நிலங்களை வாங்க வேண்டிய சூழ்நிலைகள் ஏற்படும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறபொழுது, ஒரு இலட்சம் என்று இலக்கு இருந்தது ஓராண்டுக்குள். ஆனால், ஆறு மாத காலத்திலே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய ஆட்சியில், மனிதநேயத்தைக் காட்டுகின்ற வகையிலே, 1,18,000 பேருக்கு இப்போது பட்டா வழங்கப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*



2012 ஏப்ரல் 3]

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கையின் பல்வேறு நல்ல அம்சங்களில், மாண்புமிகு முதல்வர் அவர்கள் தன்னுடைய 2023 ஆம் ஆண்டு இலக்கை நிறைவேற்றக்கூடிய வகையிலே, பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருக்கிறார்கள். தொடர்ந்து நாங்கள், தென் தமிழகத்திலிருந்து வரக்கூடிய அரசியல் தலைவர்கள், 'வடக்கு வாழ்கிறது, தெற்கு தேய்கிறது' என்று கடந்த 10 ஆண்டு காலமாக சொல்லி வருகிறோம். தென் மாவட்டங்கள் குறிப்பாக திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் மற்றும் இராமநாதபுரம் போன்ற மாவட்டங்களில் எல்லாம் தொழில் வளர்ச்சி குன்றியிருக்கிறது. விவசாயம் என்று சொன்னாலும், தொழில் என்று சொன்னாலும், போக்குவரத்து என்று சொன்னாலும், மருத்துவம் என்று சொன்னாலும், கல்வி என்று சொன்னாலும் எல்லாவற்றிலுமே 'தென் தமிழகம்' பின்தங்கி இருக்கிறது என்று சொல்லியிருக்கிறோம். ஆனால், இப்பொழுது இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தமட்டிலும், அந்தப் பிரச்சினையை தமிழ்நாட்டு முதலமைச்சர் அவர்கள் சரியாகக் கணித்து* State-balanced growth—*அதாவது மாநிலத்தில் சரிசமமான வளர்ச்சி என்பதை அவர்கள் குறிப்பிட்டிருப்பது வரவேற்கக்கூடியது.*

*எனவே, அடுத்து எந்தத் தொழிற்சாலைகள் தொடங்கப்பட்டாலும், அது பெரிய தொழிற்சாலையாக இருந்தாலும், நடுத்தரத் தொழிற்சாலையாக இருந்தாலுங்கூட, தென் தமிழகத்தை மையமாக வைத்து, திருநெல்வேலி, தூத்துக்குடி போன்ற மாவட்டங்களை மையமாக வைத்து அமைக்கப்பட வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள்.*

*அடுத்து, ஒடுக்கப்பட்ட மக்களுக்காக இந்த ஆண்டு 6,100 கோடி ரூபாயை ஒதுக்கியிருக்கிறீர்கள். அதை நான் வரவேற்கிறேன். அதேசமயத்தில், 6,100 கோடி ரூபாய் நிதி ஒடுக்கப்பட்ட மக்களுக்கே, பட்டியல் இன மக்களுக்கே போய்ச் சேர வேண்டுமென்பதை அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். அதை நாங்கள் வரவேற்கிறோம். போய்ச் சேர வேண்டும்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. ந. சுப்ரமணியன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சியில்தான் 6,108.60 கோடி ரூபாய் அளவிற்கு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. இது தாழ்த்தப்பட்ட மக்களின் விகிதாச்சாரத்தைக் காட்டிலும் அதிகமாக 21.82 சதவிகித அளவுக்கு ஒதுக்கியுள்ளார்கள் என்பது (மேசையைத் தட்டும் ஒலி) பட்ஜெட் புத்தகத்தின் 68 ஆம் பக்கத்திலே குறிப்பிடப்பட்டுள்ளது. இந்தத் திட்டத்தினுடைய முழுப் பயன்களும் ஆதி திராவிடர்களையே சென்றடையும் என்பதை உறுதியாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதன் முழுப் பயன்களும் ஆதி திராவிடர்களைச் சென்றடையும் வகையில் அனைத்து நடவடிக்கைகளையும் இந்த அரசு மேற்கொள்ளும் என்று சொல்லியிருப்பதை நான் வரவேற்கிறேன். ஒரே ஒரு வேண்டுகோள் என்னவென்றால், 1,000 கோடி ரூபாய் மட்டும்தான் ஆதி திராவிடர் அல்லது பட்டியல் இனத்தவர் துறையின்கீழ் இருக்கிறது. மீதி 5,000 கோடி ரூபாய் பிற துறைகளில் இருக்கிறது. எனவே, இந்த நிதி செவ்வனே போய்ச் சேருவதைக் கண்காணிப்பதற்குத் தனியாக ஒரு மூத்த ஐ.ஏ.எஸ். அதிகாரியினுடைய தலைமையின்கீழ் ஒரு குழு அமைக்க வேண்டுமென்பதுதான் எங்களுடைய வேண்டுகோள். நோக்கம் நல்ல நோக்கம், அது போய்ச் சென்றடைவதைக் கண்காணிப்பதற்கு ஒரு குழு வேண்டும்.*

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி இந்த ஆட்சியில் அவர்களையே போய்ச் சேரும் என்பதில் யாருக்கும் எந்தவித ஐயப்பாடும் இருக்க வேண்டிய அவசியமில்லை. (மேசையைத் தட்டும் ஒலி) ஆதி திராவிடர் நலத் துறையில் ஒரு தொகையும், வேறு துறைகளில் சில தொகைகளும் ஒதுக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இந்தத் தொகைகள் எல்லாம்*



*ஆதி திராவிட மக்களைச் சென்றடைகிறதா என்பதைக் கண்காணிக்க ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி வேண்டுமென்று மாண்புமிகு உறுப்பினர் கேட்டிருக்கிறார். அது தேவையில்லை என்பது இந்த அரசின் கருத்து.*

*உதாரணத்திற்கு, இலவச கறவை மாடுகள், ஆடுகள் வழங்குகிற திட்டத்தில் பயனாளிகளில் 30 சதவிகிதம் பேர் ஆதி திராவிடர்களாக இருக்க வேண்டுமென்று (மேசையைத் தட்டும் ஒலி) அரசே நிர்ணயித்துள்ளது. இதைக் கண்காணிக்க தனியாக ஒரு ஐ.ஏ.எஸ். அதிகாரி இல்லை. அந்தத் துறை அதிகாரிதான் அதைக் கவனிக்கிறார். ஆதி திராவிடர் மக்களை இந்த மாடுகளும், ஆடுகளும் செவ்வனே போய்ச் சேர்ந்து கொண்டிருக்கின்றன என்பதை உதாரணத்திற்காகச் சொல்கிறேன். இதைப்போலத்தான், மற்ற துறைகளில் ஒதுக்கப்பட்டிருக்கிற நிதியும் ஆதி திராவிட மக்களையே சென்றடையும் என்பதில் யாருக்கும் எந்தவித ஐயப்பாடும் தேவையில்லை. (மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் க. கிருஷ்ணசாமி அவர்கள்.*

**டாக்டர் க. கிருஷ்ணசாமி:** *நன்றி. தமிழ்நாடு அரசினுடைய வரலாற்றில் இதுவரையிலும் பள்ளி மாணவர்களுக்கும், கல்லூரி மாணவர்களுக்கும் மட்டுமே உதவித் தொகை வழங்கப்பட்டு வந்தது. ஆனால், தனியார் பொறியியல் கல்லூரிகளில், ஒவ்வொரு ஆண்டும் 20 ஆயிரத்திற்கும் மேற்பட்ட இடங்களை அரசு அளித்தும்கூட, கட்டணத்தைச் செலுத்த முடியாத காரணத்தினாலே, மாணவர்கள், குறிப்பாக பட்டியல் இன மாணவர்கள் சேர முடியாத நிலைமை இதுவரையில் இருந்தது. இதையறிந்து இப்போது 100 கோடி ரூபாய்க்கும் மேலாக அரசு இதற்கென சிறப்பாக நிதி ஒதுக்கியிருக்கிறது. இதற்காகத் தமிழக அரசை நாங்கள் மனதாரப் பாராட்டுகிறோம். இருந்தாலும்கூட, இது போதாது என்பது என்னுடைய கருத்து. ஒருவேளை 200 கோடி ரூபாய் தேவைப்படுகின்றபோது, அதையும் இந்தச் சிறப்பு உட்கூறு திட்டத்திலேயிருந்தாவது தமிழ்நாடு அரசு ஒதுக்க வேண்டுமென்று நான் அன்புடன் இந்த அரசைக் கேட்டுக்கொள்கிறேன்.*

*அடுத்து, நீண்ட நெடு நாட்களாகத் தென் தமிழக மக்கள் 'தேவேந்திர குல வேளாளர்' என்ற பெயரை அறிவிக்க வேண்டுமென்று கோரிக்கை விடுத்து வருகிறார்கள். தமிழ்நாடு அரசு*

அதைப் பரிவுடன் கவனித்து, அதை அறிவிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தியாகி இமானுவேல் சேகரன் அவர்களின் பிறந்த நாளை, நினைவு நாளை அரசு விழாவாகக் கொண்டாட வேண்டும். அதேபோல, சுந்தரலிங்கத்தினுடைய பெயரிலே ஒரு நினைவு மண்டபத்தைச் சென்னையிலே அமைக்க வேண்டும்.

அதேபோல, ஏறக்குறைய 32 அரசுப் பல்கலைக்கழகங்கள் இருக்கின்றன. அந்தப் பல்கலைக்கழகங்களுக்கான துணை வேந்தர் பணியிடங்களை, அங்குள்ள மற்ற பணியிடங்களை இட ஒதுக்கீட்டின் அடிப்படையில் நிரப்புகின்றபோது, ஒரேயொரு ரோஸ்டர் முறையைக் கையாள வேண்டும். அதேபோல, அண்மையில் உள் இட ஒதுக்கீட்டில் ஏற்பட்டிருக்கக்கூடிய முறைகேடுகளையும், தவறுகளையும் திருத்துவதற்கும் இந்த அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, என்னுடைய உரையை முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

***முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே தாக்கல் செய்த 2012–2013 ஆம் ஆண்டிற்கான நிதிநிலை அறிக்கையிலே இடம் பெற்றுள்ள, மக்களுக்குப் பயனளிக்கக்கூடிய பல்வேறு திட்டங்களை முதலிலே நான் மனதார வரவேற்கிறேன்.

பேரிடர் நேரிடும்போது விரைவாகவும், திறமையாகவும் செயல்படக்கூடிய மாநிலப் பேரிடர் மீட்புப் படை ஏற்படுத்தப்படும் என்ற அறிவிப்பை, மனித நேய மக்கள் கட்சி வரவேற்கின்றது. 2004 டிசம்பர் மாதத்திலே ஏற்பட்ட ‘சுனாமி’ என்ற ஆழிப்பேரலை தமிழகத்திலே மிகப் பெரிய அழிவுகளை ஏற்படுத்தியபோது, நான் சார்ந்திருக்கக்கூடிய தமிழ்நாடு முஸ்லிம் முன்னேற்றக் கழகத்தினுடைய தொண்டர்கள், சென்னையிலே பட்டினப்பாக்கம் தொடங்கி, கன்னியாகுமரியிலே குளச்சல் வரை மீட்புப் பணிகளிலே ஈடுபட்டார்கள். அதேபோல, இராமநாதபுரத்திலே சில ஆண்டுகளுக்கு முன்பு சனவெளியிலே ஏற்பட்ட காட்டாற்று வெள்ளத்திலே பேருந்து ஒன்று அடித்துச் செல்லப்பட்டபோதும், எங்களுடைய தொண்டர்கள் அங்கு மீட்புப் பணியிலே ஈடுபட்டார்கள். எனவே, அதனுடைய முக்கியத்துவத்தை நன்கு





உணர்ந்த காரணத்தினால், இந்தியாவிலேயே வேறு எந்த மாநிலத்திலும் இல்லாத அளவிற்கு, தேசிய பேரிடர் மீட்புப் படையைப் போல, தமிழகத்திலே முதன்முதலாக ஒரு மாநிலம் தழுவிய மீட்புப் படை அமைக்கப்படும் என்று அறிவித்திருக்கிற அறிவிப்பை நான் அனுபவபூர்வமாக வரவேற்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

நமது மாநிலத்தின் பல்வேறு பகுதிகளில் உள்ள வளர்ச்சி தொடர்பான ஏற்றத்தாழ்வுகளைப் போக்குவதற்காக, 100 பின்தங்கிய வட்டாரங்களும், பின்தங்கிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளும் கண்டறியப்பட்டு, குறைபாடுகளைக் களைவதற்காக மாநில சரிநிகர் வளர்ச்சி நிதி என்று ஒரு நிதி உருவாக்கப்படும் என்றும், தற்போது இதற்காக ரூபாய் 100 கோடி ஒதுக்கப்படும் என்ற அறிவிப்பையும் நான் வரவேற்கின்றேன். ‘தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம்’ என்ற புதிய திட்டத்தின்கீழ் நகர்ப்புற ஏழைகளுக்கு வாழ்வாதாரப் பாதுகாப்பு அளிக்கப்படும் என்ற அறிவிப்பும் வரவேற்கத்தக்கது.

பிற்பகல் 12–35

தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட கல்லூரி மாணவர்கள் தங்கக்கூடிய அரசினர் விடுதிகளுக்கு, மாணவர்கள் வசதிக்காகக் கட்டில்கள் வழங்கப்படும் என்ற அறிவிப்பையும் (மேசையைத் தட்டும் ஒலி) ஒரு முன்னாள் கல்லூரி ஆசிரியர் என்ற முறையிலே நெஞ்சார வரவேற்கின்றேன்.

இலங்கை அகதிகள் வாழும் தற்காலிகக் குடியிருப்புகளில் 25 கோடி ரூபாய் செலவிலே 2,500 வீடுகள் கட்டப்படும் என்றும், தமிழக அரசின் அனைத்து சமூக நலத் திட்டங்களும் அவர்களுக்குக் கிடைக்க வழிவகுக்கப்படும் என்ற அறிவிப்பையும் நான் பாராட்டுகிறேன்.

இராமநாதபுரம் மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை 5.75 கோடி ரூபாய் மதிப்பீட்டில் புத்துயிரூட்டப்பட்டு, செயல்பாட்டுக்குக் கொண்டுவரப்படும் என்ற அறிவிப்புக்கு முகவை மாவட்டத்தின் மக்கள் சார்பாக என் நெஞ்சார்ந்த நன்றியை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகிறேன்.

இதேபோல, பாரத ரத்னா எம்.ஜி.ஆர். அவர்களின் முயற்சியால் உருவாக்கப்பட்ட, முழு மாவட்டத் தகுதியைப் பெற்ற

இராமநாதபுரத்திலே, குறிப்பாக இராமநாதபுரம் தொகுதியிலே மருத்துவக் கல்லூரி இந்த ஆண்டு தொடங்கப்படுவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

இராமநாதபுரம் தொகுதியிலே கடல் தொழில் சார்ந்த தொழில் பூங்கா அமைப்பதற்கும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆவன செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

இராமநாதபுரத்திலிருந்து பிரிந்து சென்ற விருதுநகர், சிவகங்கை ஆகிய மாவட்டங்களிலே போக்குவரத்து மண்டலங்கள் உருவாக்கப்பட்டு, தேவையான அளவுக்குப் பேருந்துகள் விடப்பட்டுள்ளன. ஆனால், தாய் மாவட்டமான இராமநாதபுரத்தைத் தலைநகராகக் கொண்டு இன்னும் போக்குவரத்து மண்டலம் உருவாக்கப்படவில்லை. இதன்காரணமாக, மாவட்டத்தில் இன்னும் பல ஊர்களுக்குப் போதிய பேருந்து வசதி இல்லை. வேறு மாவட்டங்களில் பயன்படுத்தப்பட்ட பழைய பேருந்துகளை இங்கே அனுப்பி வைக்கின்றார்கள். இந்தப் பேருந்துகளை நம்பி ஏறினால், Breakdown ஆகி பாதி வழியிலேயே நிற்க வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படுகிறது. பல பேருந்துகளில் மழைக்காலங்களிலே குடை பிடித்துச் செல்ல வேண்டிய நிலையும் இருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழைக்காலங்களில் குடை பிடித்து, பேருந்திலே சென்றதெல்லாம் கடந்த தி.மு.க. ஆட்சியிலே. (மேசையைத் தட்டும் ஒலி) ஏனென்று சொன்னால், தமிழகத்தினுடைய அரசியல் வரலாற்றில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே நேரிடையாக போக்குவரத்துக் கழகத்தினுடைய பணிமனைக்குக் குறுகிய காலத்தில் இரண்டு முறை வருகை தந்து (மேசையைத் தட்டும் ஒலி) புதிய பேருந்துகளை, புதிய வழித்தடங்களைத் துவக்கி வைத்து, மக்களுக்கு சேவை ஆற்றக்கூடிய அரசு மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய நல்ல அரசு.

புரட்சித் தலைவி அம்மா அவர்கள் 2011–2012 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே 3,000 புதிய பேருந்துகள் வாங்கவும்,





2012–2013 ஆம் ஆண்டுகளில் 3,000 புதிய பேருந்துகள் வாங்கவும் உத்தரவிட்டு இருக்கின்றார்கள். அதுமட்டுமல்ல; தமிழகத்தில், மற்ற மாநிலங்களில் இல்லாத நடைமுறைகளாக, புதிய நடைமுறைகளாக, நல்ல நிலையில் இருக்கக்கூடிய என்ஜின் அடிச்சட்டங்களை உடைய வண்டிகளில் கூண்டுகள் பழுதடைந்து இருப்பதைப் புதுப்பிப்பதற்காக 97.58 கோடி ரூபாய் நிதியைக் கொடுத்து, 1,432 புதுப்பிக்கப்பட்ட பேருந்துகளை மக்களுக்குச் சேவை செய்வதற்காக வழங்க இருக்கின்றார்கள்.

மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், அவர்களுடைய தொகுதியில், எந்தெந்த ஊர்களுக்குப் பேருந்து வசதி இல்லை என்ற எழுதிக்கொடுப்பார்களேயானால், மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுத்து பேருந்துகளை இயக்குவதற்கு ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** முனைவர் ஜவாஹிருல்லா, பொத்தாம்பொதுவாக சொல்லக்கூடாது. Specific ஆகச் சொல்லுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய அறிவிப்புக்கு நன்றி. மிக முக்கியமாக, இராமநாதபுரம் உட்கோட்டம் அதிகமான வசூலைத் தரக்கூடிய உட்கோட்டம். இராமநாதபுரத்தைத் தலைமையகமாகக் கொண்டு ஒரு புதிய போக்குவரத்து மண்டலம் உருவாக்க வேண்டுமென்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தனியார் துறையில் வேலைவாய்ப்பினை உருவாக்கித் தருவதற்காக 32 மாவட்டங்களிலும், 37 மாவட்ட அளவிலான உதவி மையங்கள் 193.20 இலட்சம் ரூபாய் செலவில் அமைக்கப்படும் என்றும், தனியார் துறையின் பங்களிப்புடன் தமிழக இளைஞர்களின் திறன் மேம்பாட்டிற்காகப் புதுமையான உத்திகளைக் கொண்ட பயிற்சித் திட்டங்கள் வடிவமைக்கப்படும் என்ற தமிழக அரசின் அறிவிப்பை வரவேற்கின்றேன்.

Fortune 500 நிறுவனங்கள் உட்பட பல்வேறு தலைசிறந்த நிறுவனங்களுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் விரைவில் கையெழுத்திடப்படவுள்ளன என்றும் இந்த வரவு–செலவு அறிக்கையிலே அறிவிக்கப்பட்டுள்ளது. இதை வரவேற்கக்கூடிய அதே நேரத்தில், சமூக நீதியை நிலைநாட்டுவதில் பெரும் அக்கறையுடைய நமது முதலமைச்சர் அவர்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுக்க

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2012 ஏப்ரல் 3

விரும்புகின்றேன். நமது மாநில அரசின் பல்வேறு சலுகைகளை அனுபவிக்கும் இந்தத் தனியார் நிறுவனங்களின் வேலைவாய்ப்புகளிலே தாழ்த்தப்பட்ட, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட இளைஞர்களுக்கு ஐம்பது விழுக்காடு இட ஒதுக்கீடு கட்டாயம் அளிக்க வேண்டும் என்பதை புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் ஒரு அம்சமாக ஏற்படுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். இத்தகைய நிலைப்பாட்டைச் செயல்படுத்துவது சமூக நீதி காக்க பல்வேறு சாதனைகளைப் புரிந்த நமது முலமைச்சரின் சாதனைகளில் ஒரு மகுடமாக, நிச்சயமாக அமையும்.

பிற்பகல் 12–40

சிறுபான்மையினர் நலனைப் பொறுத்தவரையில், உலமாக்களின் நல வாரியத்திற்கு உதவித் தொகையாக ஒரு கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதையும், இந்த ஆண்டும் கிறிஸ்தவர்கள் ஜெருசலேம் நகரத்திற்குப் புனிதப் பயணம் மேற்கொள்வதற்கு உதவும் வகையிலே ஒரு கோடி ரூபாயும் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை வரவேற்கின்றேன். ஆனால் சிறுபான்மையின மக்களின் பல எதிர்பார்ப்புகள் இந்த வரவு–செலவுத் திட்டத்தில் இடம் பெறாதது ஏமாற்றம் அளிக்கின்றது. கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டமன்றத் தேர்தலில் அளிக்கப்பட்ட பல வாக்குறுதிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன; பாராட்டுகிறேன்.

அதேநேரத்தில் பிற்படுத்தப்பட்ட சிறுபான்மையின முஸ்லிம்களுக்கான இட ஒதுக்கீடுகள் அதிகரித்துத் தரப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தேர்தல் பிரச்சாரத்தில் அளித்த வாக்குறுதி விரைவில் நிறைவேற்றப்பட ஆவன செய்ய வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். இதேபோல் தேர்தலுக்கு முன்பு கன்னியாகுமரி மாவட்டத்தில் பேசுகையில் அ.இ.அ.தி.மு.க. ஆட்சிக்கு வரும்போது பட்டா உள்ள இடங்களிலே பள்ளிவாசல்கள் மற்றும் சர்ச்சுகள் கட்டுவதற்கு உள்ள முட்டுக்கட்டைகள் நீக்கப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். இருப்பினும் பல மாவட்டங்களிலே பட்டா உள்ள இடங்களிலே பள்ளி வாசல்கள் மற்றும் சர்ச்சுகள் கட்டுவதற்கு மாவட்ட நிர்வாகம் தடைபோடும் நிலை தொடர்கின்றது. இந்த நிலையை நீக்க அரசு உரிய உத்தரவுகளைப் பிறப்பித்து, சிறுபான்மையின மக்களின் வழிபாட்டு முறையை நிலைநாட்ட முன்வர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. அ. முஹம்மத்ஜான்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மாவினுடைய ஆட்சியில் வக்ஃபு வாரியத்திற்குச் சொந்தமான பல கோடி ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் மீட்கப்பட்டுள்ளன. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எந்த இடத்தில் அவ்வாறு தடை செய்யப்பட்டுள்ளது என்பதைச் சொன்னால் மாண்புமிகு அம்மா அவர்களின் கவனத்திற்கு எடுத்துச்செல்லப்படும். மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியில் சிறுபான்மையினர் நலன் மிகவும் சிறப்பாகப் பாதுகாக்கப்பட்டு வருகின்றது. (மேசையைத் தட்டும் ஒலி) உலமாக்களுக்கு பென்ஷன் தொகை ரூபாய் ஆயிரமாக உயர்த்தப்பட்டுள்ளது. உலமாக்களுக்கு நிதியுதவியும் வழங்கப்பட்டுள்ளது. உலமாக்கள் நல வாரியத்தின்மூலம் அனைத்து உதவிகளும் செய்யப்பட்டு வருகின்றன. அதுமட்டுமல்லாமல் வக்ஃபு வாரியத்திற்கு இன்று நிறைய சொத்துகள், கோடிக்கணக்கான ரூபாய் மதிப்புள்ள சொத்துகள் மீட்கப்பட்டு, மாதாந்திர review meeting–ல் வக்ஃபு வாரியத்தினுடைய மேம்பாடும் மிகச் சிறப்பாக நடந்து கொண்டு இருக்கின்றது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பிட்டது வக்ஃபு வாரியம் தொடர்பான பிரச்சினை அல்ல. பொதுவாக பட்டா உள்ள இடத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெளிவாகச் சொல்லியிருக்கிறார்கள். Specific–ஆக mention செய்து இந்த மாவட்டத்தில், இந்த இடத்தில் பட்டா இருந்தும் மசூதி கட்டவில்லை, சர்ச் கட்டவில்லை என்று நீங்கள் சொல்லுங்கள். அப்படி இருந்தால் தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். நீங்கள் Specific–ஆக mention செய்யுங்கள். அடுத்த subject–க்குப் போங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் குறிப்பாக அவற்றை பட்டியல் போட்டே தருகிறேன்.

*[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]* [2012 ஏப்ரல் 3

பள்ளிக் கல்வித் துறைக்கு முன் எப்போதும் இல்லாத அளவிலே 14,552.82 கோடி ரூபாய் வழங்கப்பட்டிருப்பதை மனதாரப் பாராட்டுகிறேன். காலணிகளிலிருந்து நோட்டுப் புத்தகங்கள் வரை, சீருடைகளிலிருந்து ஜியாமெட்ரி பெட்டிகள் வரை விலையில்லாமல் இந்த அரசு வழங்குவதைப் பாராட்டக்கூடிய அதே நேரத்தில், மாணவர்களைத் திறம்பட உருவாக்கக்கூடிய ஆசிரியர்களையும் இந்த அரசு சற்று கவனிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

குறிப்பாக 1991–க்குப் பிறகு சிறுபான்மையின கல்லூரிகள், சிறுபான்மையின பள்ளிக்கூடங்கள், தமிழ்வழிப் பள்ளிக் கூடங்களுக்கு மானியம் அளிப்பதில்லை என்ற ஒரு முடிவு தொடர்ந்து இருந்து வருகின்றது. 14,552.82 கோடி ரூபாய் பள்ளிக் கல்விக்கு ஒதுக்கி சாதனை புரிந்திருக்கின்றோம். அதேபோல் தமிழ்வழிப் பள்ளிக்கூடங்கள், சிறுபான்மையின பள்ளிக்கூடங்கள் 1991–க்குப் பிறகு தொடங்கப்பட்ட பள்ளிக்கூடங்களுக்கு, அதில் சில பிரிவுகளுக்கு மானியம் இருக்கின்றன. சில பிரிவுகளுக்கு மானியம் இல்லை. Ph.D. படித்தவர்கள்கூட உயர் வகுப்புகளில் ரூபாய் 3,000 ஊதியத்திலே பணியாற்றுகிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கவனிக்க வேண்டும். நீங்கள் Specific ஆக எந்தெந்தப் பள்ளிக்கூடம் என்பதை எழுதிக் கொடுங்கள். அதற்கு action எடுப்பார்கள். பொத்தாம் பொதுவாகச் சொல்லாதீர்கள். தொடர்ந்து பேசுங்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவான விஷயம்தான் இது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் நீங்கள் continuous–ஆக மானியம் கொடுக்கவில்லை என்பது போல் சொல்கிறீர்கள். இது சரியில்லை. Specific— ஆக எந்தப் பள்ளியில் அரசு உதவி மானியம் கொடுக்கவில்லை என்று சொன்னீர்கள் என்றால், அதற்கு சம்மந்தப்பட்ட அமைச்சர் அவர்கள் சரியாக பதில் சொல்ல முடியும்.

பிற்பகல் 12–45

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானியம் கொடுப்பது குறித்து நான் என்ன சொல்ல வந்தேன் என்றால், பள்ளிக்கூடங்களிலேயே ஒரு பாரபட்சம் உள்ளது.



2012 ஏப்ரல் 3] *[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]*

சுய நிதி வகுப்புகளுக்கு மானியம் இல்லை. அங்கு பணியாற்றக்கூடிய ஆசிரியர்களுக்கு சம்பளம் குறைவு, மானியம் வரக்கூடிய பாடங்களுக்கு சம்பளம் அதிகம். இப்படி ஒரே பள்ளிக்கூட வளாகத்தில் இரண்டு வகையான ஆசிரியர்கள், இரண்டு வகையான மாணவர்கள் இருக்கிறார்கள். இதுசம்பந்தமான பெரிய பட்டியலே இருக்கின்றது; அரசாங்கத்திடம் கொடுக்கின்றேன். இந்த கோரிக்கையை அரசு ஏற்றுக்கொண்டால், அதைவிட பெரிய சாதனை இருக்க முடியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 5 ஆண்டுகளாக வழிகாட்டி மதிப்பு மாற்றப்படாமல், இப்போது ஒரேயடியாக பல மடங்கு அதிகரிக்கப்பட்டிருப்பது பலரையும் பாதித்திருக்கின்றது. இப்போது வந்திருக்கும் புதிய வழிகாட்டி மதிப்பு ஏற்கெனவே இருந்த வழிகாட்டி மதிப்பைவிட, குடிமனை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சில பள்ளிகளுக்கு, சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு அரசினுடைய மானியம், கொடுக்கப்படவில்லை என்ற கருத்தை இங்கே பதிவு செய்தார்கள். 1990–க்குப் பின்னால் சில சுய நிதிக் கல்லூரிகள், பள்ளிக்கூடங்கள், அரசு உதவி பெறும் பள்ளிகள், 'நாங்கள் சில வகுப்புகளை நடத்துகின்றோம், எங்களுடைய சுய நிதியைப் பெற்று, அரசின் உதவியைப் பெறாமல் நடத்திக்கொள்கிறோம்' என்று அனுமதி பெற்றுதான் அவை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. ஆகவே, அரசினுடைய மானியம் பெறுவது என்கிற வினா எழாது என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வழிகாட்டி மதிப்பைவிட குடியிருப்பு மனைகளுக்கு 170 சதவிகிதம், வர்த்தக மனைகளுக்கு சுமார் 150 சதவிகிதம், விவசாய நிலங்களுக்கு 270 சதவிகிதம் என்று அதிகரிக்கப்பட்டிருக்கிறது.

*[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]* [2012 ஏப்ரல் 3

*இது பெரிய சுமையாக இருக்கின்றது. வழிகாட்டி மதிப்பைக் குறைப்பதற்கு குறிப்பாக மாநகராட்சிப் பகுதிக்கு மட்டும் இந்த மதிப்புக் கூட்டுதலை வைத்துவிட்டு, மற்ற இடங்களுக்கு விதிவிலக்கு கொடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அதுபோல சில மாநிலங்களிலே பத்திரப் பதிவு செய்ய கிராமப் பஞ்சாயத்துகளுக்கு 2 சதவிகிதம், நகராட்சிகளுக்கு 4 சதவிகிதம், மாநகராட்சிகளுக்கு 5 சதவிகிதம் என்று கட்டண விகிதம் இருப்பதுபோல, தமிழகத்திலும் பகுதிக்கேற்ப முத்திரைத் தீர்வை விகிதம் மாற்றியமைக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு)* Please sit down.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் மாநகராட்சிக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் பத்திரப் பதிவு செய்கின்றபோது உதவி செய்ய வேண்டுமென்று கூறுகிறார். இப்போது நடைமுறையில் இருக்கின்ற சட்டப்படியே பத்திரப் பதிவு செய்கின்றபோது தற்போது 6 சதவிகிதம் முத்திரைத்தாளிலே பெறப்படுகிறது. இரண்டு சதவிகிதம் டிரான்ஸ்ஃபர் டியூட்டி. அதாவது, மாநகராட்சிக்கு 2 சதவிகிதம், அதேமாதிரி உள்ளாட்சி அமைப்புகளுக்கு இன்றைக்கு 1 சதவிகிதம் அல்லது 2 சதவிகிதம் கொடுக்கப்படுகிறது. ஒரு சதவிகிதம் பதிவுக் கட்டணமாக மொத்தம் 9 சதவிகிதம் வழங்கப்படுகிறது. இன்றைக்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இப்போது இந்தப் புதிய வழிகாட்டி மதிப்பின்படி ஏற்கெனவே வசூலிக்கப்பட்ட 6 சதவிகிதம் முத்திரைக் கட்டணத்தை ஒரு சதவிகிதம் குறைத்து 5 சதவிகிதமாகக் குறைத்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசிற்கு 600 கோடி ரூபாய் இழப்பு ஏற்பட்டிருக்கின்றது என்பதைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இங்கே 6 ஆண்டுகள் கழித்து இப்போதுதான் புதிய வழிகாட்டி மதிப்பு முறை மாற்றியமைக்கப்பட்டிருக்கிறது. ஆனால், அண்டை மாநிலமான ஆந்திராவிலே ஒவ்வோர் ஆண்டும், ஆண்டுக்காண்டு வழிகாட்டி மதிப்பு முறை மாற்றப்படுகிறது. மகாராஷ்டிரா மாநிலத்திலும் ஒவ்வோர் ஆண்டும் வழிகாட்டி மதிப்பு முறை மாற்றியமைக்கப்படுகிறது என்பதை இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.*



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர், சுருக்கமாக உரையை முடியுங்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எதிர்க்கட்சிகளினுடைய எண்ணங்களையெல்லாம் புரிந்துகொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இன்று மின் கட்டணத்திலே சில சலுகைகளை அறிவித்திருக்கின்றார்கள், அதை வரவேற்கின்றேன். அதேநேரத்திலே 500 யூனிட்டுகளுக்கு மேலே பயன்படுத்துபவர்களுக்கு எந்தவிதமான சலுகையும், மானியமும் வழங்கப்படாத ஒரு நிலை இப்போதும் இருக்கின்றது. இன்றைக்கு நம்முடைய அரசு விலையில்லாமல் ஃபேன், மிக்ஸி, கிரைண்டர்களையெல்லாம் அளிக்கின்றது. இதுதவிர சாதாரணமாக ஒரு நடுத்தர வீட்டில் ஏர் கண்டிஷனர் இருக்கின்றது, வாஷிங் மெஷின் இருக்கின்றது, ரெஃப்ரிஜரேட்டர் இருக்கின்றது, ஹீட்டர் இருக்கின்றது. இப்படிப் பார்க்கும்போது சராசரியாக ஒரு நடுத்தர குடும்பத்திலேயே இரண்டு மாதங்களுக்கும் சேர்த்து 500 யூனிட்டுகளுக்கு மேலாக மின்சாரத்தைப் பயன்படுத்த வேண்டிய ஒரு நிலை ஏற்பட்டிருக்கின்றது. இதுதவிர வாடகைதாரர்களுக்கும், உரிமையாளர் ஒரே மீட்டரைப் பயன்படுத்தும்போது அந்த யூனிட்டுகளினுடைய பயன்பாடு அதிகரித்து, அரசாங்கம் வசூல் செய்வதைவிட அதிகமாக வீட்டு உரிமையாளர்கள் வாடகைதாரர்களிடம் வசூலிக்கக்கூடிய சூழ்நிலையாக இருக்கிறது. சப்–மீட்டர்களை அரசு மீட்டர்களாக மாற்ற அரசு முன் வரவேண்டும் என்றும், 500 யூனிட்டுகளுக்கு மேல் மின்சாரம் பயன்படுத்தும் அவர்களுக்கும் கருணை காட்ட வேண்டும் என்றும் இந்த நேரத்தில் பணிவுடன் கேட்டுக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)*

*பிற்பகல் 12–50*

*மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 14.62 கோடி ரூபாய் செலவிலே 14.62 இலட்சம் குடிசை வீடுகளுக்கு இழை பல்புகளுக்குப் பதிலாக விலை இல்லாத சி.எப்.எல். பல்புகளாக அளிக்கப்படும் என்று இந்த அரசாங்கம் அறிவித்திருப்பதையும் நான் வரவேற்கிறேன். இதனால் 45 மெகா வாட் மின்சாரம் சேமிக்க வாய்ப்பு உள்ளது என்ற அறிவிப்பையும் நான் வரவேற்கிறேன். அதேநேரத்தில், தமிழகத்தில் இருக்கக்கூடிய அத்தனை வீடுகளுக்கும்— கேரளாவிலே இதனைச் செய்திருக்கிறார்கள்— குண்டு பல்புகளுக்குப் பதிலாக சி.எப்.எல். பல்புகளைக் கொடுத்ததன் காரணமாக மாலை*

[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா] [2012 ஏப்ரல் 3

நேரங்களில் 350 மெகா வாட் மின்சாரப் பயன்பாட்டை அவர்கள் குறைத்திருக்கிறார்கள். அதுமட்டுமல்லாமல், இதற்கு கேரள அரசு 95 கோடி ரூபாய் செலவு செய்துள்ளது. சி.எப்.எல். பல்புகள் பயன்படுத்தப்படும்போது இதன்காரணமாக கார்பன் கிரெடிட் பெறுகிறார்கள் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது குண்டு பல்புகளுக்குப் பதிலாக சி.எப்.எல். பல்புகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களும் இந்த அடிப்படையில்தான் தமிழ்நாடு எரிசக்தி முகமை மூலம் Hut Light-குடிசைப் பகுதிகளில் அமைக்கப்படவிருக்கின்ற அனைத்து பல்புகளையும் மாற்றி சி.எப்.எல். பல்புகளாக அரசே போட நடவடிக்கை எடுத்துள்ளார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதுபோல், அரசு கட்டடங்களிலும் சி.எப்.எல். பல்புகளைத்தான் பயன்படுத்தவேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார்கள். ஆகவே, மின்சாரத்தினைச் சேமிப்பதற்கான திட்டங்களை மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் அறிவித்து, அதன்மூலம் பல்வேறு திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தெரு விளக்குகள்கூட சி.எப்.எல். பல்புகளாகவும், சூரிய ஒளியுடன்கூடிய பல்புகளாகப் பயன்படுத்த வேண்டும் என்று கூறியுள்ளார்கள். அதன்படி 20,000 தெரு விளக்குகள் சூரிய ஒளி மற்றும் சி.எப்.எல். பல்புகளைப் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதுபோல் 60,000 வீடுகளுக்கும் சூரிய ஒளி மற்றும் சி.எப்.எல். பல்புகளைப் பயன்படுத்தி, அதிலும் மின்சார சேமிப்பு என்று கொள்கை முடிவு எடுத்து இந்த அரசு செயல்படுத்தத் தொடங்கியுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு அரசு மானியம் வழங்கவில்லை,



2012 ஏப்ரல் 3] [செல்வி ஜெ ஜெயலலிதா]

வழங்கினால் நன்றாக இருக்கும் என்று குறிப்பிட்டார். 500 யூனிட்டுகளுக்கு மேல் பயன்படுத்தும் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு அரசு தனியாக மானியம் வழங்கவில்லை என்றாலும், மின் உற்பத்திச் செலவைவிட குறைவான கட்டணமே அவர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டவாறு, மின்சாரத்தைச் சேமிக்கும் வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், அந்த Compact Fluorescent Lamps-க்கு 14–1/2 சதவிகித வரியிலிருந்து 5 சதவிகிதமாக வரியைக் குறைத்து உத்தரவிட்டிருக்கிறார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

*__மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:__ மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசு நிதி வழங்கவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கு சொன்னார்கள். 1991 ஆம் ஆண்டுக்கு முன்புதான், அரசு உதவி பெறும் பள்ளி அல்லது கல்லூரிகளாக இருந்தாலும் அரசு மூலம் ஒப்புதல் பெறப்பட்டு, அந்த ஒப்புதல் பெறப்பட்ட பாடப் பிரிவுகளுக்கு மட்டும் அரசு நிதி உதவி வழங்கி வருகிறது. 1991 ஆம் ஆண்டுக்குப் பிறகு அரசு உதவி பெறும் பள்ளி அல்லது கல்லூரிகளாக இருந்தாலும் அவர்கள் சுய நிதிப் பாடப் பிரிவின் மூலமாக அந்தப் பாடங்களை நடத்திக்கொள்ளலாம் என்று அனுமதி பெற்றுதான் அவர்கள் அந்தப் பாடத்தை நடத்தி வருகிறார்கள். ஆகவே, அரசு மூலமாக ஒப்பளிக்கப்பட்ட பாடப் பிரிவுகளுக்கு மட்டும்தான் அரசு நிதி வழங்கப்படுகிறது. சுய நிதி பாடப் பிரிவுகளுக்கு அரசு நிதி வழங்கவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 12–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா அவர்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சாரத்தை சிக்கனமாகப் பயன்படுத்துவதற்கு இந்த அரசு பல நல்ல முயற்சிகளை எடுத்து வருகின்றது. நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆட்சியிலே இருந்தபோதுதான் வீடுகளிலே கட்டாயமாக மழைநீர் சேகரிப்புத் தொட்டிகள் கட்ட வேண்டுமென்று சொன்னார்கள். அதேபோல, இன்று சூரிய சக்தி மின்சாரம், சுற்றுச்சூழலுக்கு எந்தவிதமான பழுதையும் ஏற்படுத்தாத, மாசினையும் ஏற்படுத்தாத மின்சாரமாக இருக்கிறது. அந்த சூரிய சக்தி மின்சாரத்தினுடைய உற்பத்திச் செலவும்கூட படிப்படியாகக் குறைந்து வரக்கூடிய சூழலில் பெருநகரங்களிலே, பெரிய கட்டடங்களிலே கண்டிப்பாக ஒரு குறிப்பிட்ட அளவு மின்சாரப் பயன்பாட்டிற்கு சூரிய சக்தி மின்சாரம்தான் பயன்படுத்த வேண்டுமென்று இந்த அரசு சட்டத்தை இயற்றினால் நன்றாக இருக்கும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.*

*கூடங்குளம் அணுமின் நிலைய மின்சாரத்தினுடைய முழு அளவும் தமிழகத்திற்குத் தரவேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மத்திய அரசுக்குக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதேநேரத்திலே, மத்திய அமைச்சர் ஒருவர் விதிமுறையின் அடிப்படையிலேதான் மின்சாரம் தருவோம், கூடங்குளம் அணு மின் நிலையத்தின் முழு மின்சாரமும் தமிழகத்திற்குத் தர இயலாது என்று சொல்லியிருக்கக்கூடிய சூழலிலே, நம்முடைய உரிமைகளை நிலைநாட்டுவதோடு, நெய்வேலியிலே உற்பத்தியாகக்கூடிய முழு மின்சார அளவான சுமார் 2,400 மெகா வாட்டும் தமிழகத்திற்குத்தான் தரப்படவேண்டுமென்ற கோரிக்கையை இங்கே உள்ள அனைத்துக் கட்சிகளும் அழுத்தமாக மத்திய அரசிடம் வைத்து அதைப் பெறவேண்டும். அது தற்போது தமிழகத்தில் இருக்கக்கூடிய மின் பற்றாக்குறையை ஓரளவுக்கு சமாளிக்க உதவும் என்று இந்த நேரத்திலே சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சற்று முன் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே தெரிவித்த ஆலோசனைகளுக்கு பதில் இந்த நிதிநிலை அறிக்கையிலேயே 46 ஆம் பக்கத்தில் உள்ளது என்பதை அவருக்குச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். நிதிநிலை அறிக்கையில் என்ன கூறப்பட்டுள்ளது என்றால், 'மின்சாரத்தைச் சேமிப்பதற்கான ஒரு முக்கிய முயற்சியாக, 14.62 கோடி ரூபாய் செலவில், 14.62 இலட்சம் குடிசை வீடுகளில் உள்ள இழை பல்புகளுக்குப் பதிலாக விலையில்லா சி.எப்.எல். பல்புகள் அளிக்க ஆணையிடப்பட்டுள்ளது. இதனால் 45 மெகா வாட் மின்சாரம் சேமிக்க வாய்ப்பு ஏற்படும். மின் பயன்பாட்டின் அடிப்படையில், குறிப்பிட்ட பெரிய கட்டட வளாகங்களிலும், வணிகக் கட்டடங்களிலும் மின் சிக்கனத்திற்கான கட்டுமானக் கோட்பாட்டை அமல்படுத்துவதற்கு தமிழக அரசு நடவடிக்கை எடுக்கும். இதனால் 30 சதவீத மின் சேமிப்பு ஏற்பட்டு, 10 இலட்சம் சதுர அடி பரப்பிற்கு மூன்று மெகா வாட் அளவிற்கு மின் சேமிப்பு ஏற்படுவதற்கான வாய்ப்பு ஏற்படும்' என்று 72 ஆவது பத்தியில் உள்ளது என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)*





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா, ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.*

**முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. கூடங்குளம் போராட்டக்காரர்கள்மீது போடப்பட்டிருக்கக்கூடிய வழக்குகள் அனைத்தும் வாபஸ் பெறப்பட்டு அவர்கள் அனைவரும் விடுதலை செய்யப்படுவதற்கு இந்த அரசு வழிவகுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கூடங்குளம் அணு உலை தொடர்பாக மத்திய அரசு 2008–லே ரஷ்யாவுடன்* Nuclear liability *ஒப்பந்தம், அதாவது அணு உலை இழப்பீடு ஒப்பந்தத்தில் கையொப்பமிட்டிருக்கின்றது. அதில் 5 வருடத்திற்குத்தான் இழப்பீடு தருவோம் என்று இருப்பதாகச் சொல்லப்படுகின்றது. உண்மை நிலை என்ன என்பதை மத்திய அரசு அறிவிக்கவேண்டும். அதை மாநில அரசு பெற்று, மக்களுக்குள்ள அச்சத்தைப் போக்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். சில நாட்களுக்கு முன்னால் ரஷ்யாவினுடைய தூதர் கூடங்குளத்தில் மேலும் 2 அணு உலைகள் திறக்கப்படும் என்று சொல்லியிருக்கின்றார். இப்போது நடைமுறையில் இருக்கக்கூடிய கடலோர மேலாண்மைச் சட்டத்தின் அடிப்படையிலே,* Coastal Regulation Zone *அடிப்படையிலே கூடங்குளத்தில் எந்தவொரு புது அணு உலையையும்*

*[முனைவர் எம்.எச். ஜவாஹிருல்லா]* [2012 ஏப்ரல் 3

*அமைக்கக்கூடாது. எனவே, தமிழக அரசாங்கத்தினுடைய அனுமதி பெறாமல் ரஷ்ய தூதரே இப்படிச் சொல்வது விந்தையாக இருக்கிறது. இதைப் பற்றியும் தமிழக அரசு கவனமாக இருக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.*

*இராமநாதபுரம் மாவட்டத்தின் ஒரு பகுதியில் சேது சமுத்திரத் திட்டம் நடைமுறைப்படுத்துவதற்காக அரசு நிலம் எதுவும் அரசுப் பயன்பாட்டிற்காகவோ தனியார் பயன்பாட்டிற்காகவோ ஒதுக்கப்படக்கூடாது என்று அரசாணை எம்.எஸ்.எண் 812 (வருவாய்த் துறை) 16–3–1964–ல் வெளியிடப்பட்டது. இந்த ஆணையின்படி இராமநாதபுரம் வட்டத்தில் 25,002.04 ஏக்கர் நிலமும், இராமேஸ்வரம் வட்டத்தில் 12,690.26 ஏக்கர் நிலமும் யாருக்கும் ஒதுக்குவதற்கும் தடை செய்யப்பட்டது. இராமநாதபுரம் வட்டத்தில் சுமார் 31 கிராமங்களிலும், இராமேஸ்வரம் வட்டத்தின் அனேகமாக அனைத்து பகுதிகளும் இந்தத் தடை உத்தரவின்கீழ் வருகின்றன. இந்நிலையில் சேது சமுத்திரக் கால்வாய் திட்டத்திற்காக 812.17.5 ஹெக்டேர் நிலம் தனுஷ்கோடி கிராமத்திலும், மண்டபம் கிராமத்தில் 8 ஹெக்டேர் நிலமும் போதுமானது என்று தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் அறிவித்துள்ளது. இதுமட்டுமின்றி 1964–ல் வருவாய்த் துறை வெளியிட்ட தடை உத்தரவை ரத்து செய்வதற்கு தங்களுக்கு ஆட்சேபனை இல்லை என்றும், தூத்துக்குடி துறைமுகப் பொறுப்புக் கழகம் தெரிவித்துள்ளது. எனவே, தமிழக அரசு இந்தத் தடை உத்தரவை தளர்த்தி பாம்பன், தங்கச்சிமடம் பகுதியில் பட்டாவிற்காக ஏங்கிக்கொண்டிருக்கும் மக்கள் வாழ்வில் ஒளியேற்ற வேண்டும்.*

*இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனைக்கு நிரந்தரமாக ஒரு நியூரோ சர்ஜன்–நரம்பியல் மருத்துவர் நியமிக்க அரசு ஆவன செய்யவேண்டும்.*

*இராமநாதபுரம் அரசு தலைமை மருத்துவமனையில் பழுதாகியுள்ள ஸ்கேன் கருவிக்குப் பதிலாக புதிய ஸ்கேன் கருவி அளிக்க வேண்டும்.*

*இராமநாதபுரம் நகரத்தில் கீழக்கரை செல்லும் சாலையில் உள்ள இரயில்வே கடவு அமைந்துள்ள இடத்தில் பெரும் போக்குவரத்து நெரிசல் ஏற்படுவதால் அங்கு ஒரு மேம்பாலம்* (ROB) *கட்டப்பட வேண்டுமென கேட்டுக்கொள்கிறேன்.*



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள். (குறுக்கீடு) முனைவர் ஜவாஹிருல்லா, வேறு ஒரு சந்தர்ப்பத்தில் நீங்கள் பேசலாம். தயவு செய்து உட்காருங்கள். இன்னும் 5 உறுப்பினர்கள் பேசவேண்டும். அடுத்து திரு. அ. கணேஷ்குமார். (குறுக்கீடு) தயவு செய்து உட்காருங்கள்.*

*பிற்பகல் 1–00*

**திரு. அ. கணேஷ்குமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கை மீதான விவாதத்தில் பேச எனக்கு வாய்ப்பளித்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும், மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மக்கள் மன்றத்தில் உரையாற்றும் அளவிற்கு என்னை உயர்த்திய பாட்டாளி மக்கள் கட்சி நிறுவனர் தமிழினப் போராளி மருத்துவர் அய்யா அவர்களுக்கும், சின்னய்யா அவர்களுக்கும் எனது உளமார்ந்த நன்றியை உரித்தாக்கி என் உரையைத் துவங்குகிறேன்.*

*தொழில் துறையும், சேவைத் துறையும் எந்தளவுக்கு வளர்ச்சியடைந்தாலும், முதன்மைத் துறையான வேளாண்மைத் துறை வளர்ச்சியடைந்தால்தான் மக்கள் பசியின்றி வாழமுடியும் என்பதை உணர்ந்து வேளாண் வளர்ச்சிக்காக பல திட்டங்களை அறிவித்திருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. வேளாண்மைத் துறைக்கு இதுவரை இல்லாத அளவுக்கு ரூ. 3,804 கோடி நிதியொதுக்கியிருப்பதும், கூட்டுறவுச் சங்கங்கள் மூலம் ரூ.4,000 கோடி பயிர்க் கடன் வழங்க வகை செய்யப்பட்டிருப்பதும் வரவேற்கத்தக்கது.*

*நடப்பாண்டில் உணவு உற்பத்தி சுமார் 30 இலட்சம் டன் அதிகரித்துள்ளது மகிழ்ச்சியளிக்கிறது. ஆனால், வரும் ஆண்டில் இதை 120 இலட்சம் டன்னாக உயர்த்த அரசு இலக்கு நிர்ணயித்துள்ளது. இதற்காகப் பல்வேறு திட்டங்களை அரசு அறிவித்தபோதிலும் அவையெல்லாம் இல்லாத சுவற்றில் சித்திரம் வரைவதற்கான முயற்சியாகிவிடுமோ என பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. காரணம் வேளாண் தொழிலில் போதிய இலாபம் இல்லாததால் தமிழகம் முழுவதும், குறிப்பாக வட மாவட்டங்களில் வேளாண் விளைநிலங்கள் அனைத்தும் வீட்டுமனைகளாக மாற்றப்பட்டு விற்பனை செய்யப்பட்டு வருகின்றன. விளைநிலங்களில் வீட்டுமனைகளாக மாற்றுவதற்கு பெரிய அளவில்*

கட்டுப்பாடு ஏதும் இல்லாததால் இந்த நிலை தொடர்கிறது. இதே நிலை தொடர்ந்தால் தமிழகத்தில் கடுமையான உணவுப் பற்றாக்குறை ஏற்படும் என பாட்டாளி மக்கள் கட்சி கருதுகிறது. எனவே, இதனை உணர்ந்து விளைநிலங்களை வீட்டுமனைப் பட்டாக்களாக மாற்ற கடுமையான நிபந்தனைகளை விதிக்கவேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சி கேட்டுக்கொள்கிறது.

கடந்த ஆண்டு நடைபெற்ற சட்டப் பேரவைத் தேர்தலுக்கான தேர்தல் அறிக்கையில் அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்தால் கரும்பின் கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு ரூபாய் 2,500 ஆக வழங்கப்படுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் உறுதியளித்திருந்தார்கள். ஆனால், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகம் ஆட்சிக்கு வந்து இரண்டு நிதிநிலை அறிக்கைகள் தாக்கல் செய்யப்பட்ட பிறகும் இந்த உறுதிமொழி இன்னும் நிறைவேற்றப்படவில்லை. தற்போது போக்குவரத்துச் செலவுடன் சேர்த்து டன் ஒன்றுக்கு ரூபாய் 2,100 வழங்கப்பட்டு வருகிறது. இது போதுமானதாக இல்லை. உழவர்களின் நலனைக் கருத்தில்கொண்டு கரும்பின் கொள்முதல் விலையை டன் ஒன்றுக்கு ரூபாய் 3,000 ஆக உயர்த்தி வழங்கவேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

விவசாயத்திற்கு அடுத்த மிக முக்கியமான துறையான கல்வித் துறைக்கு இதுவரை இல்லாத அளவிற்கு ரூபாய் 14,552 கோடி ஒதுக்கியிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு எல்லாப் பொருட்களுமே இலவசமாக வழங்கப்பட்டு வரும் நிலையில் வரும் ஆண்டில் நோட்டு புத்தகங்களும் இலவசமாக வழங்கப்படும் என்று அறிவித்திருப்பது வரவேற்கக்கூடியது ஆகும். இதனால் அரசுப் பள்ளிகளில் பயிலும் குழந்தைகள் எந்தவித செலவும் செய்யத் தேவையில்லை என்பது பெருமகிழ்ச்சியளிக்கிறது. அதேநேரத்தில் தனியார் பள்ளிகள், நடுத்தர மக்களைக் கசக்கிப் பிழியும் அளவிற்கு கல்விக் கட்டணக் கொள்ளையில் ஈடுபடுகின்றனர். இந்தக் கல்விக் கட்டணக் கொள்ளையில் ஈடுபடுகின்ற பள்ளிகள் மீது நடவடிக்கை எடுக்க ஊழல் தடுப்புப் பிரிவுபோல் கட்டணக் கொள்ளை தடுப்புப் பிரிவு ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் பேசுகின்றபோது ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கின்றார்கள். தமிழ்நாட்டில் பள்ளிக் கல்வியைப் பொறுத்தவரை இரண்டு வகையான பள்ளிகள் இருக்கின்றன. ஒன்று அரசு நிதி பெறும் பள்ளிகள், இரண்டாவது சுய நிதிப் பள்ளிகள். இந்த இரண்டு பள்ளிகளில் எந்தெந்தப் பள்ளியில் கட்டணம் அதிகமாக வசூலிக்கிறார்கள் என்பதைத் தெளிவுபடுத்துமாறு கேட்டுக்கொள்கிறேன்.

அதேநேரத்தில் தமிழகத்தைப் பொறுத்தவரையில் மாண்புமிகு தமிழக முதல்வர் இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், நீதியரசர் சிங்காரவேலு அவர்கள் தலைமையிலே Fees Determination Committee அமைத்து, இன்றைக்கு அனைத்து அரசு நிதியுதவி பெறும் பள்ளிகள், சுய நிதி பள்ளிகளை அரசு கவனித்துக் கொண்டிருக்கிறது. இதுவரை 6,322 பள்ளிகளுக்கு உரிய ஆணைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. இதற்கு முன்புகூட அதிகமாகக் கட்டணம் வசூலிக்கப்பட்ட ஆறு பள்ளிகளில் 73 இலட்சத்து 40 ஆயிரத்தை மாணவர்களுக்கு திருப்பி ஒப்படைத்திருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகிறேன்.

இன்றுகூட அண்ணா நகர் மேற்குப் பகுதியில் லியோ மெட்ரிக் மேல்நிலைப் பள்ளியில் +2 படிக்கின்ற மாணவர்களுக்கு கல்விக் கட்டணம் தொடர்பான புகார் வந்ததன் அடிப்படையில் உடனடியாக நீதியரசர் அவர்கள் தலைமையிலே அங்கு சென்று ஒரு Director தலைமையிலே ஒரு குழு அமைத்து எந்தளவிற்கு அவர்கள் பள்ளிக் கட்டணத்தை வசூலித்திருக்கிறார்கள்—மேலும் இதுபோன்று ஒரு கோடியே 36 இலட்சத்து 46 ஆயிரத்து 60 ரூபாய்த் திருப்பிக் கொடுக்கப்பட்டிருக்கிறது என்பதை இந்த நேரத்திலே தெளிவுபடுத்திக்கொள்ள விரும்புகின்றேன். ஆகவே, அதிகமாக கல்விக் கட்டணம் வசூலிக்கின்ற பள்ளிகளை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எடுத்துச்சொன்னால் இந்த அரசு மாண்புமிகு அம்மாவின் அரசு கடுமையான நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

பிற்பகல் 1–05

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. அதேபோல் தமிழகத்தில் ஆண்டுதோறும் சுமார் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட, பெரும்பாலும் கிராமப்புற மாணவர்கள் தமிழ் வழியிலேயே 12 ஆம் வகுப்பை நிறைவு செய்கின்றனர். அவர்கள் நடுவண் அரசால் நடத்தப்படும் I.I.T., N.I.T., A.I.I.M.S., J.I.P.M.E.R. போன்ற உயர் கல்வி நிறுவனங்களில் பயில்வதற்கு I.I.T., J.E.E., A.I.E.E.E., A.I.I.M.S. Entrance, J.I.P.M.E.R. Entrance, C.A.T., J.E.E., போன்ற நுழைவுத் தேர்வுகள் ஆங்கிலம் மற்றும் இந்தி ஆகிய மொழிகளிலேயே நடத்தப்படுகின்றன. எனவே, தமிழ் மாணவர்களுக்குத் திறமை இருந்தும் அவர்களால் இந்தக் கல்வி நிறுவனங்களில் பயில்வதற்கு இயலாத நிலை உள்ளது. எனவே, மத்திய, மாநில அரசு நிறுவனங்கள் எதற்குமே நுழைவுத் தேர்வு நடத்தக்கூடாது என்பதுதான் பா.ம.க.—வின் நிலைப்பாடாகும். தவிர்க்க முடியாத காரணங்களால் மத்திய கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கைக்காக நுழைவுத் தேர்வு நடத்தப்படும்பொழுது அவற்றை தமிழ்நாட்டில் தமிழிலே நடத்தவேண்டும் என இந்தப் பேரவையில் தீர்மானம் நிறைவேற்றி நடுவண் அரசை தமிழக அரசு நிர்ப்பந்திக்க வேண்டுமென பா.ம.க. கேட்டுக்கொள்கிறது.

அண்மையில் மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் வெளியிட்ட ‘தொலைநோக்குத் திட்டம் 2023’-ல் தமிழ்நாட்டில் உயர் கல்வி கற்பிப்போரின் அளவை 50 விழுக்காடாக உயர்த்துவோம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. இது மிக உன்னதமான இலக்காகும். தமிழ்நாட்டில் தற்போது உயர் கல்வி கற்போரின் அளவு 12 விழுக்காடாக உள்ளது. வரும் 2025 ஆம் ஆண்டுக்குள் இதை 25 விழுக்காடாக உயர்த்த முந்தைய ஆட்சியாளர்கள் இலக்கு நிர்ணயித்திருந்தார்கள். ஆனால், அதற்கு இரண்டு ஆண்டுகளுக்கு முன்பாகவே உயர் கல்வி கற்பிப்போரின் அளவை 50 விழுக்காடாக உயர்த்த மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்கள் இலக்கு நிர்ணயித்திருப்பது வரவேற்கத்தக்கது. இந்த இலக்கு எட்டப்பட்டால் தமிழகம் உலகில் உயர்கல்வி மையமாகிவிடும். இது நாம் அனைவரும் பெருமைப்படக்கூடிய ஒரு விஷயம்தான். இதற்கான நடவடிக்கைகளை தமிழக அரசு எடுத்திருக்கிறதா என்பதுதான் இங்கு நான் எழுப்பும் வினாவாகும்.



2012 ஏப்ரல் 3] *[திரு. அ. கணேஷ்குமார்]*

உயர் கல்வி விகிதத்தை 50 விழுக்காடாக உயர்த்துவதற்கு தமிழகத்தில் இப்போது இருக்கும் கல்வி நிறுவனங்களைவிட நான்கு மடங்கு அதிகமாக அரசு கல்வி நிறுவனங்கள் தொடங்கப்பட வேண்டுமென கணக்கிடப்பட்டுள்ளது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் கனவுத் திட்டத்தை நிறைவேற்ற அதிக எண்ணிக்கையில் கல்லூரிகளைத் தொடங்குவதற்கான நடவடிக்கை எடுக்க வேண்டுமென பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மேலும், பிற்படுத்தப்பட்ட . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு அரசு ஏதாவது நடவடிக்கை எடுத்ததா என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கிறார்கள். கடந்த ஐந்து ஆண்டுக் காலத்தில் இல்லாத அளவிற்கு மாண்புமிகு முதல்வர் அம்மா அரசு, ஒரே ஆண்டில் 11 கலைக் கல்லூரிகளைத் தொடங்கி (மேசையைத் தட்டும் ஒலி), அதுவும் சொல்லப்போனால், கிராமப்புறங்களில் படிக்க முடியாத, வாய்ப்பில்லாத பகுதிகளில் அரசுக் கலைக் கல்லூரிகளைத் தொடங்கி, கிட்டத்தட்ட சென்ற ஆண்டு மட்டும் 2,000 மாணவர்கள் பயன்பெற்றிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்தில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. நடப்பு நிதியாண்டில் நிதிநிலை அறிக்கையில் எந்தவித புதியதொரு கல்லூரிக்கான அறிவிப்பும் இல்லை என்பதுதான் பா.ம.க.—வின் கருத்து.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பி. பழனியப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உயர் கல்வி மானியக் கோரிக்கை வரவுள்ளது. அதற்குள் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் அவசரப்பட வேண்டாம் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றி. மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட, தாழ்த்தப்பட்ட ஏழையெளிய விவசாயக் குடும்பங்கள் அதிகம் வாழுகின்ற தாலுகாவாக செஞ்சி தாலுகா உள்ளது. மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்பை மானியக் கோரிக்கையில் எதிர்பார்த்துக் காத்துக் கொண்டிருக்கிறோம். அதேபோல, செஞ்சி பகுதியில் இருக்கக்கூடிய கிராமப்புற மாணவர்கள் உயர் கல்வி பெறவேண்டுமென்று சொன்னால் கிட்டத்தட்ட 50 கிலோ மீட்டர் தொலைவு பயணம் செய்ய வேண்டிய ஒரு சூழ்நிலை அங்கே இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கனிவோடு கவனித்து செஞ்சி பகுதியில் ஏதாவதொரு அரசு உயர் கல்விக்கான நிறுவனத்தைத் தொடங்குவதற்கு அறிவிப்பு வெளியிடுவார் என்று எதிர்பார்க்கின்றேன்.

மேலும், தமிழ்நாட்டிலுள்ள அனைத்து மாவட்டங்களிலும் மருத்துவக் கல்லூரிகளைத் தொடங்க வேண்டுமென்பதுதான் அரசின் கொள்கையாக உள்ளது. அதன்படி ஆண்டுக்கு இரண்டு மாவட்டங்களில் மருத்துவக் கல்லூரிகள் தொடங்கப்பட்டு வந்த நிலையில், இந்த ஆண்டு ஒரு புதிய மருத்துவக் கல்லூரிகூட அறிவிக்கப்படாதது ஏமாற்றம் அளிக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதற்கு முன்னால் பேசிய மாண்புமிகு உறுப்பினரும், தற்போது பேசிக்கொண்டிருக்கிற மாண்புமிகு உறுப்பினரும், இன்னும் பல மாண்புமிகு உறுப்பினர்களும் பேசும்போது உயர் கல்வித் துறையை எடுத்துக்கொண்டால் நிதிநிலை அறிக்கையில் புதிய அறிவிப்பு இல்லை; மருத்துவக் கல்லூரிகள் குறித்து இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த அறிவிப்பும் இல்லை; சிறுபான்மையின மக்களுக்காக இந்த நிதிநிலை அறிக்கையில் எந்த புதிய அறிவிப்பும் இல்லை என்று அடுக்கிக்கொண்டே போகிறார்கள். எல்லாவற்றையும் நிதிநிலை அறிக்கையிலேயே அறிவித்து முடித்துவிட்டால் அந்தந்த மானியக் கோரிக்கையின்மீது



2012 ஏப்ரல் 3] *[செல்வி ஜெ ஜெயலலிதா]*

நடைபெறும் விவாதத்திற்கு (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு அமைச்சர்கள் பதில் சொல்லும்போது ஏதாவது புதிய அறிவிப்புகளைச் செய்ய வேண்டாமா? அதற்காக அவற்றை reserve செய்து வைத்திருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி அவர்கள்.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய அறிவிப்புகளை மானியக் கோரிக்கையிலே கூடுதலாக அறிவித்தால் நமக்குத்தானே நல்லது. ஆகவே, அதற்கான வாய்ப்பைத்தான் நாங்கள் கேட்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

பிற்பகல் 1–10

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, முந்தைய மைனாரிட்டி தி.மு.க. அரசுக்கு இந்த ஆலோசனை பொருந்தும். அவர்கள் அறிவிப்புகளாக அறிவித்துத் தள்ளிவிட்டார்கள். எதையும் நிறைவேற்றவில்லை. நாங்கள் அப்படி இல்லை. எதையாவது அறிவித்தால் அதைச் செயல்படுத்துவோம், அமலாக்குவோம். ஆகவே, எங்களால் எதைச் செய்ய முடியுமோ அதைத்தான் அறிவிப்போம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் பதிலுக்கு நன்றி.

செஞ்சி தொகுதிக்கு அருகிலுள்ள திருவண்ணாமலையில் 2010 ஆம் ஆண்டு தமிழக அரசால் மருத்துவக் கல்லூரி அமைக்கப்படும் என்று அறிவிக்கப்பட்டது. மேலும், இதற்காக 100 கோடி ரூபாய் நிதியும் ஒதுக்கீடு செய்யப்பட்டது. திருவண்ணாமலை மாவட்ட ஆட்சித் தலைவர் அலுவலக வளாகத்திற்கு அருகில் இதற்கான பல இடங்களும் தேர்வு செய்யப்பட்டன. ஆனால், தற்போது திருவண்ணாமலையில் எந்தவித கட்டடப் பணிகளும் தொடங்கப்படவில்லை.

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் தமிழக முதல்வர் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொல்லியதுபோல, கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே பல வெற்று அறிவிப்புகளை வெளியிட்டார்கள். ஆனால், மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் எதைச் செய்ய முடியுமோ அதைத்தான் சொல்வார்கள். அதேபோல, இன்றைக்கு திருவண்ணாமலை மருத்துவக் கல்லூரி செயல்பட இருக்கின்றது என்பதை நான் என்னுடைய மக்கள் நல்வாழ்வுத் துறை மானியக் கோரிக்கையின்போது குறிப்பிடுவதாக இருந்தேன். ஆனால் இன்றைக்கு அவர் கேட்டிருப்பதால் இதை நான் சொல்ல விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. ஆனால், திருவண்ணாமலையில் தற்போது ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் மாவட்ட தலைமை அரசு மருத்துவமனையிலேயே அந்த மருத்துவக் கல்லூரி தொடங்கப் போவதாக அறிவிப்பு வெளியாகி இருக்கிறது. அதற்காக தனி கட்டடம் எதுவும் இதுவரை கட்டப்படவில்லை என்பதுதான் என்னுடைய தாழ்மையான கருத்தாகும்.

ஏனென்றால், செஞ்சி தொகுதிக்குட்பட்ட மக்கள் உயர் சிகிச்சை ஏதேனும் பெற வேண்டும் என்று சொன்னால், ஜிப்மர் மருத்துவமனைக்குத்தான் செல்ல வேண்டிய ஒரு சூழ்நிலை இருக்கிறது. காரணம், விழுப்புரத்தில் அமைந்துள்ள அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனைத்து வசதிகளும் இருந்தும் அதிகாரிகளின் அலட்சியப் போக்காலும், மருத்துவர்களின் பொறுப்பற்ற செயலாலும் சரியான சிகிச்சைகள் அங்கு செய்யப்படுவதில்லை. மாண்புமிகு அமைச்சர் அவர்களே அங்கு நேரில் சென்று ஆய்வு செய்து அதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தி இருக்கிறார் என்பது மகிழ்ச்சி அளிக்கக்கூடிய ஒரு செய்தியாகும். ஆனாலும், . . .



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் சொல்கின்றபோது விழுப்புரம் மாவட்ட மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் பொறுப்பற்ற செயல்களால் சில பிரச்சினைகள் ஏற்படுவதாகச் சொன்னார். பொறுப்பற்ற முறையில் என்ன சேவைகளைச் செய்து, என்ன குறைபாடுகள் அங்கே ஏற்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன். இல்லையென்றால் அவற்றை அவைக் குறிப்பிலே இருந்து நீக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் என்னென்ன செயல்களால் என்னென்ன பிரச்சினைகள் என்று குறிப்பிட்டுச் சொன்னால் அது அவைக் குறிப்பில் இருக்கும். இல்லையென்றால் அவைக் குறிப்பில் இருந்து நீக்கப்படும்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏதேனும் தவறாகச் சொல்லியிருந்தால் அதைத் தவறாக எடுத்துக்கொள்ள வேண்டாம். ஏனென்றால் ஒரு முறை நானும், விக்கிரவாண்டி சட்டமன்ற உறுப்பினர், இருவருமே அங்கு சென்று பார்த்தபொழுது ஒரு கர்ப்பிணிப் பெண், அவர்களின் வயிற்றில் குழந்தை இறந்து இரண்டு நாட்களாக அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்படாமல், மருத்துவர்கள் யாரும் அவரைக் கவனிக்காமல் இருந்த சூழ்நிலையில் நாங்கள் இரண்டு பேரும் அங்கு சென்று, அந்த நேரத்தில் அந்தப் பெண் அழுது கொண்டு வெளியிலே வந்த சூழ்நிலையில், அதிகாரிகளைக் கூப்பிட்டு அவர்களிடம் தெரிவித்த பிறகுதான் அவர்களுக்கு மறுநாள் அறுவை சிகிச்சை செய்து இறந்த குழந்தை வெளியிலே எடுக்கப்பட்டது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற அந்த குறிப்பிட்ட சம்பவம் எந்த ஆண்டு, எந்த மாதத்தில், எப்பொழுது நடைபெற்றது என்று சொன்னால் பதில் அளிக்க வசதியாக

[திரு. ஓ. பன்னீர்செல்வம்] [2012 ஏப்ரல் 3

இருக்கும் என்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்) ஏன், திரு. ஜெ. அன்பழகன், உங்களுக்கு சுருக் என்கிறது? (குறுக்கீடுகள்) பொறுங்கள் திரு. ஜெ. அன்பழகன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் எழுந்திருக்கக்கூடாது. (குறுக்கீடு) அனுமதி இல்லை, உட்காருங்கள். திரு. அ. கணேஷ்குமார், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் கேட்பது, எந்த வருடம், எந்த மாதம், எப்போது நடந்தது என்று சொல்லுங்கள். நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாக இருக்கும். அரசு நடவடிக்கை எடுப்பதற்கு வசதியாகக் குறிப்பிட்டுச் சொல்லவும். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் அங்கே நடந்துவிட்ட ஒரு சம்பவத்தைப் பற்றி அரசிடம் விளக்கம் கேட்டுக்கொண்டிருக்கின்றார். அதைத்தான் நாங்கள் எப்பொழுது, எந்த மாதத்தில் நடைபெற்றது என்று கேட்கிறோம். (குறுக்கீடு) பொறுங்கள். (குறுக்கீடு) ஏன் அவசரப்படுகிறீர்கள் நீங்கள்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள், நீங்கள் சொல்லுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் அவர்கள், மூளி என்றதும் நீங்கள் ஏன் காதைத் தொட்டுப் பார்க்கிறீர்கள்? (குறுக்கீடு) பொறுங்கள், அவரிடம் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இடையிடையே எழுந்திருக்கக் கூடாது. (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன், இடையிடையே இந்த மாதிரி எழுந்தால் நடவடிக்கை எடுக்க வேண்டி இருக்கும். தயவுசெய்து உட்காருங்கள். அனுமதி இல்லை. (குறுக்கீடு) பேசுகிறவர் அவர், உங்களுக்கு என்ன இருக்கிறது? உட்காருங்கள். (குறுக்கீடு) தயவுசெய்து உட்காருங்கள். திரு. அ. கணேஷ்குமார் பேசுங்கள். (குறுக்கீடு) இடையிடையே எழுந்திருக்கக் கூடாது. (குறுக்கீடு) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.



2012 ஏப்ரல் 3]

*பிற்பகல் 1–15*

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இடையில் திரு. ஜெ. அன்பழகன் நுழைவதற்கு எந்தவித காரணமும் இல்லை. (குறுக்கீடுகள்) அவர் என்ன சொல்கிறார்? எந்தக் காரணமும் இல்லாமல் அவர் ஏன் பேசவேண்டும்?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார் அவர்கள் ஒரு கருத்தைச் சொல்லும்போது, அந்தச் சம்பவம் எப்போது நடந்தது என்று மாண்புமிகு நிதியமைச்சர் அவர்கள் கேட்கிறார்; பதில் சொல்ல வேண்டியது அவர். திரு. அன்பழகன் ஏன் எழுந்து நிற்கிறார்? மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. கலை அரசு, உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன், நீங்கள் இந்த மாதிரி அவை நடவடிக்கைக்கு இடையூறு விளைவித்தால், நடவடிக்கை எடுப்பேன். இதுவே இறுதி எச்சரிக்கை. மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திராவிட முன்னேற்றக் கழகத்தினுடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் "எங்கள் அப்பன் குதிருக்குள் இல்லை" என்பது மாதிரி எழுந்துகொண்டிருக்கின்றார். அவர்களது ஆட்சியிலே தொடங்கப்பட்ட இந்த விழுப்புரம் மருத்துவக் கல்லூரி எந்த இலட்சணத்தில் இருக்கிறது என்பதை பத்திரிகையிலே விலாவாரியாக எழுதியிருந்தார்கள். அந்தப் பத்திரிகையிலே வந்த செய்தியைத்தான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களும் இங்கே சுட்டிக்காட்டிக்கொண்டிருக்கிறார்கள். அதில் வந்த குறைகளை நிவர்த்தி செய்ய, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் உடனடியாக விழுப்புரம் மருத்துவக் கல்லூரிக்கு வந்து ஆய்வு செய்தபோதுதான், அங்கே நேரடியாகப் போய் பார்த்த பிறகுதான், கடந்த மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியிலே, எந்த அளவுக்கு, எந்த இலட்சணத்தில் அந்த மருத்துவக் கல்லூரி கட்டப்பட்டிருக்கிறது என்பது தெரிய வந்தது. ஓராண்டு காலம்கூட ஆகவில்லை. அங்கே வாங்கப்பட்டிருக்கின்ற அந்த மருத்துவக் கருவிகள் எல்லாம் இதற்குள் செயல்படவில்லை. அவை எல்லாம் பயன்படுத்தப்படாமலே, பயன்படுத்துவதற்குத் தகுதி இல்லாமல்

[திரு. சி.வி. சண்முகம்] [2012 ஏப்ரல் 3

அவை மூலையிலே ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. கோடிக்கணக்கான ரூபாய் வாரி இறைக்கப்பட்டு ஊழல் செய்யப்பட்டிருக்கின்றது அந்த மருத்துவக் கல்லூரியிலே. அவை எல்லாம் இப்போது மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சியிலே ஆய்வு செய்யப்பட்டு, (குறுக்கீடுகள்) இதுதான் உண்மை. இதுதான் உண்மை. உங்களுக்குத் தைரியம் இருந்தால், இன்றைக்கு விழுப்புரம் மருத்துவக் கல்லூரிக்கு வந்து பாருங்கள். நீங்கள் வாங்கி வைத்திருக்கின்ற அந்த மருத்துவக் கருவிகள் மூலையில் முடங்கிப் போய் இருக்கின்றன. வக்கு இருந்தால், தைரியம் இருந்தால் மருத்துவக் கல்லூரிக்கு வந்து பாருங்கள். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். அரசைப் பொறுத்தவரையில், அது தவறு என்று கருதினால், அதைச் சொல்வதற்கு உரிமை இருக்கிறது. அதை மறுத்துப் பேசுங்கள் நீங்கள். Please sit down. (குறுக்கீடுகள்) தவறு நடந்திருக்கிறது என்று சொல்கிறார். உங்களுக்கு ஏன் கோபம் வருகிறது? நீங்கள் பிறகு challenge பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசியலுக்காகச் சொல்லவில்லை. பொது மக்கள் நலன்களைக் கருதி சொல்கின்றேன். அவர்களுக்குத் தைரியம் இருந்தால், இன்றைக்குக்கூட, இப்போதுகூட வரட்டும் – அவர்களது ஆட்சியிலே வாங்கப்பட்ட அந்தக் கருவிகள் இன்றைக்கும் அந்த மருத்துவக் கல்லூரியிலே பயன்படுத்தப்படாமல், பயன்படுத்துவதற்குத் தகுதி இல்லாமல், ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நிரூபிப்பதற்குத் தயாராக இருக்கிறோம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்படி ஆளாளுக்கு, 4 பேர் எழுந்து பேசினால் நான் பதில் சொல்ல முடியாது. நீங்கள் உட்காருகின்றீர்களா, இல்லையா? (குறுக்கீடுகள்) உங்களுடைய ஆட்சிக் காலத்திலே வாங்கப்பட்ட அந்த மருத்துவ உபகரணங்கள் முற்றிலும் செயலற்றுக் கிடக்கின்றன என்று சொல்லி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த சவாலை ஏற்றார்கள். நீங்கள் அந்த சவாலை ஏற்றுக்கொள்கின்றீர்களா? பதில் சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. நா. இராமகிருஷ்ணன், திரு. ஜெ. அன்பழகன்,



2012 ஏப்ரல் 3] [பேரவைத் தலைவர்]

திரு. அர. சக்கரபாணி உட்காருங்கள். அமைச்சர் அவர்கள் அதற்குப் பொறுப்பேற்றுக்கொள்கிறார். உங்களால் ஏற்றுக்கொள்ள முடியுமா? (குறுக்கீடுகள்) நீங்கள் சொல்லுங்கள். உங்களால் பதில் சொல்ல முடியவில்லை. அவர்தான் சவாலை ஏற்றுக்கொண்டுவிட்டார். உங்கள் ஆட்சியிலே வாங்கப்பட்ட அந்த மருத்துவ உபகரணங்கள் எல்லாம் முழுவதும் செயல்படாமல், மக்கள் பணம் விரயப்படுத்தப்படுகிறது என்ற கருத்தைக் கூறுகிறார் அல்லவா, அதற்குப் பதிலைக் கூறுங்கள். திரு. அர. சக்கரபாணி, நான் உங்களுக்கு மைக் தருகிறேன். வாய்ப்புத் தருகிறேன். (குறுக்கீடுகள்) திரு. ஜெ. அன்பழகன் நீங்கள் எழுவது முறையல்ல. Please sit down. அவைக் காவலர்கள், உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகனை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. ஜெ. அன்பழகன் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

திரு. அர. சக்கரபாணி, உங்களுக்கு மைக் தருகிறேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) உங்களால் பேச முடியவில்லை. (குறுக்கீடுகள்) உங்களுக்கு மைக் தருகிறேன் என்றுதான் சொல்கிறேன். அவர் கூறிய அந்த சவாலுக்கு உங்களுடைய பதில் என்ன? உங்களுக்கு வாய்ப்புத் தருகிறேன். நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) நான் தி.மு.க. கொறடாவுக்குத்தான் வாய்ப்புத் தர முடியும். கொறடா, நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு வணிக வரி மற்றும் பதிவு, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்சியினுடைய கொறடா ஏற்றுக்கொள்கிறாரா? (குறுக்கீடு) திரு. ஜெ. அன்பழகன் ஓர் உறுப்பினர். அந்தக் கட்சியினுடைய கொறடா சவாலை ஏற்றுக்கொள்கிறாரா என்பதுதான் என்னுடைய கேள்வி. (குறுக்கீடுகள்)

பிற்பகல் 1–20

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது பேசுங்கள் என்று நான் சொல்கிறேன். நீங்கள் பேசமாட்டேன் என்கின்றீர்கள். (குறுக்கீடுகள்) வெளியில் போய் சபாநாயகர் சர்வாதிகாரியாக இருக்கிறார். வாய்ப்புத் தர மாட்டேன் என்கிறார். எங்கள்மீது கூறிய

குற்றச்சாட்டுகளுக்குப் பதில் சொல்ல விடமாட்டேன் என்கிறார்கள் என்று மட்டும் சொல்கிறீர்கள். இப்பொழுது வாய்ப்புத் தருகிறேன். பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் பேசுங்கள் (குறுக்கீடுகள்) அமைச்சர் அவர்கள்தான் பொறுப்பேற்றுக்கொள்கிறாரே! திரும்பத் திரும்ப சொல்ல வேண்டுமா? Repeat செய்ய வேண்டுமா? உங்களுடைய ஆட்சிக் காலத்தில் மருத்துவமனைக்காக வாங்கப்பட்ட மருத்துவ சாதனங்கள் பயனற்று, மக்கள் பயன்பாடில்லாத வகையில், கேட்பாரற்று வீணாகக் கிடக்கின்றன. அதில் முற்றிலுமாகத் தவறு நடந்திருக்கிறது என்று பொறுப்பேற்று அமைச்சர் அவர்கள் சொல்கிறார்கள். அதற்கு உங்களுடைய பதில் என்ன? சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) திரு. அர. சக்கரபாணி அவர்களுக்கு மைக் கொடுங்கள். மற்றவர்கள், உட்காருங்கள்.

***திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்ற சமயத்தில், விழுப்புரம் மாவட்டத்தில், அரசு மருத்துவக் கல்லூரியில் வாங்கிய அந்தக் கருவிகளெல்லாம் பழுதடைந்திருக்கின்றன என்று சொன்னார்கள். அதைப்பற்றி நாங்கள் ஒன்றும் சொல்லவில்லை. ஆனால், அவர் சொல்கின்ற குற்றச்சாட்டு, ஊழல் அதிலே நடந்திருக்கிறது என்று சொல்கிறார். ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேச வேண்டும். (குறுக்கீடுகள்) ஆதாரம் இல்லாமல் ஊழல் குற்றச்சாட்டு என்று சொன்னால், ஆதாரத்தை வைத்துக்கொண்டு பேசினால் பரவாயில்லை. பொத்தாம் பொதுவாகப் பேசக்கூடாது. இது சட்டமன்றம். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அர. சக்கரபாணி, ஒன்றைத் தெரிந்துகொள்ளுங்கள். பயன்பாடு இல்லாமல், மக்களுக்குப் பிரயோஜனமில்லாத உபகரணங்கள் வாங்கியது என்றால் அதற்கு என்ன அர்த்தம் என்று சொல்லுங்கள்? (குறுக்கீடுகள்) முறைகேடுக்கு மாற்றுப் பெயர் என்ன என்று சொல்லுங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) Please sit down. (குறுக்கீடுகள்) திரு. அ. கணேஷ்குமார், நீங்கள் பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள், (குறுக்கீடுகள்) திரு. அ. கணேஷ்குமார், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) உங்களுக்கு எவ்வளவோ வாய்ப்பு கொடுத்தாகிவிட்டது.





**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பேசும்போது (குறுக்கீடுகள்) ஊழல் என்று சொன்னவுடன் கோபப்படுகிறார்கள். (குறுக்கீடுகள்) ஏனென்றால், அவர் சொல்லும்போது . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றார். திரு. ரா. சரத்குமார் எப்படிப் பேசலாம் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. இ. பெரியசாமி அவர்கள் எப்படிக் கேள்வி கேட்க முடியும்? (குறுக்கீடு) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்களைப் பேசுமாறு அழைக்கின்றார். திரு. இ. பெரியசாமி அவர்கள் எழுந்து, திரு. ரா. சரத்குமார் அவர்கள் எப்படிப் பேசலாம் என்று எப்படிக் கேள்வி கேட்க முடியும்? (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. ரா. சரத்குமார் அவர்கள்.

**திரு. ரா. சரத்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பழுதடைந்த சூழ்நிலையிலே, பயன்படுத்த முடியாத வகையிலே அங்கு கருவிகள் இருக்கின்றன. அது சென்ற ஆட்சியில் செய்த ஊழல் என்று சொன்னதற்கு, பயன்படாமல் இருந்தால் அதை நாங்கள் ஒத்துக்கொள்கிறோம். ஆனால், ஊழல் என்ற வார்த்தை எங்களுக்குப் பிடிக்கவில்லை என்று சொன்னார்கள். ரூபாய் ஒரு இலட்சத்து அறுபத்தெட்டு ஆயிரம் கோடி ஊழல் செய்து இன்று ஒரு கொள்கை பரப்புச் செயலாளர் (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்) வழக்கு, வழக்கு என்று இருந்து, கொள்கையைப் பரப்ப டில்லியிலே இருந்து கொண்டிருப்பதை மறந்துவிட்டு. . . (குறுக்கீடுகள்) ஊழல் நிரூபிக்கப்பட வேண்டும். ஆகவே, அதைப் பற்றிப் பேச வேண்டும். ஊழலைச் சொன்னால் கோபப்படுகிறார்கள். (குறுக்கீடுகள்) ஏற்கெனவே, வழக்கு நீதிமன்றத்தில் இருக்கிறது. இன்னும் அவர்களுடைய கொள்கை பரப்புச் செயலாளர் அங்குதான் இருந்து கொண்டிருக்கிறார்கள். ஆகவே, அவர்கள்

[திரு. ரா. சரத்குமார்] [2012 ஏப்ரல் 3

தேர்தலில் வெற்றி வாய்ப்பை இழந்ததற்குக் காரணமே, அவர்கள் ஊழல் செய்தார்கள் என்ற காரணத்திற்காகத்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. அ. கணேஷ்குமார், பேசுங்கள். (குறுக்கீடுகள்) நீங்கள் இப்படி ஒட்டுமொத்தமாக எழுந்திருக்கக்கூடாது. (குறுக்கீடுகள்) அனுமதி இல்லை, please sit down. (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், (குறுக்கீடுகள்) மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைப் பார்த்து இப்படி சொடக்கு போட்டுக் கூப்பிடுகிறார். (குறுக்கீடு) திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள் இப்படி சொடக்கு போட்டுக் கூப்பிடுகிறார். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்கள், அவையில் நீங்கள் நடந்துகொண்ட விதம் சரியல்ல. அவைக் காவலர்கள், திரு. எஸ்.எஸ். சிவசங்கரை வெளியேற்றவும். (குறுக்கீடுகள்)

மைக் கொடுத்தும் உங்கள் கொறடா பேசவில்லையே! (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள், உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்) என்னுடைய அனுமதியில்லாமல் தி.மு.க. கொறடா பேசுவது எதுவும் அவைக் குறிப்பில் ஏறாது. (குறுக்கீடுகள்) அவைக் காவலர்கள், திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களை வெளியேற்றுங்கள். (குறுக்கீடுகள்)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் பேரவைக் காவலர்களால் அவையிலிருந்து வெளியேற்றப்பட்டார்.)

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)

பிற்பகல் 1—25

மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார். (குறுக்கீடு) மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒருசில குறிப்பிட்ட சட்டமன்ற உறுப்பினர்கள், குறிப்பாக திரு. ஜெ. அன்பழகன் அவர்களும் திரு. எஸ்.எஸ். சிவசங்கர் அவர்களும் எதற்கெடுத்தாலும் தான்தோன்றித்தனமாக இந்த அவையினுடைய மாண்பைக் கெடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இதேமாதிரி அவர்கள் நடந்துகொண்டால் தயவு செய்து அவர்கள் இருவர் மீதும் கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. கணேஷ்குமார், பேசுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுதொடர்பான அனைத்து விஷயங்களையும் எழுதி மாண்புமிகு அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு சென்று விடுகிறேன் என்று பணிவோடு தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக, 'small is beautiful' என்று சொல்வார்கள். எந்த ஒரு விஷயமும் சிறிய அளவில் இருந்தால் அதை நிருவகிப்பதும் வளர்த்தெடுப்பதும் எளிதாக அமையுமென பா.ம.க. கருதுகிறது. விழுப்புரம் மற்றும் வேலூர் போன்ற மாவட்டங்கள் பெரிய மாவட்டங்களாக உள்ளன. இந்த மாவட்டங்களில் அடிப்படை வசதிகள் இன்னும் முழுமையாகப் பூர்த்தி செய்யப்படவில்லை எனக் கருதுகிறோம். கல்வியிலும் இந்த மாவட்டங்கள் மிகவும் பின்தங்கிய நிலையிலேயே உள்ளன. எனவே, இந்த மாவட்டங்கள் அதிவேக வளர்ச்சி அடைவதை உறுதி செய்யும் வகையில், இந்த மாவட்டங்களைப் பிரித்து புதிய மாவட்டங்கள் அமைப்பதற்கு தமிழக அரசு முன்வர வேண்டுமென பா.ம.க. கேட்டுக்கொள்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், உங்கள் உரையை கடைசியாக ஒரே வரியுடன் முடித்துவிடுங்கள்.

**திரு. அ. கணேஷ்குமார்:** உரையை முடித்துவிடுகிறேன். கோதுமை, ஓட்ஸ், இன்சுலின் மருந்துகள், தலைக்கவசம் ஆகியவற்றின்மீதான வரிகள் நீக்கப்பட்டிருப்பது மகிழ்ச்சியளிக்கிறது. இதனை பா.ம.க. வரவேற்கிறது. அதேநேரத்தில் சமையல் எண்ணெய்மீது 5 விழுக்காடு மதிப்புக் கூட்டு வரி விதிக்கப்படலாம் என்பது நடுத்தர மக்களைப் பெரும் இன்னலுக்கு உள்ளாக்கும் ஒரு செய்தியாகும். எனவே, புதிய வரிகளில் மது வகைகள்மீதான வரியைத் தவிர மீதமுள்ள அனைத்து வரிகளையும் திரும்பப் பெற வேண்டுமென பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக கேட்டுக்கொண்டு விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசின் 2012–2013 ஆம் ஆண்டுக்கான பட்ஜெட்மீதான பொது விவாதத்தில் கலந்துகொண்டு, எனது சட்டமன்றத் தொகுதி மக்களின் உணர்வுகளையும், எம் காங்கிரஸ் பேரியக்கத்தின் உணர்வுகளையும் இங்கே எடுத்துரைப்பதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

மாநிலத்தில் மொத்த பட்ஜெட்டின் மதிப்பு ரூபாய் ஒரு இலட்சத்து 20 ஆயிரத்து 422 கோடி ஆகவும், ஒட்டுமொத்தக் கடன் சுமை ரூபாய் ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 60 கோடி எனவும் தெரிய வந்திருப்பது உண்மையிலேயே எனக்கு மிகுந்த மன வருத்தத்தைத் தருகிறது. வரவு எவ்வளவோ அதற்குச் சற்றே குறைவான கடனும் உள்ளது. இந்தக் கடன் சுமையை எப்படித் தீர்க்கப் போகிறோம்? ஏதாவது இருக்கிறதா என்று பட்ஜெட் புத்தகத்தை நீண்ட நேரமாகத் தேடிப் பார்த்தேன். இதற்குப் பதில் எங்குமே கிடைக்கவில்லை. இதில் நலத் திட்டங்களுக்கு 30 ஆயிரம் கோடி ரூபாய் அறிவித்திருக்கிறீர்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) திரு. எஸ். ஜாண் ஜேக்கப், உட்காருங்கள்.

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதற்கு விடை மத்திய அரசு சமர்ப்பித்துள்ள அந்த பட்ஜெட்டிலேயே இருக்கிறதென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு அமைச்சர் கூறியதற்கு நன்றி. நலத் திட்டங்களுக்கு ரூபாய் 30 ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது என்று கூறியிருக்கிறீர்கள். அதில் இலவசத் திட்டங்கள் ஏராளமானவற்றைச் சுட்டிக்காட்டியிருக்கிறீர்கள். இந்த இலவசங்களைப் பெறுவதற்கான தகுதிப் பட்டியலை முழுவதுமாகக் காணவில்லை. இலவசங்கள் முழுமையும் ஏழைகளுக்குப் போய்ச் சேர்ந்தால் மட்டுமே ஏழைகளை வறுமைக் கோட்டுக்கு மேலே கொண்டுவர முடியும் என்ற கருத்தை நான் இங்கே வலியுறுத்துவதோடு, அவற்றை நடைமுறைப்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 3] *[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]*

அடுத்ததாக, கன்னியாகுமரி மாவட்டத்தில் மக்களை மிகுந்த வேதனைக்கு உள்ளாக்கியிருக்கும் பிரச்சினை ஒன்றை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் பார்வைக்குக் கொண்டுவந்து இதற்குத் தீர்வு காண வேண்டுகிறேன். ஏப்ரல் 1 ஆம் தேதி முதல் பத்திரப் பதிவுக்கான வழிகாட்டி மதிப்பை 170 சதவிகிதம் முதல் 400 சதவிகிதம் வரை உயர்த்தியிருப்பது வருந்தத்தக்கது. குறிப்பாக, மற்ற மாவட்டங்களைவிட கன்னியாகுமரி மாவட்டத்திற்கான வழிகாட்டி மதிப்பீடு 400 சதவிகிதம் வரை தமிழக அரசு உயர்த்தியுள்ளது. குறைந்த அளவு வீட்டு மனைகளுக்கு வழிகாட்டி மதிப்பை உயர்த்தியிருக்கும் நிலையில், ஏக்கர் கணக்கில் நிலங்களைப் பத்திரப் பதிவு செய்யும்போது அதற்கான வழிகாட்டி மதிப்பு குறைவாக இருப்பதன்மூலமும் ஏழையெளிய மக்கள் வீடு கட்ட குறைந்த அளவு மனைகளை வாங்கும்போது வழிகாட்டி மதிப்பு உயர்வால் மிகுந்த சிரமத்திற்கு ஆளாக நேரிடும். ஏனைய மாவட்டங்களில் 170 சதவிகிதம் முதல் 200 சதவிகிதம் வரை உயர்த்தியுள்ள தமிழக அரசு, கன்னியாகுமரி மாவட்டத்தில் மட்டும் 170 சதவிகிதம் முதல் 400 சதவிகிதம் வரை உயர்த்தியிருப்பது கன்னியாகுமரி மாவட்ட மக்களைப் பெரிதும் பாதிக்கும். விளை நிலங்களுக்கு அருகிலுள்ள வீட்டு மனைகளை ஏதாவது ஒரு காரணத்திற்கு அதிக விலையைக் காட்டி விற்பனை செய்திருந்தால். அந்தப் பகுதி முழுவதும் விளை நிலங்கள் வழிகாட்டி மதிப்பும் உயரும் சூழ்நிலை தற்போதைய வழிகாட்டி மதிப்பில் இருப்பதாகக் கூறப்படுகிறது. இதைப் பத்திரப் பதிவுத் துறை அதிகாரிகள் தவறாகப் பயன்படுத்தி, பொதுமக்களுக்குப் பெரும் சிரமத்தை உருவாக்கும் நிலையே ஏற்படும். எனவே, தமிழக அரசு புதிய வழிகாட்டி மதிப்புக் குறியீட்டைத் திரும்பப் பெற்று மக்களுக்கு உதவ வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–30*

அடுத்ததாக, 14½ இலட்சம் குடிசைகளுக்கு 45 மெகா வாட் மின்சாரத்தைச் சேமிக்கும் வகையில் இலவச சி.எப்.எல். பல்புகள் வழங்கப் போவதாகக் கூறியிருக்கிறீர்கள். இதை வரவேற்கிறேன். அத்துடன் பசுமை வீடுகள் திட்டத்தின்கீழ் வீடுகளுக்கு சூரிய மின் விளக்குகள் அளிக்கும் திட்டத்தையும், சூரிய ஒளி வெளிச்சத்தில் இயங்கும் தெரு விளக்குகள் அமைக்கும் திட்டத்தையும் அறிவித்திருக்கிறீர்கள். அத்துடன் குண்டு பல்புகள் உற்பத்திக்குத் தடையும் விதித்திருந்தால் நன்றாக இருந்திருக்கும்.

*[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்]* [2012 ஏப்ரல் 3

*கடந்த காலங்களில் 2 மணி நேரம் அல்லது 3 மணி நேரம் மட்டுமே மின்தடை இருந்தது. தற்போது 4 மணி நேரம், 5 மணி நேரம் கன்னியாகுமரி மாவட்ட கிராமப்புறங்களில் மின்சாரம் இருக்கிறது. மின்சாரம் இருக்கிற நேரங்களில் பகலானாலும், இரவானாலும் தெரு விளக்குகள் மறக்காமல் ஒளி வீசுகிறது. முதல் கட்டமாக பகலிலே எரியும் தெரு விளக்குகளை அணைக்க ஏதாவது ஒரு வழிவகை காணுங்கள். மின் வாரியத்திற்கு மானியம் வழங்குவது ஒருபுறம் இருக்கட்டும், இன்னொருபுறம் வீடுகள்தோறும் கூரைகளில் சூரிய ஒளித் தகடுகள் பதிக்கச் செய்வதற்கு நாம் ஒரு திட்டத்தை அறிமுகப்படுத்தியிருக்கலாம். அவ்வாறு செய்தால் நமக்கு. . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.*

****மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே மின்வெட்டு சற்று கூடியிருக்கிறது என்று சொன்னார்கள். அதற்காக தன்னுடைய வருத்தத்தையும் தெரிவித்திருக்கிறார்கள். அதேபோல, குண்டு பல்புகளைத் தடை செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கிறார்கள். குண்டு பல்புகளை சட்டப்படியாகத் தடை செய்வது சாத்தியம் இல்லையென்பதால், குண்டு பல்புகளுக்குப் பதிலாக சி.எப்.எல். பல்புகளைப் பயன்படுத்த வேண்டுமென்று இப்போது பெரிய அளவிலே ஒரு விழிப்புணர்வு முகாம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*இந்த மின்சாரக் குறைவு—4 மணி நேரம், 6 மணி நேரம் மின்வெட்டு இருக்கிறது என்று சொல்லியிருக்கிறார்கள். அவருக்கு நான் அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன், காங்கிரஸ்காரர்கள் கொஞ்சம் முயற்சி செய்தால், உங்களுடைய மத்திய அரசிடம் சொல்லி, சற்று உயர்த்தி வழங்கலாம். மத்திய தொகுப்பிலிருந்து தமிழ்நாட்டுக்கு வழங்க வேண்டிய, தமிழ்நாட்டுக்கு சட்டப்படியாக ஒதுக்கீடு செய்யப்பட்டது 2,962 மெகா வாட். ஆனால், இன்றைக்கு மத்திய அரசு நமக்கு வழங்கிக் கொண்டிருப்பது 2,247 மெகா வாட். அதாவது, பற்றாக்குறை 715 மெகாவாட். மத்திய அரசு சட்டப்படி, தார்மீக நியாயப்படி, நமது உரிமைப்படி இன்னும் கொடுக்க வேண்டியது 715 மெகா வாட், அதையே நீங்கள் வழங்கவில்லை. அம்மா அவர்கள் கேட்ட கூடுதல் மின்சாரத்தையும் வழங்கவில்லை. சட்டப்படி தர வேண்டிய 715 மெகா வாட் மின்சாரத்தையாவது நீங்கள் உங்களுடைய செல்வாக்கைப் பயன்படுத்தி பெற்றுத் தந்தால்,*



2012 ஏப்ரல் 3] *[திரு. நத்தம் ஆர். விசுவநாதன்]*

*பெருமளவு தமிழ்நாட்டினுடைய மின்வெட்டைப் போக்குவதற்கு உதவியாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*மின்வெட்டுப் பிரச்சினை வருகின்ற ஜூன் மாதத்திலிருந்து படிப் படியாகக் குறையும் என்பதைப் பல்வேறு ஆதாரங்களுடன் அம்மா அவர்கள் பலமுறை விளக்கிச் சொல்லியிருக்கிறார்கள். ஆகவே, மீண்டும், மீண்டும் அதைக் குறிப்பிட்டுச் சொல்வதால்—அதற்கு முழுக் காரணம் கடந்த தி.மு.க. ஆட்சியும், உங்களுடைய மத்திய அரசும்தான் என்பதை மீண்டும் பதிவு செய்ய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள்.*

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** *அமைச்சரது விளக்கத்திற்கு நன்றி. தமிழகத்தில் 548 கோடி ரூபாய் செலவில் அரசுப் போக்குவரத்துக் கழகங்களுக்கு 3 ஆயிரம் புதிய பஸ்கள் வாங்கப் போவதாகக் கூறியிருக்கிறீர்கள். இதை வரவேற்கிறேன். தமிழகத்தில் அரசு பஸ்கள் முழுமையாக இயங்கும் ஒருசில மாவட்டங்களில் கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்று. தமிழகத்திலேயே பழைய, பழுதடைந்த ஆங்காங்கே சாலையோரத்தில் ஓய்வெடுக்கக்கூடிய பஸ்களைக் காண வேண்டுமென்றால், அதை கன்னியாகுமரி மாவட்டத்தில் காணலாம். எனவே, மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடமும், மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்களிடமும் வேண்டி விரும்பி கேட்டுக்கொள்வதெல்லாம். . .*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.*

****மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கன்னியாகுமரி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், அது திருநெல்வேலி மண்டல போக்குவரத்துக் கழகத்தினுடைய கட்டுப்பாட்டில் உள்ளது. 3 ஆயிரம் புதிய பேருந்துகளைப் பொறுத்தவரையில், 2011–2012 ஆம் ஆண்டில் 265 பேருந்துகளை திருநெல்வேலி மண்டல போக்குவரத்துக் கழகத்திற்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள். அந்தப் புதிய பேருந்துகள் கூண்டுகள் கட்டப்பட்டு 464 புதிய பேருந்துகளை மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தொடங்கி வைத்துள்ளார்கள். அதில் குறிப்பிடத்தக்க விஷயம் என்னவென்று சொல்ல*

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2012 ஏப்ரல் 3

வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர்கள், பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கைகளை ஏற்று 250 புதிய வழித்தடங்களுக்கு மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் கொடியசைத்து துவக்கி வைத்திருக்கின்றார்கள். ஏனென்றால், கூண்டு கட்டுகின்ற பணி அறிவிக்கப்பட்டது செப்டம்பர் மாதம்தான். மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் தெளிவாக எடுத்துச் சொன்னார்கள். கடந்த ஆண்டு பட்ஜெட் கூட்டத் தொடர் முடிந்த பிறகு, அரசாணை வெளியிடப்பட்டு, அடிச்சட்டங்கள் வாங்குவதற்கான கொள்முதல் ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டன. அதற்கடுத்து, கூண்டுகள் கட்டுவதற்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோரப்பட்டு, இந்தப் பணிகள் முடியப்பெற்று, கூண்டுகள் கட்டி, 464 புதிய பேருந்துகள் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்களால் தொடங்கி வைக்கப்பட்டிருக்கின்றன.

*பிற்பகல் 1–35*

அதுபோல் கன்னியாகுமரி மாவட்டத்தில்—கடந்த ஆட்சியில் நடவடிக்கை எடுக்கப்படாமல் அந்தப் பழைய பேருந்துகளுக்குத் தற்பொழுது மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், 2012–2013 ஆம் ஆண்டில் 548 கோடி ரூபாய் செலவில் 3,000 புதிய பேருந்துகளை வழங்கியிருக்கின்றார்கள்— அதுபோன்று பேருந்துகளை மாற்றி புதிய பேருந்துகளாக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்களுடைய நல்லாட்சியில் இயக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப் அவர்கள் பேசுகின்றபொழுது, கன்னியாகுமரி மாவட்டத்தில் போக்குவரத்துக் கழகத்தினுடைய பேருந்துகள் ஆங்காங்கே ஓய்வு எடுத்துக்கொண்டிருப்பதாக இங்கே ஒரு தவறான கருத்தைப் பதிவு செய்தார்கள். இது நடைபெற்றது கடந்த மைனாரிட்டி திமுக. ஆட்சியில் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு அம்மா அவர்கள் ஓய்வுக்கே ஓய்வு கொடுத்து இன்றைக்குத் தமிழகத்தினுடைய முதலமைச்சராக இருந்து பணியாற்றிக் கொண்டிருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கடந்த 2011–2012 ஆம் ஆண்டில் 3,000



2012 ஏப்ரல் 3] [திரு. ஓ. பன்னீர்செல்வம்]

பேருந்துகள் வாங்குவதற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டு அந்தப் பேருந்துகள் இப்பொழுது படிப்படியாக வந்து கொண்டிருக்கின்றன. இந்த ஆண்டும் 2012–2013–ல், 3,000 பேருந்துகள் வாங்குவதற்காக மாண்புமிகு அம்மா அவர்கள் உத்தரவிட்டிருக்கின்றார்கள். அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய வரலாற்றிலேயே இரு ஆண்டுகளில் 6,000 பேருந்துகளை வாங்குவதற்கு உத்தரவிட்டிருக்கிற ஒரே முதலமைச்சர் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள்தான் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன் (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய பஸ்கள் வாங்கியது மட்டுமல்ல, பழைய பஸ்களைப் புதுப்பித்தது மட்டுமல்ல, கடந்த மைனாரிட்டி தி.மு.க. அரசின் நிருவாகச் சீர்கேடுகளால் அரசுப் போக்குவரத்துக் கழகப் பேருந்துகள் பல நீதிமன்றங்களால் ஜப்தி செய்யப்பட்டு, நீதிமன்ற வளாகத்திற்கு வெளியே தூங்கிக் கொண்டிருந்த பஸ்களையெல்லாம் என்னுடைய தலைமையிலான அரசுதான் இப்பொழுது மீட்டுத் திரும்ப பயன்பாட்டுக்குக் கொண்டு வந்திருக்கிறது என்பதைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப். ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. நான் கேட்டதே புதிய பஸ் வேண்டுமென்றுதான். 500 புதிய பஸ்கள் எங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திற்கு ஒதுக்கித் தாருங்கள் என்றுதான் கேட்டேன். கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள கடற்கரைப் பகுதியில் தேங்காய்ப்பட்டணம் என்கிற கடற்கரைக் கிராமம் மிகவும் எழில் கொஞ்சும் பகுதியாகும். தாமிரபரணி ஆறும், கடலும் ஒன்று சேர்கின்ற கழிமுகப் பகுதியாதலால், இந்தப் பகுதியைப் பார்க்க ஏராளமான சுற்றுலாப் பயணிகள் வருவதுண்டு. தற்பொழுது மீன்பிடித் துறைமுகம் வேலைகளும் வேகமாக நடைபெற்று வருவதால் பொதுமக்கள் ஏராளமானோர் தினமும் வந்து செல்கின்றனர். இங்கு வருகின்ற சுற்றுலாப் பயணிகளில் குறிப்பாக, காதல் ஜோடிகள், மாணவ, மாணவிகள் போன்றவர்களிடம் இதே பகுதியைச் சேர்ந்த சமூக

[திரு. எஸ். ஜாண் ஜேக்கப்] [2012 ஏப்ரல் 3

விரோதக் கும்பல் ஒன்று அத்துமீறுவதாக ஏற்கெனவே பல புகார்கள் இருந்தன. இந்த நிலையில் ** பாதிக்கப்பட்ட இளம் பெண்ணின் எதிர்கால வாழ்க்கையைக் கருத்தில்கொண்டு, புகார் கொடுக்காமல் ஆறுதல் கூறி அனுப்பி வைத்தனர். ** ...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். ஜாண் ஜேக்கப். எப்பொழுது நடந்தது இந்தச் சம்பவம்?

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இந்த மாதம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் இன்று காலையில் என்னைப் பார்த்தீர்கள். இதுசம்பந்தமாக என்னிடத்தில் ஆதாரம் ஏதாவது கொடுத்தீர்களா? ஆதாரம் ஏதும் கொடுக்காமல், எப்படிப் பதில் வரும்? நீங்கள் இதுசம்பந்தமான ஆதாரத்தை நாளைக்கு என்னுடைய அறையில் வந்து கொடுங்கள். அதன் பிறகு இது அவைக் குறிப்பில் இடம் பெறுவது குறித்து பரிசீலிக்கப்படும். இப்பொழுது அவைக் குறிப்பில் ஏறாது. நீங்கள் என்னைக் காலையில் வந்து பார்த்தபொழுது, இந்தப் பத்திரிகைச் செய்தியை காட்டவில்லை (குறுக்கீடு) மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு பெண் சம்பந்தப்பட்ட ஒரு சம்பவத்தை இங்கே குறிப்பிட்டு, அந்தப் பெண்ணின் எதிர்காலத்தைக் கருத்தில்கொண்டு சம்பந்தப்பட்டவர்கள் புகார் தரவில்லை என்கிறார். புகார் தராதபோது, காவல் துறை எப்படி நடவடிக்கை எடுக்க முடியும்? நீங்கள் புகார் கொடுக்கச் சொல்லுங்கள், நடவடிக்கை எடுக்கவில்லையென்றால் பிறகு சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

பிற்பகல் 1–40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், நீங்கள் அந்தப் பத்திரிகை செய்தியை வைத்துப் பேசக்கூடாது. அடுத்த சப்ஜெக்டைப் பற்றிப் பேசுங்கள்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** இல்லை, நான் சொல்ல வந்தது இத்தகைய சம்பவங்கள் தொடர்ந்து நடந்து கொண்டிருக்கின்றன. அந்தப் பகுதி மக்களை அது பாதிக்கக்கூடாது என்பதுதான்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்படிப் பொத்தாம் பொதுவாகக் குற்றச்சாட்டு சொல்வது தவறு. பத்திரிகைச் செய்திகளின் அடிப்படையில் காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது. பாதிக்கப்பட்டவர்கள் சம்பந்தப்பட்ட காவல் நிலையத்திற்குச் சென்று, அங்கே புகார் கொடுக்க வேண்டும். எழுத்தில் கொடுக்க வேண்டும். அப்போதுதான் காவல் துறையினர் நடவடிக்கை எடுக்க முடியும். புகாரே கொடுக்காமல், காவல் துறை நடவடிக்கை எடுக்கவில்லை என்று குற்றம் சாட்டுவது சரியல்ல. (மணியடிக்கப்பெற்றது)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக அரசினுடைய 2012–2013 ஆம் ஆண்டிற்கான இந்த நிதிநிலை அறிக்கையில், அரசு அறிவித்திருக்கக்கூடிய விலையில்லா இலவசத் திட்டங்கள் இதிலே முழுமையாகச் சொல்லப்பட்டிருக்கின்றது.

அடுத்ததாக, நிதிநிலை அறிக்கையில் ஒவ்வொரு துறைக்கும் ஒதுக்கியிருக்கக்கூடிய நிதிகள் சம்பந்தமாகவும் இந்த அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. மாநிலத்தினுடைய நலன்களை மையமாக வைத்து, செயல்படுத்துவதற்கான அறிவித்திருக்கக்கூடிய திட்டங்களும் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றன. எதிர்காலத்தில் இந்த மாநிலத்தை மற்ற மாநிலங்களைக் காட்டிலும் முன்மாதிரி மாநிலமாக வழி நடத்திச் செல்வதற்கான முறையில் இதிலே பல்வேறு திட்டங்கள் சொல்லப்பட்டிருந்தாலும்கூட, சமீபகாலத்திலே புதிய திட்டங்கள் ஏதும் மத்திய அரசினால் தமிழகத்திற்கு கொண்டுவரப்படவில்லை. ஏதாவது தமிழகத்திற்கு அப்படிப்பட்ட புதிய திட்டங்கள் பற்றி, மாநில அரசு மத்திய அரசாங்கத்திடம் கேட்டோ அல்லது மத்திய அரசாங்கம் அறிவிப்பதற்கான திட்டங்கள் பற்றி சொல்லப்பட்டிருக்கின்றதா என்று பார்த்தால் இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்படவில்லை என்ற ஒரு குறை இருப்பதாகவே நான் காண்கின்றேன்.

*[திரு. எம். ஆறுமுகம்]* [2012 ஏப்ரல் 3

கடந்த 2 நாட்களுக்கு முன்னால், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய சட்டமன்ற உறுப்பினர் மரியாதைக்குரிய திரு. எஸ்.பி. முத்துக்குமரன் அவர்கள், சட்டமன்ற உறுப்பினராக இருந்தபோதே ஒரு நிகழ்ச்சிக்குச் சென்று வருகின்றபோது, விபத்து ஏற்பட்டு அகால மரணத்தை எய்தியிருக்கின்றார்கள். சட்டமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்களாகச் செயல்பட்டுக் கொண்டிருக்கக்கூடிய காலத்தில் இப்படிப்பட்ட விபத்துகள் நேரிடுகின்றபோது, அதனால் அந்தக் குடும்பமும், அவர்களுடைய குழந்தைகளும் கடுமையான நெருக்கடிக்கும், சிக்கலுக்கும் உள்ளாக்கக்கூடிய அந்தச் சூழ்நிலையில், இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களைப் பாதுகாப்பதற்கான முறையிலே ஏதாவது நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா? உதவிகள் செய்யப்படுமா என்று நான் இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

20 கிலோ அரிசியில் தொடங்கி ஏழைப் பெண்களுக்கான திருமண உதவித்தொகை, தாலிக்கு தங்கம், மகப்பேறு உதவித் திட்டம், முதியோர், மாற்றுத் திறனாளிகளுக்கான, விதவைகளுக்கான உதவித்தொகை, மருத்துவக் காப்பீட்டுத் திட்டம், பள்ளிக் குழந்தைகளுக்கான உதவி, விலையில்லா மிக்ஸி, கிரைண்டர், மின் விசிறி, ஏழைக் குடும்பங்களுக்குக் கறவை பசுக்கள், ஆடுகள் வழங்குவது, சூரிய மின் சக்தியுடன்கூடிய பசுமை வீடுகள், மடிக் கணினிகள், நிரந்தர சேதத்திற்கு உள்ளான குடிசைகளுக்கு மாற்றாக ஒரு இலட்சம் கான்கிரீட் வீடுகள், 'தானே' புயலால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணப் பணிகள், இவையெல்லாம் இந்த பட்ஜெட் உரையிலே சொல்லப்பட்டதும் மட்டுமல்ல, நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளும் தொடங்கப்பட்டு, நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றன.

தமிழ்நாடு கட்டமைப்பு மேம்பாட்டு வாரியம் அமைக்க சட்டம் இயற்றப்படும் என்று கூறி, அதற்கான முறையில் தொடக்கமாக ரூபாய் ஆயிரம் கோடி ஒதுக்கப்பட்டுள்ளது வரவேற்கக்கூடிய ஒன்றே. மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள ஏற்றத்தாழ்வுகள் இருப்பதைக் களைவதற்காக சுகாதாரம், கல்வி, தனிநபர் வருமானம், வறுமை, பாலினம், வேலைவாய்ப்பு போன்றவற்றை மேம்படுத்த, 100 பின்தங்கிய வட்டாரங்கள், பின்தங்கிய நகர்ப்புற உள்ளாட்சி அமைப்புகளைக் கண்டறிந்து மாநில சரிநிகர் வளர்ச்சி நிதி என்ற சிறப்பு நிதியை உருவாக்குவதற்கு தொடக்கமாக ரூபாய் 100 கோடி



2012 ஏப்ரல் 3] *[திரு. எம். ஆறுமுகம்]*

ஒதுக்கியுள்ளது பாராட்டுதலுக்குரியது மட்டுமல்ல, ஏற்றத் தாழ்வற்ற ஒரு சூழ்நிலையை தமிழகத்திலே உருவாக்குவதற்கான முறையிலே எடுத்திருக்கக்கூடிய ஒரு நடவடிக்கையாக நாங்கள் பாராட்டுகிறோம்.

*பிற்பகல் 1–45*

2012–2013 ஆம் ஆண்டுக்கு திட்டப் பணிகளுக்கு மிக அதிகமான அளவு நிதியாக ரூ.28,000 கோடி உயர்த்தியிருப்பது, இதில் ஆதி திராவிடர், பழங்குடியின மக்கள் உரிய பங்கினைப் பெற உறுதி செய்வது, இந்தத் திட்டத்தின் மூலமாக வறுமை ஒழிப்புத் திட்டம், தமிழ்நாடு நகர்ப்புற வாழ்வாதாரத் திட்டம் தொடங்குவது, இதுபோன்ற திட்டங்களுக்கு ரூ.200 கோடி ஒதுக்கீடு செய்திருப்பதும் வரவேற்கக்கூடியதோடு பாராட்டுதலுக்குரியதுமாகும்.

2012–2013 ஆம் ஆண்டில் ஒரு இலட்சம் வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவது என்று அறிவித்திருப்பதும், நம்முடைய மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் பேசுகின்றபோதும் ஒரு இலட்சம் மட்டுமல்ல, 1,18,000 பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதாக அறிவித்திருப்பதும் வரவேற்கக்கூடிய ஒன்றாக இருக்கிறது. இருந்தாலும்கூட, இப்பொழுது தமிழகத்தில் பல்வேறு இடங்களில் இந்த வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்குவதற்கென இருக்கக்கூடிய classification -நத்தம் புறம்போக்கு என்று இருக்குமேயானால், அதற்கான முறையிலே பட்டாவினை அரசு அதிகாரிகள் கொடுத்து விடுவார்கள். ஆனால், நீண்ட காலமாக, 50 ஆண்டுக்காலம், 100 ஆண்டுக்காலமாக நம்முடைய கிராமப்புறப் பகுதிகளில் மட்டுமல்ல ஏரிப் புறம்போக்கு, பள்ளவாரி, ஓடைப் புறம்போக்கு மற்றும் காட்டுப் பகுதிகள், இதுபோன்று இருக்கக்கூடிய இடங்களில் மக்கள் குடியிருந்து வருகிறார்கள். அவர்களுக்குப் பட்டா கொடுப்பதற்கு, நத்தம் புறம்போக்கு என்ற classification இல்லாத காரணத்தால், பட்டா கொடுக்காமல் நிறுத்தி வைக்கப்பட்டது மட்டுமல்ல, எந்தக் காலத்திலேயும் பட்டா பெறமுடியாத சூழ்நிலையில் இருக்கின்றது. எனவே, நான் மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக் கொள்வது, ஏரிப் புறம்போக்கு, பள்ளவாரி, ஓடை இதுபோன்று இருக்கக்கூடிய இடங்களிலும், காட்டுப் பகுதிகளிலும் 100 ஆண்டுக்காலமாக மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு—பெயர்தான் காட்டுப் பகுதி என்று இருக்கிறது. ஆனால் அது கிராமப் பகுதியாக, நகரத்தினுடைய நடுப் பகுதியிலே இருக்கின்றது—அவர்களுக்கு அந்த classification–ஐ மாற்றி, நத்தம் புறம்போக்காக மாற்றி அவர்களுக்கும் பட்டா

[திரு. எம். ஆறுமுகம்] [2012 ஏப்ரல் 3

கொடுப்பதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய வால்பாறை தொகுதியில் ஆனைமலை ஒன்றியத்திற்குட்பட்ட கோட்டூர் டவுன் பகுதியில்கூட காட்டுப் பகுதி என்று 100 ஆண்டுகளுக்கு முன்பே வரையறுக்கப்பட்டிருக்கக்கூடிய பகுதியில் பட்டா கொடுக்க முடியாத சூழ்நிலை இருந்து கொண்டிருக்கின்றது. இவற்றையெல்லாம் மாற்றியமைக்க வேண்டும். இதுபோன்ற பகுதிகளுக்குப் பட்டா கொடுக்கக்கூடிய முறையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதைப் பொறுத்தவரையில், இதற்கு முன்னாலே சட்டமன்றத்திலே விளக்கத்தைச் சொல்லியிருக்கிறோம். அதாவது, நீர்வழிப் புறம்போக்கு, ஏரிப் புறம்போக்கிலே வாழ்ந்து கொண்டிருக்கக்கூடியவர்களுக்குப் பட்டா வழங்குவது சம்பந்தமாக உச்ச நீதிமன்றத்திலே தடை இருக்கின்ற காரணத்தால் பட்டா வழங்க இயலவில்லை என்ற நிலையை நாங்கள் சுட்டிக் காட்டியிருக்கிறோம். அதைத் தொடர்ந்து, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவதற்கும் உச்ச நீதிமன்றத்திலே தடை இருக்கின்ற காரணத்தாலேதான் பட்டா வழங்க இயலவில்லை என்பதை நான் இந்த நேரத்திலே கோடிட்டுக் காட்ட விரும்புகிறேன்.

அதேபோல, காட்டுப் பகுதி என்று சொல்வது, சில இடங்களிலே பார்க்கின்றபோது வனத் துறைக்குச் சொந்தமான இடங்களில் சிலர் குடியிருக்கிறார்கள். வனத் துறைப் பகுதியிலே குடியிருக்கின்றபொழுது, அந்தக் காட்டுப் பகுதியிலே வாழ்கின்றவர்களுக்கு மத்திய அரசினுடைய அனுமதி பெற்றுதான் பட்டா வழங்க வேண்டியிருக்கிறது. பொது இடங்களுக்குப் பாதை வசதி செய்து கொடுக்க வேண்டுமென்றாலும், பொது நலன்களுக்காக பல்வேறு இடங்களிலே பள்ளிகள் கட்ட வேண்டுமென்றால்கூட அதற்கான பரிந்துரையை மத்திய அரசுக்கு அனுப்ப வேண்டியிருக்கிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த இடங்கள் வனத் துறைக்குச் சம்பந்தப்பட்டது அல்ல. கோட்டூரில் 500 குடும்பங்கள் இருக்கின்ற பகுதிகளில், 34 வீடுகளுக்கு மட்டும் காட்டுப் பாதை என்று நிறுத்தி வைத்திருக்கிறார்கள். அதைத்தான் நான் குறிப்பிட்டுச் சொன்னேன். சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அதனைப் பார்க்கலாம். அம்மாதிரி இருக்கக்கூடிய இடங்களுக்குப் பட்டா கொடுக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையைப் பொறுத்தமட்டிலும் 3804.96 கோடி ரூபாய் உணவு உற்பத்தியைப் பெருக்குவதற்கு போன்ற பல்வேறு நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான முறையிலே கொள்கைகள் வகுக்கப்பட்டிருக்கின்றன; இது பாராட்டுதலுக்குரியது.

கல்விக்கும் 14,552.82 கோடி ரூபாய் ஒதுக்கியிருப்பதும், ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கும் அதிகமாக நிதியை ஒதுக்கியிருப்பது அந்த மக்கள் இருக்கக்கூடிய கீழ் நிலையிலிருந்து மேலும் முன்னேறுவதற்கான சூழ்நிலையை உருவாக்குவதற்கான முறையில் அமைந்திருப்பதைப் பாராட்டுகிறோம்.

உள்ளாட்சி அமைப்புகளைப் பொறுத்தமட்டில், உள்ளாட்சி அமைப்புகளுக்குப் பல்வேறு நடவடிக்கைகளை, திட்டங்களை அறிவித்திருந்தாலும்கூட உள்ளாட்சி அமைப்புகளில் காலிப் பணியிடங்கள் பூர்த்தி செய்யப்பட வேண்டும். வால்பாறையில் முனிசிபாலிட்டி ஆணையர் பதவி கிட்டத்தட்ட ஐந்தாண்டுக் காலமாகப் பூர்த்தி செய்யப்படாமல் இருந்து கொண்டிருக்கின்றது. இதுபோல, மற்ற இடங்களிலும் காலியாக இருப்பதாகத் தெரிய வருகிறது. எனவே, ஆணையர் பதவி இல்லாத காரணத்தினாலே, அரசு அறிவிக்கக்கூடிய பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்துவதிலே காலதாமதம் ஏற்படுகின்றது.

பிற்பகல் 1–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நகராட்சி நிருவாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.

[2012 ஏப்ரல் 3

**மாண்புமிகு திரு. கே.பி. முனுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடும்போது, கடந்த மைனாரிட்டி திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியிலிருந்து தொடர்ந்து ஐந்து ஆண்டுகாலமாக அந்தப் பதவி காலியாக இருந்துகொண்டிருக்கிறது என்பதை அவர் ஒத்துக் கொண்டிருக்கிறார். அதை மாற்றுகின்ற விதத்தில்தான் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் துறைவாரியாக ஆய்வு செய்தபோது, எங்கெங்கெல்லாம் காலிப் பணியிடங்கள் இருக்கின்றதோ அவை முழுவதும் நிரப்பப்பட வேண்டுமென்ற உத்தரவைப் பிறப்பித்திருக்கிறார்கள். ஏற்கெனவே, மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் சொன்னதுபோல, அந்தத் துறை மானியக் கோரிக்கை வருகின்றபோது இதற்குரிய சரியான பதில் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அனுமதியோடு தெரிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சிகளில் இருக்கக்கூடிய துப்புரவுப் பணியாளர்களுடைய எண்ணிக்கை குறைவாக இருக்கிறது என்று கருதுகிறேன். ஜனத்தொகை அதிகரித்துவிட்டது, ஏரியா அதிகரித்துவிட்டது. எனவே, ஊராட்சி, பேரூராட்சி, நகராட்சி, மாநகராட்சி போன்ற பகுதிகளில் இருக்கக்கூடிய துப்புரவுப் பணியாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்குத் தேவையான நடவடிக்கையை அரசு எடுக்கவேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

காவல் துறையைப் பொறுத்தமட்டிலும், நில மோசடி சம்பந்தமாக எடுக்கப்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கை என்பது பாராட்டுதலுக்கு உரியது தான். ஆனால், இந்த நேரத்தில் ஒன்றைக் குறிப்பிட்டுச் சொல்லவேண்டும். மக்கள் நெருக்கமாக இருக்கக்கூடிய பகுதிகள், மருத்துவமனைகள் இருக்கக்கூடிய பகுதிகள், பள்ளிகள் இருக்கக்கூடிய பகுதிகளில் TASMAC மதுக் கடைகள் செயல்பட்டுக் கொண்டிருப்பது, அந்தப் பகுதியில் படிக்கும் மாணவர்களுக்கு மட்டுமல்ல, பொதுமக்களுக்கும் இடையூறாகவே இருந்துகொண்டிருக்கிறது.



2012 ஏப்ரல் 3]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. நத்தம் ஆர். விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விதிமுறைகளுக்கு மாறாக எங்காவது பள்ளிகளுக்கோ, வழிபாட்டுத் தலங்களுக்கோ அருகிலே TASMAC மதுபானக் கடைகள் இருக்குமானால், அதைக் குறிப்பிட்டுச் சொன்னால் உடனடியாக அவற்றை மாற்றியமைப்பதற்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆறுமுகம், நீங்கள் இடத்தைக் குறிப்பிட்டு மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் எழுதிக்கொடுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் இருக்கக்கூடிய கோட்டூரில் மையத்திலேயே அவ்வாறு இருக்கிறது. அதைப்போல, வேட்டைக்காரன்புதூர் என்ற இடத்தில் உள்ளது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் அறிவிப்புப்படி அந்த மதுபானக் கடைகளை எடுக்கவேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

வேளாண்மைத் துறையில் பருத்திச் சாகுபடி தமிழகத்திலே அதிகரிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன். கிட்டத்தட்ட 2,200 பஞ்சாலைகள் தமிழகத்திலே இயங்கிக்கொண்டு வருகின்றன. இந்தப் பஞ்சாலைகளுக்கு ஆண்டு ஒன்றுக்கு கிட்டத்தட்ட 45 இலட்சம் பேல்கள் பஞ்சு தேவை. ஆனால், தமிழகத்திலே பருத்தி 5 இலட்சம் பேல்கள் மட்டும்தான் உற்பத்தியாகின்றது. மீதம் தேவையான 40 இலட்சம் பேல்கள் வட மாநிலங்களிலிருந்தோ, வெளிநாடுகளிலிருந்தோ இறக்குமதி செய்ய வேண்டும். எனவே, பஞ்சாலைத் தொழிலைப் பாதுகாக்கக்கூடிய முறையில், அதற்குத் தேவையான அந்தப் பருத்திச் சாகுபடியை அதிகரிக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நீர் வள மேலாண்மைப் பணிகளுக்கு 3,224.73 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்திருப்பது ஏரிகளை மேம்படுத்துவதும், மாநிலத்தில் பாயும் நதிகளை இணைத்தலும் உண்மையிலேயே தமிழகத்திலே உடனடியாகச் செய்யப்பட வேண்டிய பணிகள். நதிகள்

[திரு. எம். ஆறுமுகம்] [2012 ஏப்ரல் 3

இணைப்பு என்பது பரவலாகப் பேசப்பட்டு வருகிறதே தவிர, நடைமுறைப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மத்திய அரசாங்கம் செய்வதாக இல்லை. அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளவில்லை. எனவே, தமிழகத்திலே பாயும். . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு திரு. கே.வி. இராமலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மத்திய அரசு உதவி செய்யாவிட்டாலும் பரவாயில்லை, மாநில நிதியிலிருந்து இந்த நதிகள் இணைப்புப் பிரச்சினைக்கு இந்த ஆண்டு அந்தப் பணிகளைத் தொடங்குவதற்கு மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள் ஆணையிட்டுள்ளார்கள். அதன்படி பணிகள் நடைபெறும் என்பதை இந்த நேரத்திலே உறுப்பினர் அவர்களுக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களின் பதிலுக்கு நன்றி. இந்த நிதிநிலை அறிக்கையில், இந்த நீர் வள மேலாண்மைப் பணிகளுக்கென ஒதுக்கப்பட்ட பணிகள் ஏரிகளை மேம்படுத்துவது, தூர் வாருவது போன்ற பணிகளுக்காகச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆனால் இப்போது இருக்கக்கூடிய சிக்கல் என்னவென்றால், கோயம்புத்தூர் போன்ற பல்வேறு இடங்களில் இந்தக் குளங்கள் முழுவதும் ஒருவிதமான செடி ஆக்கிரமிப்பு செய்கிறது. (குறுக்கீடு) ஆகாயத் தாமரைச் செடியை அகற்ற முடியாமல் அந்தத் தண்ணீர் பயன்படுத்த முடியாமல் இருந்துகொண்டு வருகின்றது. எனவே, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய குளங்களிலே உள்ள ஆகாயத் தாமரைச் செடிகளை முழுவதும் அப்புறப்படுத்தக்கூடிய ஒரு திட்டத்தை அறிவிக்க வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

இந்த நிதிநிலை அறிக்கையிலே புதிய தொழிற்கொள்கையை விரைவில் அரசு வெளியிடும் என்று சொல்லப்பட்டிருக்கிறது. தமிழகத்தில் மத்திய அரசினுடைய செயல்பாட்டின் காரணமாக, மத்திய அரசாங்கம் பன்னாட்டு கம்பனிகளையும், கார்ப்பரேட் நிறுவனங்களையும் வளப்படுத்துவதற்கான முறையில். . .



2012 ஏப்ரல் 3]

*பிற்பகல் 1–55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு செல்வி ஜெ ஜெயலலிதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே, கடந்த ஆண்டு இந்தச் சட்டமன்றப் பேரவையில், தமிழ்நாடு முழுவதும் பார்த்தீனியம் செடிகளை அகற்றுவதற்கான ஒரு இயக்கம் நடத்தப்படும் என்று அறிவித்தேன். அதன்படி நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதைப்போலவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இப்போது இங்கே தெரிவித்த கருத்திற்கிணங்க, தமிழ்நாடு முழுவதும் உள்ள குளங்களில் ஆகாயத் தாமரைகளை அகற்றுவதற்கு இந்த அரசு நடவடிக்கை எடுக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.*

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி. புதிய தொழில் கொள்கையை அரசு விரைவில் அறிவிக்கும் என்று இந்த நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. நான் ஒரு விஷயத்தைக் குறிப்பிட விரும்புகிறேன், ஒருகாலத்தில் மத்திய அரசாங்கம் பொதுத் துறை நிறுவனங்களைத் தமிழகத்திலே தொடங்குவதற்கும், பெரிய, பெரிய நிறுவனங்களைத் தொடங்குவதற்கும் நடவடிக்கை மேற்கொண்டது. ஆனால், சமீப காலமாக, தமிழகத்தில், பொதுத் துறை நிறுவனங்களோ அல்லது புதிய தொழிற்சாலைகளோ தொடங்காமல் மத்திய அரசாங்கம் தமிழகத்தைப் புறக்கணிப்பதாகவே நான் கருதுகிறேன். எனவே, மத்திய அரசாங்கம் புதிய தொழிற்சாலைகளைத் தமிழகத்திலே தொடங்குவதற்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

***மாண்புமிகு திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதிநிலை அறிக்கையின் 35–வது பக்கத்தில் தெளிவாக மாண்புமிகு முதல்வர் அவர்கள் குறிப்பிட்டிருக்கின்றார்கள். மத்திய அரசு உதவி செய்தாலும் சரி, செய்யாவிட்டாலும் சரி, அது எந்தத் தொழிலாக இருந்தாலும் சரி, மாநில அரசு, அதாவது மாண்புமிகு

[திரு. பி. தங்கமணி] [2012 ஏப்ரல் 3

அம்மா அவர்களினுடைய அரசு வந்ததற்குப் பின்னால், பன்னாட்டு நிறுவனங்கள் மற்றும் பல நிறுவனங்கள் இன்னும் மூன்று மாத காலத்திலே ரூ.20,000 கோடி முதலீட்டைச் செய்யவிருக்கின்றன என்பதை உங்களுக்குத் தெளிவாக எடுத்துச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மரியாதைக்குரிய மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதிலே சொல்லப்பட்டிருக்கக்கூடிய புதிய. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எம். ஆறுமுகம், உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** உரையை முடித்துவிடுகிறேன். ஜவுளித் துறையைப் பொறுத்தமட்டிலும், ஜவுளித் தொழில் முற்றிலுமாக முடங்கி, இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் வாழ்விழக்கக்கூடிய நிலை ஏற்பட்டுள்ளது என்று நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. தமிழகத்தில் அதிகமான வேலைவாய்ப்பை உருவாக்கிக் கொடுக்கக்கூடிய தொழில் ஜவுளித் தொழில். தமிழகத்திலே கிட்டத்தட்ட 2,200 தொழிற்சாலைகள் இருக்கின்றன. மாண்புமிகு அம்மா அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு என்று தனித் தொழில் தீர்ப்பாயம் அமைக்கப்பட்டு, இடைக்கால நிவாரணமே வழங்கப்பட்டது. அதற்குப் பிறகு இதுவரை அந்தப் பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு வழக்கு மன்றமும் ஒரு தீர்ப்பை வழங்கவில்லை; இடைக்கால நிவாரணமும் வழங்கப்படவில்லை; பஞ்சாலைத் தொழிலாளர்களுக்கு ஊதிய உயர்வும் கிடைக்கவில்லை. இந்த நேரத்தில் பல பஞ்சாலைகள் மூடிக்கிடக்கின்றன. இந்த நேரத்திலே வேண்டுகோளாக வைக்க விரும்புவது என்னவென்றால், இந்த ஆலைகளையெல்லாம் அரசு ஏற்றமுடன் நடத்துவதற்கான திட்டங்கள் ஏதாவது உண்டா என்று நான் அறிய விரும்புகிறேன். அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாக்க வேண்டும்.

போக்குவரத்துத் துறையைப் பொறுத்தமட்டிலும், 3,000 புதிய பேருந்துகள் வழங்குவதாக நிதிநிலை அறிக்கையிலே சொல்லப்பட்டிருக்கின்றது. பல பேருந்துகள் புதிய வழித்தடங்களிலே



2012 ஏப்ரல் 3] [திரு. எம். ஆறுமுகம்]

இப்போது இயங்கிக் கொண்டிருக்கின்றன; பாராட்டுகள். 219 பேருந்துகள் நீதிமன்றங்களின் பிணையில் உள்ளவற்றை மீட்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதும் வரவேற்கக்கூடிய ஒன்று. நான் கேட்டுக்கொள்வதெல்லாம், இந்தப் பேருந்துகளால் விபத்து ஏற்பட்டு, அதனால் Workmen's Compensation சட்டத்தின்கீழே வழக்குத் தொடர்ந்து, அந்தப் பணத்தை கட்ட முடியாத சூழல் கடந்த காலத்திலே ஏற்பட்டு, அந்த வண்டிகளையெல்லாம் நீதிமன்றங்களிலே கொண்டுபோய் நிறுத்தினார்கள். எனவே, அப்படிப்பட்ட சூழல் ஏற்படாமல் தடுக்க, இந்த ஊர்திகளுக்கு எல்லாம் insurance செய்தால், ஏற்படக்கூடிய விபத்துகளுக்கான பணத்தை Workmen's Compensation சட்டத்தின்கீழே கட்டிவிடுவார்கள். அப்படிப்பட்ட ஆலோசனை ஏதாவது உண்டா என்று நான் அறிய விரும்புகிறேன்.

அதோடுமட்டுமல்லாமல், போக்குவரத்துக் கழகத்திலே பணி புரியக்கூடிய ஓட்டுநர்கள், நடத்துநர்கள் மற்றும் technical staff போன்றவர்களுக்கு கடந்த காலத்திலேயிருந்து ஓய்வு பெற்றவர்களுக்கு இதுவரை Gratuity, Pension கொடுக்காமல் இருந்து கொண்டிருக்கின்றார்கள். அவர்களுக்கு pension பணமும், Gratuity-பணிக் கொடையும் வழங்குவதற்கான நடவடிக்கையை அரசு எடுக்க வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்புபோடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. வி. செந்தில்பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபொழுது குறிப்பிட்டவாறு, 219 பேருந்துகள் நீதிமன்றங்களினுடைய வழக்குகளிலிருந்து விடுவிப்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் ஒரு முறை நிதியாக, நிதிகளை வழங்கியிருக்கின்றார்கள். 219 பேருந்துகள் மட்டுமல்ல, ஏற்கெனவே, 25 கோடி ரூபாய் மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் வழங்கி 194 பேருந்துகள் நீதிமன்றங்களின் வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றன. அதற்கடுத்து, மாண்புமிகு முதலமைச்சர் அம்மா அவர்கள் 21 கோடியே 19 இலட்சம் ரூபாய் வழங்கி, 424 பேருந்துகள் நீதிமன்றங்களிலிருந்து விடுவிக்கப்பட்டிருக்கின்றன. ஆகவே, இதுவரையில் மாண்புமிகு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், மூன்றாவது

[திரு. வி. செந்தில்பாலாஜி] [2012 ஏப்ரல் 3

*முறையாக முதலமைச்சராகப் பொறுப்பேற்று, 60 கோடி ரூபாய் நிதி வழங்கிய காரணத்தால், 837 பேருந்துகள் நீதிமன்ற வழக்குகளிலிருந்து விடுவிக்கப்பட்டு, (மேசையைத் தட்டும் ஒலி) இன்றைக்கு அந்தப் பேருந்துகள் மக்களுக்குச் சேவை ஆற்றிக் கொண்டிருக்கின்றன என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

*பிற்பகல் 2—00*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள். இன்னும் ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின் உற்பத்தியைப் பொறுத்தமட்டிலும், இன்றைக்குத் தமிழகத்திலே மின் உற்பத்தியைப் பெருக்குவதற்காக என்னென்ன திட்டங்கள் இருக்கின்றன என்ற விவரங்கள், இந்தச் சட்டமன்றப் பேரவையில், விதி 110—ன்கீழ் அளிக்கப்பட்ட அறிக்கை மூலமாக ஏற்கெனவே அறிவிக்கப்பட்டிருக்கின்றன. அதேபோல, இன்றைக்கும்கூட மின் கட்டண உயர்வு சம்பந்தமாகக் குறிப்பிட்டு, அதைக் குறைப்பதற்கான பல்வேறு அறிவிப்புகளைச் செய்திருக்கிறார்கள். அதற்காக இந்த நேரத்திலே நான் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆனால், ஒரேயொரு விஷயம். தமிழகத்திற்குத் தேவையான மின்சாரம் கிடைப்பதற்கான முறையில், மத்திய தொகுப்பிலிருந்து கிடைக்கும் வகையில், கூடங்குளத்தில் உற்பத்திச் செய்யப்படவிருக்கும் மின்சாரத்தை முழுமையாகப் பெறவும், கல்பாக்கம் அணு மின் நிலையத்தில் கிடைக்கக்கூடிய மின்சாரத்தை முழுமையாகப் பெறுவதற்கான முறையிலே அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமென நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். காற்றாலைகளினால் உற்பத்தியாகும் மின்சாரத்தை முழுமையாகப் பயன்படுத்த வேண்டும். அதற்கான முறையிலே திட்டங்கள் வகுக்கப்பட வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சுற்றுலாத் துறையைப் பொறுத்தமட்டிலும், ஆசிய வளர்ச்சி வங்கி உதவியுடன், ஒருங்கிணைந்த சுற்றுலா கட்டமைப்புத் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான கடன் ஒப்பந்தத்தில் கையெழுத்திட உள்ளதாகக் குறிப்பிட்டுள்ளீர்கள். வால்பாறை பகுதி என்பது ஒரு அற்புதமான பகுதி; மலை மற்றும் மலையைச் சார்ந்திருக்கக்கூடிய பகுதி அது. அந்தப் பகுதியின் கீழேயிருக்கக்கூடிய ஆழியாறு, சின்னக் கல்லாறு அணை, காடம்பாறை நீரேற்று மின் திட்டம், சோலையாறு அணை, இதுபோன்று அணைகள் நிரம்ப இருக்கக்கூடிய அந்தப் பகுதியில், வால்பாறையைச் சுற்றுலா மையமாக அறிவித்திட வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



2012 ஏப்ரல் 3] [திரு. எம். ஆறுமுகம்]

கல்வியைப் பொறுத்தமட்டிலும், நிறைய திட்டங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன. 14,552.82 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது. இந்த நேரத்திலே நமது மரியாதைக்குரிய அமைச்சர் அவர்களிடத்திலே ஒரு விளக்கம் கேட்க விரும்புகிறேன். நம்முடைய முன்னாள் முதல்வர், 'அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இடிக்கும் நாளில், நான் தீக்குளிப்பேன்' என்று கூறியிருக்கிறார். ஒரு முன்னாள் முதல்வரே இப்படிப்பட்ட ஒரு செய்தியை வெளியிட்டுள்ளார் என்று சொன்னால், அண்ணா நூலகத்தைப் பற்றி இருக்கக்கூடிய விவரங்களை மக்களுக்குத் தெரிவிக்க வேண்டும்; அரசு இதுகுறித்து தெளிவுபடுத்த வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வி, விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. என்.ஆர். சிவபதி:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் பேசுகின்றபோது, அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப்பற்றி ஒரு கருத்தைத் தெரிவித்திருக்கிறார். இந்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பொறுத்தவரையில், அது தொடர்பான வழக்கு நீதிமன்றத்திலே இருக்கிறது. நீதிமன்றத்தில் வழக்கிலே இருக்கும் பொருள் குறித்து இந்த மாமன்றத்தில் விவாதிப்பது மரபல்ல. இருந்தாலும், அவர் ஒரு ஆதங்கத்தைத் தெரிவித்திருக்கிறார். 'முன்னாள் முதல்வர் அவர்கள், அந்த அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இடித்தால் தீக்குளிப்பேன் என்று சொல்லியிருக்கிறார். அதில் இந்த அரசின் நிலைப்பாடு என்ன?' என்று கேட்டிருக்கிறார்.*

*இதுகுறித்து நான் இந்த நேரத்திலே ஒன்றைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பொறுத்தவரையில், அதனுடைய பரப்பளவு கிட்டத்தட்ட 3,48,450 சதுர அடி; சுமார் 8 ஏக்கர். ஆனால், அதில் கட்டப்பட்டிருக்கின்ற*

[திரு. என்.ஆர். சிவபதி] [2012 ஏப்ரல் 3

கட்டடங்களின் பரப்பளவு 41,700 சதுர அடி. மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள், இந்த நூலகத்தை இடிப்போம் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை. மாறாக, அங்கு கட்டப்பட்டிருக்கின்ற அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பொறுத்தவரையில், இப்போது அங்கு கட்டப்பட்டிருக்கின்ற கட்டடங்களால் எந்தவிதமான பயனும் இல்லை. எனவே, எதிர்காலத்திலே அந்தப் பகுதியிலே, இந்தியாவின் வருங்காலத் தூண்களாகத் திகழவிருக்கின்ற குழந்தைகளுக்காக மருத்துவமனை அமைக்க வேண்டுமென்று—அதிலேகூட Super Speciality Hospital for Children—குழந்தைகள் நல மருத்துவமனையை அமைக்க வேண்டுமென்ற ஒரு நிலையைத்தான் எடுத்துச் சொல்லியிருக்கிறாரேயொழிய, அந்த நூலகத்தை இடிப்போம் என்று எந்த இடத்திலும் சொல்லவில்லை என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

அதுமட்டுமல்ல; அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பொறுத்தவரையில், அதில் கட்டப்பட்டிருந்த கட்டடங்களின் பரப்பளவு 41,700 சதுர அடி. அவர்கள் இந்த நூலகத்தைக் கட்டுவதற்காக 178 கோடி ரூபாய் அளவிற்கு அரசிடம் நிருவாக ஒப்புதல் பெற்றிருக்கிறார்கள். ஆனால், அரசு ஒதுக்கியது 20 கோடி ரூபாய் மட்டுமே. மீதமுள்ள 148 கோடி ரூபாயை மற்ற மாவட்ட நூலகங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியிலிருந்து பெற்று, இந்த நூலகத்தைக் கட்டியிருக்கிறார்கள்.

பிற்பகல் 2–05

இதில் என்ன வேடிக்கை என்று சொன்னால், மற்ற மாவட்டங்களில் இருக்கக்கூடிய மாணவர்கள், இன்றைக்குப் படிப்பதற்கு நூல்கள் இல்லாமல் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதை இந்த நேரத்திலே நான் குறிப்பிடக் கடமைப்பட்டிருக்கிறேன். அதுமட்டுமல்ல; அண்ணா நூற்றாண்டு நூலகத்திற்கென வாங்கப்பட்ட நூல்களின் மொத்த மதிப்பு 89 கோடி ரூபாய். ஆனால், அந்த 89 கோடி ரூபாயில், 87 கோடி ரூபாய்க்கு ஆங்கில நூல்களை வாங்கியிருக்கிறார்கள். இதுதான், முன்னாள் முதல்வர் தமிழுக்கு ஆற்றிய பங்கு. ஆனால், மொத்தம் 55 இலட்சம் ரூபாய்க்கு மட்டும்தான் தமிழ் நூல்கள் வாங்கப்பட்டிருக்கின்றன என்பதை இந்த நேரத்திலே தெரியப்படுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.



2012 ஏப்ரல் 3] [திரு. என்.ஆர். சிவபதி]

இதையெல்லாம் இந்த நேரத்திலே சொல்வதற்குக் காரணம், அண்ணா நூற்றாண்டு நூலகத்தைப் பராமரிப்பதற்கு இன்றைக்கு மாதம் சுமார் 50 இலட்சம் ரூபாய் செலவாகிறது. இதையெல்லாம் கருத்திற்கொண்டுதான், மாண்புமிகு தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் நூலகத்தை அங்கிருந்து மாற்றுவதற்குத் திட்டமிட்டிருக்கிறார்கள். ஒரு Prime area-வில் இருக்கக்கூடிய 8 ஏக்கர் நிலம் முழுமையாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. எனவே, எதிர்காலத்தில் குழந்தைகளுக்கு அந்த இடம் நல்ல முறையிலே பயன்பட வேண்டுமென்ற முறையிலே, வரவிருக்கின்ற காலங்களில் அங்கு குழந்தைகள் நல மருத்துவமனை கட்டப்படும் என்று அறிவித்திருக்கிறார்கள். மேலும், இந்த நூலகத்தை D.P.I. வளாகத்திற்கு மாற்றி, அங்கு 'அறிவுசார் பூங்கா' என்ற ஒரு பெரிய Milestone ஆக அமையத்தக்க கட்டடத்தைக் கட்ட இருக்கிறார்கள். எனவே, இந்த நூலகம் D.P.I. வளாகத்திற்கு மாற்றியமைக்கப்படும் என்றுதான் சொல்லியிருக்கிறாரேயொழிய, அது இடிக்கப்படும் என்ற மாண்புமிகு முதல்வர் அம்மா அவர்கள் அறிவிக்கவில்லை என்பதை இந்த நேரத்திலே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதுமட்டுமல்ல; முன்னாள் முதல்வர் அவர்கள், மைனாரிட்டி தி.மு.க. ஆட்சியின் முதல்வர் அவர்கள், 'தீக்குளிப்பேன்' என்று இப்பொழுது சொல்லியிருக்கிறார். இங்கு பேசிய மாமன்ற உறுப்பினர்கள் எல்லாம், பகுத்தறிவுத் தந்தை பெரியாரின் வழி வந்தவர் அவர் என்று அவரைப்பற்றிச் சொல்லிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால், 'தீக்குளிப்பது பகுத்தறிவுக்கு உகந்ததல்ல' என்று பெரியாரே சொல்லியிருக்கிறார். அதை அவர் மறந்திருப்பார் என்று கருதுகிறேன்.

ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம் அவர்கள் கூறியதுபோல, அண்ணா நூற்றாண்டு நூலகத்தை இடிப்பதற்கு எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. நூலகம் வேறு இடத்திற்கு மாற்றப்படும் என்றுதான் சொல்லியிருக்கின்றோம் என்ற அந்த நிலைப்பாட்டைத் தெரிவித்து அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். ஆறுமுகம், ஒரு நிமிடத்தில் உரையை முடியுங்கள்.

**திரு. எம். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுகாதாரத்தைப் பொறுத்தமட்டிலும், மாவட்ட, வட்டங்களிலுள்ள ஆரம்ப, கிராமப்புற சுகாதார நிலையங்களில் பல பணியிடங்கள்

*[திரு. எம். ஆறுமுகம்]* [2012 ஏப்ரல் 3

காலியாகவுள்ளன. மருத்துவர், செவிலியர் பணியிடங்கள் நிரப்பப்படாமல் இருக்கின்றன. அவர்களுக்குக் குடியிருப்பு வசதிகளைச் செய்து கொடுப்பதற்கான நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

தொழிலாளர் நலனைப் பொறுத்தவரையில், தொழிலாளர் நல வாரியங்கள் அனைத்தும் செயல்பட வேண்டும். தொழிலாளர்களுக்கென்று இருக்கக்கூடிய Labour Welfare Board, Plantation Welfare Board போன்ற வாரியங்களில் உள்ள காலிப் பணியிடங்களை நிரப்புவதற்கான நடவடிக்கைகளை அரசு எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொண்டு, அமர்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(4–4–2012)* புதன்கிழமை காலை *10–00* மணிக்குக் கூடும். வணக்கம்.

*பின்னர், பேரவை பிற்பகல் 2–08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.*

## 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

### (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

*13.* (i) *8–8–2007* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II*(1)*/வவப/*52*(a)/*2007* ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்தும்; (ii) *4–1–2007* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II*(1)*/வவப/(b)/*2007* ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்தும்; (iii) *10–6–2009*ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II, பிரிவு–*1*–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II*(1)*/வவப/*13*/*2009* ஆம் எண் அறிவிக்கையில் மாற்றம் செய்தது குறித்தும்; மற்றும் (iv) *21–3–2003* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்–II, பிரிவு–1–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II*(1)*/வவ/*(14(*a*-2)/2003* ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் *11–7–2011* ஆம் நாளிட்ட *75*–ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*



2012 ஏப்ரல் 3]

*14.* (i) யாதொரு வணிகர், திருவாளர்கள் பாரத் சன்சார் நிகம் லிமிடெட், விதேஷ் சன்சார் நிகம் லிமிடெட் மற்றும் மகாநகர் டெலிபோன் நிகம் லிமிடெட் ஆகியோருக்கு விற்பனை செய்யப்படும் அறிவிக்கை–I–ல் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்களின் மீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (ii) அறிவிக்கை–II–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, முதலாவது விவர அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள யாதொரு பொருட்களை இந்திய இரயில்வே துறை மற்றும் தமிழ்நாட்டிலுள்ள ஏனைய மாநில அரசுகளின் துறைகள் உட்பட மாநில மற்றும் மத்திய அரசுத் துறைகளுக்கு விற்பனை செய்வதற்குரிய வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், அறிவிக்கை–III–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் நீங்கலான ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகர், அறிவிக்கை–IV–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, அறிவிக்கை–IV–ல் குறிப்பிட்டுள்ள நிறுவனங்களுடன் ஒப்பந்தம் செய்து கொண்ட ஒப்பந்ததாரர்களால் ஆயத்த அடிப்படையிலான திட்டங்களில் பயன்படுத்துவதற்கான ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; மற்றும் (v) யாதொரு வணிகர், அறிவிக்கை–V–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் நீங்கலான யாதொரு பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் *11–7–2011* ஆம் நாளிட்ட *77*ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*15.* (i) யாதொரு வணிகர், அறிவிக்கை–I–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (ii) யாதொரு வணிகர், அறிவிக்கை–II–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, உயர் இரக மண்ணெண்ணெய் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (iii) யாதொரு வணிகர், அறிவிக்கை–III–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (iv) யாதொரு வணிகர், அறிவிக்கை–IV–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (v) யாதொரு

[2012 ஏப்ரல் 3

வணிகர், அறிவிக்கை–V–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, கட்டுமான நோக்கங்களுக்காகப் பயன்படுத்தப்படும் பொருட்களைப் பயன்படுத்துவதற்குரிய உரிமை குறித்து செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (vi) மோட்டார் வண்டிகளின் விற்பனையாளர் அல்லாத யாதொரு வணிகர், அறிவிக்கை–VI–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு மாநிலத்திற்குள் பதிவு செய்யப்பட்டுள்ள மோட்டார் வண்டிகளின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (vii) யாதொரு வணிகர், அறிவிக்கை–VII–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, தமிழ்நாடு மாநிலத்தில் மின் அனுப்புகை ஏற்பாட்டு முறையில் பயன்படுத்துவதற்காக, சென்னை திருவாளர்கள் இந்திய மின் கட்டமைப்புக் கழகத்திற்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் நீங்கலாக செய்யப்படும் யாதொரு பொருள் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (viii) யாதொரு வணிகர், வணிகப் பெயரில் விற்பனை செய்யப்பட்ட பன்கள், ரஸ்குகள், பிஸ்கெட்டுகள் மற்றும் கேக்குகள் உட்பட பேக்கரி பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (ix) யாதொரு வணிகர், அறிவிக்கை–IX–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; (x) யாதொரு வணிகர், அறிவிக்கை–X–ல் குறிப்பிட்டுள்ள பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; மற்றும் (xi) உதகமண்டலம், திருவாளர்கள் இந்துஸ்தான் போட்டோ பிலிம் தயாரிப்பு நிறுவனம் செய்யும் மருத்துவ எக்ஸ்–கதிர் படச்சுருள் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் *11–7–2011 ஆம் நாளிட்ட 78ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். [2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*16. 11–7–2011* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–*1*–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II*(1)*/வவப/*12* (R-*27*)/*2011* ஆம் எண் அறிவிக்கையை இரத்து செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் *12–7–2011* ஆம் நாளிட்ட *81* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*



2012 ஏப்ரல் 3]

*17.* (i) யாதொரு வணிகர், அறிவிக்கை–I–ல் குறிப்பிட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு, மாநில மற்றும் மத்திய அரசுத் துறைகள், இந்திய இரயில்வே உள்பட மற்றும் தமிழ்நாட்டில் உள்ள பிற மாநிலத் துறைகளுக்கு பெட்ரோல், டீசல் மற்றும் சிமென்ட் தவிர ஏனைய பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரி வீதத்தைக் குறைத்தது குறித்தும்; மற்றும் (ii) *11–7–2011* ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம்–II, பிரிவு–*1*–ல், வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II*(1)*/வவப/*12* (R-*20*)/*2011* ஆம் எண் அறிவிக்கைக்கு மாற்றம் செய்தது குறித்தும்; வணிக வரி மற்றும் பதிவுத் (பி2) துறையின் *19–7–2011* ஆம் நாளிட்ட *86* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கைகள். *[2006 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86 (2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*18. 1995* ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் (உறுப்பினர்களின் எண்ணிக்கையினை நிர்ணயித்தல் மற்றும் வார்டுகள் பிரித்தல்) விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் (பிஆர்–II) துறையின் *14–9–2011* ஆம் நாளிட்ட *63* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. *[1994 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஊராட்சிகள் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 21/1994) 262 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*19.* வணிக வரி மற்றும் பதிவுத் (சி2) துறையின் *13–7–2011* ஆம் நாளிட்ட *83* ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ள நிபந்தனைக்குட்பட்டு, ஆசிய வளர்ச்சி வங்கியின் பணியாளர்கள் தமிழ்நாட்டில் உள்ள ஓட்டல்களில் செலுத்தத்தக்க ஆடம்பர வரியை செலுத்துவதிலிருந்து விலக்களித்தது குறித்து. *[1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21 (3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].*

*20. 2010–2011* ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழகத்தின் நாற்பதாவது ஆண்டறிக்கை. *[1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின் கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது]. (தமிழ், ஆங்கிலம்)*

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

–ஏதுமில்லை–